ஸாயுஜ்ய ஸாதகம் ஸம்ஹ்ருஷ்டா: ஸ்நாநம் சக்ருர்ய
தாவிதி ॥ ௧௭

ஸ்கந்தபுஷ்கரிணீ த்வேஷா விக்யாதா புவநத்ரயே ।
ஸர்வம் ஸர்வஸ்ய லோகஸ்ய ஷண்முகோ ராஜதீர்த்தரா: ॥ ௧௮

த்ரிஸ்வதந்த்ரா முநீந்த்ராஸ்தே ஶரண்யம் ஸ்வாமிநம் முநிபுங்க
வா: ।
காமேப்ஸவ: ஸமுத்ஸ்ருஜ்ய ஸம்யக் ஸிஷேவிரே ॥ ௧௯

ஆராதநாங்க ஹோமகண்டம் ப்ராகாரம் மண்டபம் பரம் ।
ப்ராஸாதமேதத் ஸர்வம் ச மஹர்ஷய ஆதேநிரே ॥ ௨௦
நவக்ஷேத்ரே ஸதா ஸ்நாத்வா நிர்விஷ்டாஸ்ஸர்வதோஷ
தஶ ।

[illegible]
௨௧

இப்படி ஸ்கந்தப் பெருமானால் உண்டாக்கப்பட்டதனால் மூவுலகங்களிலும் ஸ்கந்த புஷ்கரிணீ என்று பெயர் பெற்ற தடாகத்தைப் பார்த்து திரிஸ்வதந்திர முனிகள் நன்றுநன்று என மகிழ்ந்து அவர்களும் விதிப்படி ஸ்நாநஞ் செய்தார்கள். இந்தப் பிரகாரம் திவ்ய தீர்த்தத்தை நிர்மித்தபின் அந்த ஜகத்குருவான ஷண்முகன் த்ரிஸ்வதந்த்ரமுனிவர்களைப்பார்த்து, ஓ முனிஶ்ரேஷ்டர்களே ! கேளுங்கள். புகழ்பெற்ற கங்கை, ஸிந்து, காவேரி இந்நதிகளின் ஸங்கமத்திலும் துவாரகை, கோகர்ண ராமஸேது பத்மநாபக்ஷேத்திரத்தில் சங்கதீர்த்தம், கந்தமாதனபர்வதத்தில்வதனாம்பதீர்த்தம், நவக்ரகதீர்த்தம் அனந்த ஶயனத்துக்கு வடபாகத்தில் (ஜனார்தனம் என்று பெயர் வழங்கும்) புருஷோத்தம தீர்த்தம் இவைகளில் எப்பொழுதும் ஸ்நாநத்திற்கு விதியிருப்பதால் நீங்களும் மற்றவர்களும் இந்த வதனாம்ப தீர்த்தத்தில் ஸதா ஸ்நானம் செய்யுங்கள். (என்றருளினார்) 21

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
௨௩

[illegible]
[illegible]
[illegible]
௨௪

ஓ பரமானந்தம் பெற்ற த்ரிஸ்வதந்த்ர ப்ராம்மணர்களே ! போகமோக்ஷங்களைத் தருவதாகிய வொரு ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன். முன்னொருகல்ப்பத்தில் இந்த ஸிந்துவில் ரகுவம்ஶ

ஸிகாமணியாகிய ஸ்ரீராமன் ஸீதையைத் திருடிக்கொண்டுபோன ராவணனை வதைக்க எல்லா பாபங்களையும் தொலைக்கும் ஸேதுபந்தம் செய்தார். இப்படியே மூன்றுகடவை கல்பங்கள் தோறும் ஸேதுபந்தம் செய்தார். இந்த ஸமுத்திரம் எல்லாக்காலங்களிலும் ஸ்நானம் செய்ய யோக்கியமே. 24½.

ரஹஸ்யமந்யத்வக்ஷ்யாமி ஶ்ருணுத்வம் முநிபுங்கவா: || 25
புரா க்ருதயுகே விப்ரா ... ஸாக ...: |
ஶாஶ்வதீஶ்ச ஸமாஸ்தப்தம் ... தப உக்ரம் ...: || 26
தஸ்ய ப்ரஸாதாத் காலே து க்ருத: கருணயா மயா |
மம வாஸாய ஸ்தானம் பவிஷ்யஸி மஹாகல்பே | 27
த்வமேவ ... பவிஷ்யஸி மஹோன்னத: |
மம வாஸாய தாவத்த்வம் த்யாயன் நியமஸ்தித: | 28
மம த்யானபரோ ... தபஸ்தேபே ... யரன் || 28½

ஓ முனிவர்களே! இன்னும் ஒரு ரஹஸ்யம் சொல்லுகிறேன் கேளுங்கள். முன் காலத்தில் கந்தமாதன பர்வதம் பர்வதராஜனாகிய மேருவுடன் கலகம் தொடர்ந்து தனக்கு மேன்மை கிடைக்க வேணுமென்று நம்மை உத்தேசித்து தவம்புரிய அத்தவத்தின் மகிமையினால் நாமும் மனமிரங்கி ஓ கந்தமாதனமே! நீ, வரும் பிரம்மகல்பத்தில் நமக்கு வஸிக்குமிடமாகக்கடவை. அப்பொழுது எல்லோரும் உன்னையே மஹோன்னதமான மேருவாகக்கொண்டாடுவார்கள். நாம் வஸிக்கும் வரைக்கும் நம்மை தியானிக்க வேணுமென்று நாம் உறுதி செய்து கொடுத்தோம். அப்படியே என்னைத் தாங்கிக்கொண்டு தவம்புரிந்தது. 28½.

அந்யச்ச ரஹஸ்யம் வக்ஷ்யாமி ... ஶ்ருணுதாம் ||
... யத்ர ... வஸம் ... ஹர: |
... க்ருதவான் ... ஸ: | 30

பிராம்மணர்களே! கேட்பவர்கள் பாபங்களை யகற்றும் இன்னொரு ரஹஸ்யம் சொல்லுகிறேன் கேளுங்கள். முன்னொரு காலத்தில் பிர்ம்மா இறுமாப்புற்றிருந்ததை யறிந்து காலாந்தகனாகிய பரமசிவன் பிரம்மனுடைய ஐந்தாவது தலையைக் கிள்ளி யெறிந்துவிட்டு அவரது கர்வத்தையடக்கினாரல்லவா? 30

கதாசித்தத விஶ்வாத்மா ஷடக்ஷரம் மாமகம் மநும் |
[illegible] ஹரே: ப்ராப்ய ப்ரஹ்மா மமாத்ர
தபஶ்சசார ||௩௧

தஸ்ய [illegible] ஸாந்நித்யம் க்ருதவாநஹம் |
[illegible] கிம் தவ [illegible] ||

ஏவம் [illegible] ||
[illegible] ||௩௨

பின்னர் ப்ரம்மன் ஆறு அக்ஷரங்களடங்கிய என் மந்திரத்தை விஷ்ணுவிடமிருந்து விரதத்துடன் கல்பப்பிரகாரம் பெற்றுக்கொண்டு இவ்விடத்தில் என்னைக் குறித்து தவம் செய்ய, நானும் அவரிஷ்டத்தைக் கொடுக்க ஸான்னித்யம் செய்து, ஓ பிரம்மனே! உமது குறை யாது? உமக்கு வேண்டியவற்றை அளிக்கிறேன் என்று வரமளித்தவுடன் ஸந்தோஷத்தால் கண்ணைத்துறந்து தண்டம்போல் விழுந்து நமஸ்கரித்து ஸ்துதிக்கத் தொடங்கினார். 33

ப்ரஹ்மா —

[illegible]
ஶ்ரீ [illegible] |
[illegible]
[illegible] || ௩௪

ஶ்ரீ [illegible]
[illegible] ||

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ௩௬

ப்ரம்மா ஸ்துதித்தல்:—

ஸகலதேவர்களாலும் மனோவாக்காயங்களினால் வணங்கப் பெற்றவரும், மகாபலசாலியும், வல்லி தேவசேனையென்ற இரண்டு சக்திகளுடன் கலந்தவரும், ஸூர்யனையொத்த பிரதாபத்தை யடைந்தவரும், சந்தனக்குழம்பு முதலிய வாஸனைத் திரவியங்களின் பரிமளம் வீச, 1 ஸ்ருங்காராதி நவரஸங்களின் தத்வமாக நவரத்னகசிதமான திவ்ய கிரீடம் தரித்து, தரிசுகூஷபம் செய்யப் பிரகாசிப்பவரும். அநேகவித சக்திமானாகிய தங்கள் ஒரு அணுமாத்திர சக்தியால் திருவிளையாட்டாக ஆக்கியளித்தழிக்கின்ற முத்தொழில்களையும் செய்விப்பவரும், அன்பர்க்கின்பத்தை யளிக்கும் மகாப்ரபுவாகிய பரமசிவத்தின் திருவருள் பெற்றவரும், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யென்ற மூவ்வகை யாசைகளொழிந்து நிகரிலாமகான்களுடைய நிர்மல ஞானமாகின்ற ஸூரியகிரணங்களால் மலர்ந்த இருதய கமலத்தில் சூரியன்போல அந்த மகா யோகிகளால் தியானம் செய்யப்பட்ட ஆதி குருவுமாகிய தேவரீரை சரணமடைகின்றேன். 36

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௩௭

1 ஸ்ருங்காரம், வீரம், ஸோகம், அற்புதம், பெருநகை, பயம், வெறுப்பு, ரவுத்தரம், ஸாந்தம்.

அப்பு, பிருதிவி, ஆகாயம், தேஜஸ், வாயு என்ற ஐந்து கருவிகளால் படைக்கப்பட்ட இந்த பிரமாண்டமானது கோடிக்கணக்காயிருப்பினும் அவையும், தலாலனைப்போல் அண்டங்களை படைக்கின்றவரானும், உன் திருவடித்தாமரைக்கடியில் விளங்கும் மணிகள் போலாகும். 37

யத்ப்ராக ஸம்வநநவஶிக்ஷணவஶீக்ருதாஹி
வாஶீர்வரீகநகஸம்கஜரத்நபீடா ।
தஸ்யாஃ ஸ்துதிம் ஸகலாகமபூஜிதாம் ஸமயா
கா வா ஹி கோ ஹி ரசிதும் ஸவநே க்ஷமீயாத் ॥

யாதொரு குகபகவானை த்யானாகிற மாலைப் பொடியால் வசீகரித்து ஸரஸ்வதியானவள் ஸகல ஆகமங்களாலும் பூஜித்தும் ஸ்துதித்தும் நவரத்னங்களிழைத்த பொற்றாமரைகளில் வீற்றிருக்கப் பெற்றாளோ, அப்பேர்ப்பட்ட உம்மை வழிபட உலகில் வல்லமை பொருந்தியவர் யாரிருக்கிறார்கள் 38

யஸ்ய ஸ்ம்ருதிர்விஜயதே ஜகதாம் த்ரயாணாம்
ஸௌவர்ணவ்ருஷ்டிவிஷயே தநதாவஷீ ।
வித்யாஸு வாணீ ஸததம் தேவஸாரம்யஜ்ஞா:
ஸா ப்ரஹ்மஸம்பதி விஷயே கிம் தேஶிகோக்தி: ॥ ௩௯

யாதொரு பகவான் விஷயமான சிந்தையானது மூவுலகுக்கு மளவற்ற செல்வங்களைத் தருவதில் குபேரனுடைய பொக்ஷமாயிருக்குமோ, கல்வியை அளிப்பதில் ஸரஸ்வதிக்கு நிகராகுமோ, அபரோக்ஷஞானம் தருவதற்கு குருவின் உபதேசமாகுமோ. 39

யத்ப்ராக்ஷோத் க்ஷணிபோதமதா க்ஷமாஞ்சா:
ஸம்ஸாரஸாகரஸாரக்ஷமாயஸாரஸா ।
ஆஶாநிஶாகரஸமுத்ஸ்ருஜ்ஞபோதகாரம்
கல்பஞ்சி வஸ்துவக்ஷா க்ருக்ஷரத்நஸமகஸ்ய ॥ ௪௦

யாதொரு உமதுதியானமாகிற ரத்னக்கப்பலைச்சார்ந்த பெரியோர்கள் எல்லையற்றதும் ஆழமுள்ளதுமாகிய ஆசை என்னும்

சந்திரனுபத்தால் கோபமோஹாதிகளாகும் அலைமோதிக் கொண்டிருக்கும் தாண்டமுடியாத ஸம்ஸாரஸமுத்திரத்தை கன்றின் குளம்படிபோல் தாண்டுகிறார்களோ. 40

ஶம்போர்குரும் ஶுபவீராஸநஸ்தம் ச
விதுஶ்ரீகாந்திம் த்ருதவாமகரம் ஸவ்யஜாநௌ |
வாமே ச ஜாநுநி சின்முத்ரகரம் மந்மநோஜ்ஞம்
யஸ்ய ஸ்மரந்தி ஜகதாம் குரவோ பவந்தி || ௪௧

யத்த்யாநஸாந்த்ரரஸஸாரஸுதாஸமுத்ர
மக்நாஸ்ஸதாம் குலவரா விஹதோருமோஹா: |
ஆப்ரஹ்மலோகவிபவம் ஸகலம் ஹி ஸத்ய
துச்சம் த்யஜந்தி துலிதவ்யஸநேஷிகாவத் ||

ஶ்ரேயோவிதாயிஜநநீம் தவ ஸத்க்ருபாம்
ஸௌஹார்த்ககல்பலதிகாம் பரிசர்யயைத |
அந்யத்ர ஸக்த ஹ்ருதி பரிப்லுதஹாரிதஸ்து
ஹாலாஹலம் கவளயந்தி து ஜீவிதாஶா: || ௪௩

ஶம்புவுக்கும் குருவாகவும் வீராஸனத்திலிருந்து சந்த்ரனைப்போல் மிகவும் சோபையுற்று வலதுகையால் சின்முத்ரை தரித்து இடது கையை இடது முழந்தாளில் வைத்துக்கொண்டிருக்கிறவராகவும் யாதொரு ஸுப்ரம்மண்யரை த்யானம் செய்பவர்கள் லோககுருவாகிறார்களோ யாதொரு பகவானுடைய த்யானமாகிய அமிருதஸாகரத்தில் மூழ்கின பெரியோர்கள் பிர்ம்மலோகம் வரையிலும் உள்ள ஐஶ்வரியங்களை துச்சமாக நினைத்துவிடுவார்களோ அப்பேர்ப்பட்ட ஸுப்ரம்மண்யரே! உம்மை எப்பொழுதும் ஶரணமடைகின்றேன். ஸகல புருஷார்த்தங்களை நல்கும் கற்பகக்கொடியாகிய வல்லீமணாளனே! உம்மை ஸார்வகாலமும் சிந்தியாது வேறுவிஷயங்களில் வருத்தமுற்று ஜீவிக்கின்ற மானிடர்கள் தன் கைகளிலிருக்கும் அமிருதத்தை விட்டு பிராணனை கெடுக்கும் நஞ்சைத் தின்பவர்களுக்கொப்பாகிறார்கள். 43

ஸ்வாமிந்! ஷடாநந! விபோ! வல்லீரமண! ஶாங்கரே!

கருணாம்ருதவாராஶே! காங்க்ஷிதார்த்தப்ரதாயக! ப்ரபோ ॥ ௪௪
ரக்ஷ மாம் ரக்ஷ ரக்ஷேஶ ரக்ஷ ரக்ஷ க்ருபாநிதே ॥

ஓ ஸ்வாமி! ஆறுமுகனே! பிரபுவே! வல்லீமணாளா! பரமபிவத்தின் திருக்குமாரனே! கருணையாகும் அமிருதத்திற்கிருப்பிடமாகிய கடலே! வேண்டியவற்றை யளிப்பவரே! லோகரக்ஷகா! என்னைக்காப்பாற்றும், காப்பாற்றும். ஓ ஈசனே! என்னைக்காப்பாற்றும் 44½

இதி ப்ரஹ்மஸ்துதம் யே வை வக்ஷ்யந்தி தவ ஸந்நிதௌ ॥
தே வை ஸகலஸௌபாக்யஶாலிந ஸ்யுர்ந ஸம்ஶய: ।

இதி ஸ்துத்வா விதிர்தேவம் ஸ்துத்வா யாசதே தத: ॥
பாதுமாம் ஸ்வாமிந்! ஶங்கரேண நிராக்ருதம் ।
திரஸ்க்ருதம் மஹாஸேந! கல்யாணஸுந்தர! ।

இவ்விதம் பிரம்மனால் ஸ்துதிக்கப்பட்ட ஸ்துதியை நமது ஸந்நிதியில் யார்படிக்கிறார்களோ அவர்கள் ஸர்வமங்களியில் ஸகல ஸௌபாக்கியங்களையும் பெறுகிறார்கள். இந்தப்படி பிரம்மன் ஸ்துதித்து தெரிவித்ததாவது, ஓ ஸ்வாமி! என் ஐந்தாவது தலை சங்கரனால் கிள்ளி யெறியப்பட்டது. ஓ கல்யாணமூர்த்தியே! மகாஸேன! அதை திருப்பக் கொடுக்கவேண்டுமென்று நமஸ்கரிக்கிறேன். 47

விதேர்வசநமேதச்ச ஶ்ருத்வா ஜ்ஞாத்வா தேவஸ்ததீம் ஸ்வ
ஹ்ருதி ।
உவாச ப்ரஹ்ம யதாந்யாயம் ஷண்முகஸ் ஸ்மிதபூர்வகம் ॥
உத்தரார்த்தம் வாணீஶம் பஞ்சாநநம்ஹவிஜயே ।
ஸ்ரீஹாயகாவாஸிநாம் ஜயஸ்காந்தஸ்ய ப்ருதுகதே ॥ ௪௫
ஸம்ஜயாபேந ஸ்தோத்ரேண ஶிவாநிஸ்தோத்ரத: ।
இதி ப்ரோக்தோ ஜய ஸ்ரீஹா தயா ஸாஹஸ்ரவசீ
ஜயஸ் ॥ ௫௰

[illegible] ||௫௩

[illegible] ||௫௪

இப்படி பிரம்மன் விருப்பத்தைக் கேட்டு தைவகதியையும் உணர்ந்து பிரணவஸஹிதமான பஞ்சாக்ஷரத்தை விதிப்படி உபதேசித்து பின்னும் அந்த பிரம்மனது சிரஸை கிடைப்பதற்கு கட்டளையிட்டதாவது ஓ பிரம்மனே! என் பிராணநாயகிக்கு வாமளித்த சம்பு இவ்விடத்திலேயே ஸான்னித்யம் செய்வதால் அவரை இம்மந்திரத்தால் இரவும் பகலும் சோர்பலின்றி ஆராதிக்கவேண்டுமென்ன, அதின்படி பரமசிவனை ஆராதிக்க, கேட்டதைக் கொடுக்கும் அந்த சம்புவும் பிரம்மன் தவத்தைப் பார்த்து (1000) தேவ யுகம் கழிந்ததும் அநேககோடி மன்மதனைப்போல் ஸுந்தரமூர்த்தியாய் ஸான்னித்யம் செய்து பிரம்மனே! நீர் தவத்தினால் மிகவும் நொந்திருக்கிறீர். உமக்கு என்ன வரம் வேண்டுமோ; அதைக் கேளும். நானே தருகிறேன் என்று சொல்லி அவ்விடம் நிற்க, பிரம்மனும் பரமசிவத்தின் வாக்காகும் அமிருதத்தைப் பானம் செய்து மரம்போல விழுந்து நமஸ்கரித்து பரமசிவனை ஸ்துதிக்கிறார். 51½

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 —

[illegible] | ௫௫

[illegible] |

[illegible] | ௫௬

[illegible] |

காலோபாய கல்யாணகோடிகாலகூடவிஷக்ரஹ ॥ ௫௭
ஜ்வலத்பிங்கஜடாபாராயைவ ஜகந்நாதாய தே நம: ।
காமதேனு: கல்பதரு: ஸ்ரீசிந்தாமணிர்ப்பவதி: ॥ ௫அ
ஸர்வாகமாதிபிர்ஜ்ஞேய: ஜகந்நாதாய தே நம: ।
ஹஸ்தம் ஸர்ப்பசந்த்ராய மணிபாண்டுரகாத்ரஹிதே ॥
வ்யாக்ரசர்மாம்பரதாரிணே ஜகந்நாதாய தே நம: ।
இதி ஸ்துத்வா ஜகந்நாதம் பங்கஜோத்பவஸம்ஸ்தவை: ॥
ப்ரார்த்தயாமாஸ யத்சித்தே ஸ்வீயம் தத்த்வம்ஹரம் ப்ரதி ॥ ௫௯

பிரம்மா சொல்வது:—

அர்த்த நாரீச்வரரும் பரமானந்த மூர்த்தியும் அபீஷ்டத்தை கொடுப்பவரும் ஸகலலோகரக்ஷகருமாகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன். காலகூட விஷபானம் செய்ததினால் பிரகாசிக்கும் நீலகண்டத்தையுடையவரே! அமிருதக்கடலே! திரிபுரத்தை ஸம்ஹாரம் செய்தவரே! லோகநாத! உம்மை நமஸ்கரிக்கிறேன். மன்மதனை எரித்தவரே! சந்திரசேகர! அர்த்தநாரீச்வர! ஸ்வர்ணம்போன்ற ஜடையை தரித்தவரே உம்மைநமஸ்கரிக்கின்றேன். தியானிப்போருக்கு காமதேனுவும், கற்பகவிருக்ஷமும், சிந்தாமணியும் ஆகி விளங்குகிறீர் என்று ஸதாகமங்களில் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருளே! உம்மை நமஸ்கரிக்கின்றேன். விபூதியினால் வெளுத்த திருமேனியுடையவரே! ஸர்ப்பம், சந்திரன் இவர்களை ஆபரணமாகவும், புலித்தோலை வஸ்திரமாகவும், தரித்தவரே! லோகநாத! உம்மை நமஸ்கரிக்கின்றேன் என்று பிரம்மன் ரத்னம் போன்ற ஐந்து சுலோகங்களால் ஸ்துதித்து தன் கோரிக்கையை தெரிவிக்கிறார். 60½

அபராதேன மே ஸ்வாமிந் சிரச்சேதோ க்ருதஸ்த்வயா ॥
பிக்ஷிதோஹம் மஹாதேவ! த்வய: காங்க்ஷிதம் விஹோ! ॥ ௬௧

ஓ ஸ்வாமி! மஹாதேவ! என் குற்றத்தினால் என் சிரஸை வெட்டி எறிந்தீர். அதனால் என் கர்வம் நீங்கிற்று. ஆனால் அந்த சிரஸை திரும்ப கிடைக்கவேணுமென்று பிரார்த்தித்தார். 61½

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥

இப்படி பிரம்மனால் பிரார்த்திக்கப்பட்ட பரமசிவன் ஓ பிரம்மனே! தவம் பூஜை தியானம் இவைகளைச் செய்வோருக்கு இஷ்டம் கைகூடும் ஸம்பிரமமன்பர் ஸன்னிதியிலிருக்கும் ஸமுத்திரத்தில் ஐந்து நாள் ஸ்நானம் செய்யும். ஐந்தாவது முகம் கிடைக்கும். அடுத்த கல்பத்தில் என் ஸாரூபத்தையும் தருகிறேன் அப்பொழுது ஐந்து முகனாக ஆவாய் என்றார். 61½

[illegible] ॥

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ராவணனை வதம் செய்வதற்காக, என்னை ஆராதித்து ராமனால் இந்த ஸேதுவானது மூன்றுதடவை கட்டப்பட்டு, இந்த ஆதிஸேது நித்யம் ஸ்நானம் செய்ய போக்யமும் புண்யங்களைக் கொடுப்பதும் ஸகல தீர்த்தங்களும் கொடுக்கும் பலனை தருவதும் ஆகியது, என்று பிரம்மனைப் பார்த்து பரமசிவன் கட்டளையிட்டு இப்பொழுதும் அவரை ஆராதிப்பவர்களுக்கு வரம் கொடுக்க இவ்விடத்தில் தேவர்களால் சூழப்பட்டு ஸான்னித்யம் செய்து கொண்டிருக்கிறார் என்பதை உங்களுக்கு உரைத்தோம். 67

[illegible]

வாராம் கலிங்கராஜஸ்ய கன்யா கனகமாலினீ ॥ ௬௮
அகஸ்த்யாஶ்ரமே ஹயக்ரீவம் த்ருஷ்ட்வா ஶஶிமுகீ ததா |
அவஹாஸம் க்ருதவதீ தத்க்ஷணாத் ஹயவக்த்ரோ முனி: ॥ ௬௯
ஹயாஸ்யா ஸுந்தரீ கன்யே ஹ்யன்யஜன்மனி நிஶ்சயம் ॥

இன்னும் அதிசயிக்கத் தகுந்த ஒரு தீர்த்த மாகாத்மியம் இருப்பதையும் சொல்லுகிறேன். முன் கலிங்கராஜன் பெண் கன கமாலதியென்பவள் புத்தியீனத்தால் அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் ஹயக்ரீவமூர்த்தியைப் பார்த்து அவமதிக்க, அந்த ஹயக்ரீவ மூர்த்தியும், பெண்ணே! நீ மறுபிறப்பில் நிச்சயமாக குதிரை முகத்தை யுடையவளாகக்கடவை என்று சபித்தார் 69½

ப்ராயஶ்சித்தம் ச தாம் த்ருஷ்ட்வா ப்ரார்த்தயந்தீம் ச யாசனாத் | ௭௦
ப்ரஸன்னோ வசனம் ப்ராஹ ஹயக்ரீவோ ஷண்முக: |
பரிஹ்ருதம் தே யத்பாபம் வக்த்ரநாம தீர்த்தகே ஸ்வயா ॥
ததா ஸம்ஸ்னாஸி ஹயாஸ்யா முக்தஶாபா பவிஷ்யஸி | ௭௧

இப்படி அறியாமையால் செய்து விட்டதை மன்னித்தல் வேண்டுமெனப் பிரார்த்திக்கும் பெண்ணைப் பார்த்து, அந்த ஹயக்ரீவர் ஓ பெண்ணே! உனக்கு ஏற்பட்ட பாபத்தை யகற்றுகிறேன். அதாவது பிரம்மனுக்கு முகம் உண்டாவதற்கு காரணமாகிய இந்த ஸமுத்திரத்திற்கு வதனாம்பதீர்த்தம் என்று பெயர் கிடைத்திருப்பதால் ஸுப்ரம்மண்யர் ஸன்னிதியில் விளங்குமந்த தீர்த்தத்தில நீ எப்பொழுது ஸ்நானம் செய்வையோ அப்பொழுது உனக்கு நேர்ந்த பாபமகலும்; உனதிருப்பிடம் செல்லென்று திருவாக்களித்தனர். 71½

ததஸ்ஸா கன்யகா ஜாதா உக்ரஸேனஸ்ய ராஜனி ॥
ஸம்வ்ருத்தா ஸம்ஸாரே கன்யா வித்யா ஹயமுகீ ஸதீ |
ஜ்ஞாத்வா ஸர்வம் ஸ்வவ்ருத்தாந்தம் ஸம்ஸ்ருதா வாணீ ப்ராஹ்மணீ
மீணீ | ௭௨
ஸம்ப்ராப்ய ஸமஸ்ததீர்த்தம் ஸ்நாத்வா கன்யா கரோதனம் |

தத்வாக்யம் விஸ்மயம் யாதி ஸௌந்தரீ ஜாயதே த்ருவம் ||
ஆகாஶவாணீவசநம் இதி ராஜா ப்ரஹ்ருஷ்டதீ:|
ஸம்வர்த்ய பாலயித்வா ச யாவத்ப்ராப்தோசிதாம் தத: ||௭௫
ஶைவஸ்வஸஹஸ்ரஜநம் தீர்த்தயாத்ராய ஸேநாபதிம் |
ப்ரேஷயாமாஸ ராஜேந்த்ர: கந்யாம் ஸ்வாம் து பராயணாம் ||
ஸா கந்யா தாம்ரபர்ண்யாதிஸர்வஸரஸ்ஸு க்ருச்ச்ரத:
பாபநாஶம் ஸமாரப்ய ஸ்நாத்வா தீர்த்தேஷு யோகதோ யதா
ஸ்நாத்வா தத்வா ச ஸம்ஸேவ்ய ஹோமயித்வா த்விஜ
ந்மந: |
ஆஸம்வத்ஸரம் இயாய ஏவம் நாராயணஸந்நிதிம் || ௭௮
ஸிந்தோர் நதீரவாஸ்தத: ஸர்வதீர்த்தமயே ஶுபே |
ஸங்கல்ப்ய வஹ்நிதீர்த்தே ஸ்நாத்வா ஹயமுகீ ஸுந்தரீ
பபௌ || ௭௯

பிறகு அப்பெண் உக்ரபாண்டிய ராஜனுக்கு குதிரை முகத்துடன் பிறக்க அதைக்கண்ட ஜனங்கள் எல்லோரும் இதென்ன ஆச்சரியம்! ஸர்வாங்க ஸுந்தரியான இக்குழந்தைக்கு குதிரை முகம் வாய்க்கவேணுமோ வென்று கூச்சலிடும்பொழுது ஆகாசவாணி “ கங்கை முதலிய எல்லா தீர்த்தங்களிலும் இந்தப் பெண் ஸ்நானம் செய்ய இதற்கேதுவான பாபம் நீங்கும். ஸுமுகியாவாள் ” என்று சொல்லக் கேட்டு, அந்தராஜனும் ஸந்தோஷித்து வளர்த்துவர, விவாகத்திற்கு காலம் வாய்ந்தபொழுது அப்பெண்ணை தீர்த்த யாத்திரை செய்துவருவதற்கு தன் மந்திரி முதலிய பரிவாரங்களுடன் அனுப்ப அப்பெண்மணியும் ஸகல பாபங்களையும் நசிப்பிக்கும் தாம்ரபர்ணியினிருகரைகளிலும் உள்ள பாபநாசம் துடங்கி எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து ஜபஹோமாதிகளைச் செய்வித்து, தானங்களுமளித்து இத்திருச்செந்தூரில் வந்து நமது ஸன்னிதியில் ஸகல புண்ய தீர்த்தங்களிலும் சிறந்த வதனாரம்ப தீர்த்தத்தில் ஸங்கற்பத்துடன் ஸ்நானம் செய்ய, குதிரை முகம் நீங்கி ஸர்வாங்க ஸுந்தரியாயினள்.

[illegible]
[illegible]
[illegible] ॥ ८०
[illegible]
[illegible] ॥ ८०½

இச்செய்தி பறிந்து அந்த உக்ரபாண்ட்ய ராஜனும் தன் மந்திரிகளுடன் என் ஸன்னிதியில் வந்து தன் பெண்ணுடன் என்னைப் பூஜித்து என் னனுக்கிரகத்தையும் பெற்று தன்னிருப்பிடம் சென்று முன்போல் ராஜ்ய பரிபாலனத்தை சோம்பலின்றி நடத்தினான். 80½

[illegible] ॥ ८१
[illegible]
[illegible] ॥ ८२
[illegible]
[illegible] ॥ ८२½

இந்த ஸிந்து க்ஷேத்திரத்தில் என் ஸன்னிதியில் வதனாம்ப தீர்த்த மென்றும், வாஞ்சா தீர்த்தமென்றும், ஸத்திய தீர்த்த மென்றும் முவ்வுலகிலும் பிரஸித்திபெற்ற இந்த எனது வதனாம்ப தீர்த்தத்தில் ஓ த்ரிஸ்வதந்த்ர பிராமணர்களே! நீங்கள் நித்தியமும் ஸ்நானம் செய்து உங்களிஷ்டத்தை ப்பெறுவீர்கள் (என்று உபதேசித்தருளினார்.) 82½

𑌵𑍍𑌯𑌾𑌸𑌃 —

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ८३½

வியாஸர் சொல்வது:—

இந்தப்படி குகப்பிரபுவின் முககமலத்தினின்று ஒழுகும் தீர்த்த மாகாத்மியமாகும் அமிருதத்தை திருப்திவரும்படி

யானம் செய்து பிரம்மாதி தேவர்களால் பூஜ்யர்களான திரிஸ்வ தந்திரர்கள், புராணராயும் தேவஸேனைகளுக்கு அதிபராயும் இருக்கும் குஹ பிரானை இவ்விடத்தில் நித்தியமும் பூஜிக்கிறார்கள் ॥ 84 ॥

இதி ஸ்ரீஸ்காந்தே³ மஹாபுராணே உபரிபா⁴கே³

ஸூத ஸம்ஹிதாயாம்

ஸ்ரீ ஜயந்தீபுர மாஹாத்ம்யே

நவமோऽத்⁴யாய:

ஒன்பதாவது அதியாயம்

முற்றிற்று.



அத² த³ஶமோऽத்⁴யாய:

ஸ்ரீஶௌனக: —

(ஶ்லோகம்)

த்ரிஸ்வதந்த்ரைர் முநிவரை: ப்ரார்த்²தி²த: ஸ்கந்த³ஷண்முக²: ।
விதா⁴ஸ்யேத் யுக்தவாநேதி கதி²தோऽயம் த்வயா விபோ⁴ ॥
த்ரிஸ்வதந்த்ரா: கே முநீந்த்³ரா: கே கத²மேஷாம் ததா²பி⁴தா⁴ ।
ஸஞ்ஜாதா தந்ந: ஸர்வம் ஸூத ஸமாசக்ஷ்வ தத்த்வத: ॥ ௨

ஶௌனகர் சொல்வது:—

(உரை)

த்ரிஸ்வதந்த்ர முனீஸ்வரர்களாலே ப்ரார்த்திக்கப்பட்டு அப்படியே ஸுப்ரம்மண்யர் ஸ்கந்த புஷ்கரணீ தீர்த்தத்தை நிர்மித்து திருச்செந்தூரில் வஸித்தார் என்று ஓ ஸூதரே! உம்மால் இப்பொழுது சொல்லப்பட்டது. திரிஸ்வதந்த்ர முனிவர் என்பவர்கள் யார்? அவர்கள் இந்தப் பேர் பெற்ற விதமெப்படி? என்பதை யதார்த்தமாயருளவேண்டும். ௨

ஸூத: —

ஸம்யக் ப்ருஷ்டம் த்வயா வத்ஸ! மஹாஶ்சர்யம் ம-
ஹாத்³பு⁴தம் ஶ்ருணு ।

[illegible] ॥ ௩

[illegible]ஷ்டாலர் சொல்வது :—

ஓ புத்ர ! நீ விரும்பிக் கேட்பது அதி ரகஸ்யமும் மிகவும் பெருமை பெற்றதுமாயினும் உனக்குச் சொல்லுகிறேன்; ஸாவ தானமாகக் கேள். 3

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௬
[illegible]
[illegible] ॥ எ

வேதாந்தங்களின் கரைகடந்தவர்களான சில முனிகள் பிரம் மாவை நினைத்து கங்கா தீரத்தில் ஒருவ்ருக்ஷத்துக்குத் துல்யமாக ஆயிரம் சதுர்யுகமளவும் மிகவும் கோரமான தவத்தைச் செய்ய, ப்ரம்மா அவர்கள் முன் தோன்றி, ஓ முனிவர்களே ! உங்கள் கொடும் தவத்தினால் ஸந்தோஷமடைந்தேன். உங்களுக்கு வே ண்டியவற்றை கேளுங்கள் ; தருகிறேன். (என்றருளினர்)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ அ

இந்தப் பிரகாரம் பிரம்மாவினால் சொல்லக்கேட்ட முனிக ளெல்லோரும் மகிழ்ந்து அவர் பக்கத்திலிருந்து வணக்கத்து டன் கேட்டுக்கொண்டதாவது. 8

[illegible] —

[illegible] ।

[illegible]

ரிஷிகள் சொல்வது :—

ஓ ஸரஸ்வதி மனோன்மனே! எங்கள் தபஸ்ஸுக்கு தேவரீர் ஸந்தோஷித்தீரானால் எங்கள் மனதில் தோன்றும்பொழுது (1) தேவரீருலகடைந்து தேவரீரை பூஜித்து, அங்கு சிலகாலம் ஸுகம் பெறவும் (2) அப்படியே ஸ்வர்கலோகம் சென்று தேவர்களைப்போல் வாழவும் (3) இதுபோலவே புண்யப்ரதமான பூலோகத்திற்கும், இவ்விதம் மூவுலகங்களிலும் யதேஷ்டமாக ஸஞ்சரித்து ஸுகம் பெற அனுக்ரஹிக்க வேண்டுமெனப் ப்ரார்த்தித்தார்கள். 12½

வ்யாஸ: —

[illegible]

வியாஸர் சொல்வது.—

இவ்விதம் முனிவர்கள் கேட்டவரங்களை யளித்து ப்ரம்மா அவ்விடத்திலேயே அந்தர்த்தானம் செய்ய, அது முதற்கொண்டு அந்த எல்லா முனிவர்களும் மிகவுமரிதான ப்ரம்ம லோகத்திலும் மற்ற இரண்டு லோகங்களிலும் தங்களிஷ்டம்போல் வஸித்து ஸுகமடைந்தார்கள். 14½

யதாவிதி வரம் ப்ராப்ய விப்ராஸ்தே ஹுதபுகோஜஸ: |
ததா 1 மஹேஶ்வராதேவ ஸாம்பைஶ்வர்யயுதா: க்ஷிதௌ ||

அக்னியைவிட மிகவும் தேஜஸ்விகளான அந்த ப்ராம்மணர்கள் ப்ரம்மாவிடத்திற்போல் அனந்த பக்திமானாகிய மகேச்வரனிடத்தும் அனுக்கிரகம் பெற்று பூமியில் 1 ஸுகமாக வாழ்ந்தார்கள். 15½

ஸ்வப்நே ஸ்வாதந்த்ர்யம் ஸாம்பைஶ்வர்யயுதாஸ்ததா: ||
ததா ப்ராப்ய யதேஷ்டம் தே விப்ரா ஸ்வாதந்த்ர்யமாஸ்தித: |
தாம்ரபர்ணீதடே ரம்யே வாஸம் ச க்ருத்வா ஸுகாந்விதா: ||
பஶ்சாத் ஸிந்துஸ்தலம் ப்ராப்ய ஸுப்ரஹ்மண்யேந மாநிதா: |
தேந ஸ்வதந்த்ரநாமாநோ ஸாம்பைஶ்வர்யயுதாஸ்ததா: ||

இப்படி ஒருவருக்கும் கிடையாததும் நிகரற்றதுமான ஸ்வாதந்திரியத்தை தங்கள் இஷ்டம்போல் பெற்று தாம்ரபர்ணி நதிக் கரையில் கொஞ்சகாலம் ஸுகமாக வாழ்ந்து, பிறகு ஸிந்துஸ்தலத்தில் சென்று, அவ்விடத்தில் ஸன்னிதானம் செய்யும் ஸுப்ரம்மணியால் வெகுமானிக்கவும், அதுமுதற்கொண்டு த்ரிஸ்வதந்த்ரர் எனப் பெயரும் பெற்று, தேவர்கள்போல் ஸுகமாக வாழ்ந்தார்கள். 18

ஸ்ரீ ஸூத: —

த்ரிஸ்வதந்த்ராஸ்ததோ ஜாதா யாவஜ்ஜீவம் ஜகத்த்ரயே |
கௌதமேந ப்ரஸாதேந ப்ராப்ய ஸர்வம் ஸுகம் புவி ||

---

1 ஸர்வஜ்ஞதா த்ருப்திரநாதிபோத: ஸ்வாதந்த்ர்யம் நித்யமலுப்தஶக்தி: | அநந்தஶக்திஶ்ச விபோர்விதிஜ்ஞா: ஷடாஹுரங்காநி மஹேஶ்வரஸ்ய || இதி.

1 ஸர்வஜ்ஞத்வம், திருப்தி, அனாதிபோதம், ஸ்வதந்த்ரம், குறைவின்மை, அளவின்மை, என்ற அறுவகைச் சக்திகள் ஈசனுக்குளவாம் என்று புராணம் கூறியிருத்தலால் ஸிவஸாம்யமும் பெற்றவர்க்கு இவ்வறு குணங்களும் வெளிப்படும்.

ஸூதர் சொல்வது:—

ஓ குருவே! மகாத்மாக்களான கிரிஸ்வதந்திரர்கள் எத்தனை பேர்கள்? இதையும் கேட்க எனக்கு ரொம்பவும் விருப்பமிருக்கிறது. புத்ரனை என்னிடத்தில் சொல்லுங்கள் (என்றார்) 19

வ்யாஸ: —

த்வம் ச்ருணு பாசுபதாந் ஸ்வாதந்த்ராணாம் மஹாத்மநாம் |
உபாஸகாநாம் நித்யாநாம் நைமித்திகபர காரிணாம் |
வம்ஶாநுவர்ணநம் வக்ஷ்யே ஹரிஸ்மரணம் ஶிவம்
கரம் ||20||

வியாஸர் சொல்வது :—

ஓ குழந்தாய்! நித்ய நைமித்திக கர்மங்களில் ப்ராத்காளுக்களும், தலைமைமை பெற்றவர்களும், ஸாமர்த்யம்பெற்றுச சிறந்த பக்தியுடையவர்களுமான அந்த மஹா ப்ராம்மணர்களுடைய சரித்திரம் கேட்பவர்களுக்கும், படிப்பவர்களுக்கும், அவர்களுடன் வஸிக்கிறவர்களுக்கும், நல்வாழ்வை கொடுப்பதாகும். (அதை உனக்குச் சொல்கிறேன்.) 20½

வ்ருஜாவரே ஸோமக்ஷேத்ரே லக்ஷஸ்ய ஸார்த்த
கோடய: ||21||

யத்ர தேவ ஜ்ஞாநாப்ஸோ முநிப்ருத்யாதேஷு ப்ரோக்த
வாஸவா: |

ஸ்ரீ ஜயந்த்யாம் கும்பக்ஷேத்ரே ஸஹஸ்ரம் த்விஜோ
த்தமா: ||22||

ஸார்த்த ஸஹஸ்ர்யாதயோ நித்யோத்ஸவாஸ்ததா: |
வாஸுதேவ க்ஷேத்ரே த்ரிஸஹஸ்ரம் த்விஜோத்தமா: ||
நிட்யாம் ஸர்வ யாத்ரா நித்யோத்ஸவாஸ்ததா: |
ஸப்தஸஹஸ்ரம் ஸஹஸ்ரம் த்ரிஸஹஸ்ரம் ஸஹஸ்ர
த்விஜா: ||23

யத்ர நவஸஹஸ்ராணி விஷ்ணோ: நித்யாஸ்தே லோகபாவநா: |
ப்ராஹ்மணா: பஞ்சஸாஹஸ்ரம் ஸஹஸ்ரேக்ஷாஸஹஸ்ரம் ணாவகே ||௨௫
நாராயணபரா நித்யாஸ்தே லோகபாவநா: |
ஜம்புநாதே மஹாக்ஷேத்ரே ஷட்ஸஹஸ்ரம் த்விஜோத்தமா: ||௨௬
ஶ்ரீபாநவபராவிஷ்ணோ நித்யாஸ்தே லோகபாவநா: |
ப்ராஹ்மணா லக்ஷஸாஹஸ்ரம் தேஜஸ்விநோ நிவாஸின: ||
யத்ர நவஸஹஸ்ராணி ஸம்ஹோ நித்யாஸ்தே லோகபாவநா: |
அஷ்டஸாஹஸ்ரமத்ர ஸ்ரீஹரிப்ரியா நிவாஸின: ||௨௮
சங்கரம் பாஶஹஸ்தஸ்ய நித்யாஸ்தே லோகபாவநா: |
தக்ஷிணாகாரணஸ்ய நிரூபா நவஸாஹஸ்ரகா த்விஜா: ||௨௯
ஶ்ரீபாதஜபகா நித்யம் நித்யாஸ்தே லோகபாவநா: |
தஶஸாஹஸ்ரகம் ஸாயம் ஏகாக்ரா வேதவித்விஷ: ||
ஶ்ரீபாதபரா நித்யம் நித்யாஸ்தே லோகபாவநா: |
ஏகாதஶஸஹஸ்ரம் தே த்விஜா நாராயணாஶ்ரயே ||
நாராயணபரா நித்யம் நித்யாஸ்தே லோகபாவநா: |
த்விஜாஶ்சாஷ்டஸஹஸ்ரம் ச ஹாரா: ஸ்வர்கிஹம்பயேத் ||௩௨
ஷண்ணவதிஸஹஸ்ராத்ர நவபரா நித்யாஸ்தே லோகபாவநா: ||

விருத்தாசலத்தில் அந்த நிரீஸ்வதந்திர முனிகளில் ஆயிரம் பேர்கள் பரமசிவனை ஆராதித்து அழிவற்றவர்களாய் லோகங்களை பரிபாலித்தும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீஜயந்தி என்னும் திருச்செந்தூரில் இரண்டாயிரம் பிராம்மணோத்தமர்கள் ஸ்வப்ராம

மண்யனையும், சிதம்பரத்தில் மூவாயிரம் பிராம்மணர்கள் நடேச ரையும், பிரம்மபுரத்தில் (சீர்காழி) நாலாயிரம் பிராம்மணர்கள் எப்பொழுதும் வேதபாராயணத்துடன் விஷ்ணுவையும், அருணாசலத்தில் ஐயாயிரம் பிராம்மணர்கள் எப்பொழுதும் நாமகீர்த்தனங்களால் பரமேஸ்வரனையும், ஜகன்னாதமென்னும் மகாக்ஷேத்திரத்தில் ஆறாயிரம்பிராம்மணர்கள் விஷ்ணுவையும், வேதஶ்ரேணீ வனத்தில் (திருவீழிமலை) ஏழாயிரம் பிராம்மணர்கள் பரமசிவனையும் ஹாலாஸ்ய க்ஷேத்திரத்தில் எண்ணாயிரம் பிராம்மணர்கள் மீனாக்ஷி ஸுந்தரேஸ்வரர்களுக்கு அந்தரங்க ப்ரியர்களாய் அவ்விருவரையும், தண்டகாரண்யத்தில் ஒன்பதினாயிரம் பிராம்மணர்கள் ஸ்ரீராமமூர்த்தியையும், கோகுலத்தில் பதினாயிரம் பிராம்மணர்கள் மஹாஸௌந்தரனாகிய மகாவிஷ்ணுவையும், நரநாராயண க்ஷேத்திரத்தில் (பதரிகாஸ்ரமம்) பதினோராயிரம் பிராம்மணர்கள் நாராயணனையும், ஸ்வாமிமலையில் பன்னிரண்டாயிரம் பிராம்மணர்கள் ஸுப்ரமண்யனையும், தியானம், ஆராதனம் இவற்றைச்செய்து அழிவற்றவர்களாய் லோகங்களையும் பரிபாலித்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். 32½

ஸந்ததி விப்ரேந்த்ர ஸாமாத்ர்யம் ஸர்வம் மஹத்ஷாயகம் ॥ ௩௩
ப்ராதருத்தாய ஸததம் யஃ படேத் ஸ்திரமானஸஃ ।
ஸகஷ்டாநிதாம் ஸிச்சா ஸர்வார்ஷாய ப்ரஸாஸ்ய
லேசக் ௩௪

இவ்விதமாக ஸ்தலங்களையும் தரும் திரிஸ்வதந்திர பிராம்மணர்களின் மாகாத்மியத்தை காலையிலெழுந்து எந்த புத்திமான்கள் மனதை நிலைநிறுத்தி படிப்பரோ அவர் எல்லா கஷ்டங்களும் நீங்கி புருஷார்த்தங்களை அடைவார்கள். 34

த்ரிஸ்தலம் த்ருஶ்ய நிவாஸகாரணம்
ஸத்ரு ஸம்ஸ்ருதிவாஸநாஶநம் ।
ஶங்கரத்வ தவஸத்ரு மௌனவாஸ
நிஜ்யாத்யாத்மஸம்ஸ்வஸ்தா க்ஷணாஸ் । ௩௫

ஓ புத்திரா! உன்னிடம் புத்திரனென்ற அன்பினால் ரகஸ்யமும் பாபநாசமுமாகிய திரிஸ்வதந்திர முனிகளின் நாம வரலாற்றைச் சொன்னேன். இதைக் கேழ்ப்பவர்கள் படிப்பவர்களுக்கு உடனே பரமானந்தம் பெருகும் (என்று வியாஸபகவான் ஶௌனக மஹரிஷிக்கு உபதேசித்தார்.) 35

இதி ஶ்ரீ ஸ்காந்தே புராணே உபரிபாகே

[illegible]

ஶ்ரீ ஜயந்தீபுரமாஹாத்ம்யே

தசமோऽத்யாய:

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.



ஏகாதஶோऽத்யாய:

வ்யாஸ: —

(மூலம்)

[illegible] ॥ ௧

[illegible] ॥ ௨

வ்யாஸர் சொல்வது :—

(உரை)

கேளாய் ஶௌனகமுனியே! அந்த திரிஸ்வதந்திரர்கள் பெருமையை மறுபடியும் சொல்லுகிறேன். அவர்கள் முழுதும் (வேதங்களனைத்தையும் அடக்கிய) ரிக்வேதிகள். அவர்கள் அகங்காரம், மாத்ஸர்யம்,

(ஜபிப்பதில் இச்சை) கோபம், டம்பம் (அன்பர்களாகிவதற்காக வ்யாஜநடவடிக்கை,) இவைகளொழிந்தவர்கள். ப்ரம்மக்ஞானத்தைதேப (காரு[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காலம், ஸ்வபாவம், தலைவிதி என்ற கர்மம், தற்செபல் என்ற சூன்பம், பூதங்களென்ற ப்ருதிவி, அப்பு, தேயு, வாயுக்கள், போனிபென்ற பிரகிருதி அல்லது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்கள், புருஷன் என்ற ஶரீரம், இவற்றின் கூட்டுறவு, இவைகள் ஜகத்காரணம் என மயக்கமுறும் அனுத்மவாதிகள் போலல்லாது ப்ரம்மமே ஜகத் காரணமென்று,) ஸாதிப்பவர்கள், நான்கு (ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம்.) வேதங்களுமுணர்ந்தவர், (ஸந்த்யோபாஸ்த்தி, ஔபாஸனம், தேவதார்ச்சனம், ப்ரம்மயக்ஞம், வைஶ்வதேவம், அதிதிபூஜை முதலிய) ஸ்மார்த்தகர்மம் (அக்னிஹோத்ரம், பௌர்ணமாஸி, உக்தியம், அதிராத்ரம், அமாவாஸ்யை முதலிய) ஶ்ரௌதகர்மம் இவைகளை குறைவின்றி நடத்துபவர், அக்னிஷ்டோமாதியாகங்களைச் செய்யும் மஹாபாக்யவான்கள், ப்ரம்ம விஷ்ணுருத்ரர்களிடத்து ஸமபுத்தியுடையவர், ஶிவோ ல்கர்ஷபுத்தி (ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் 1 [illegible] [illegible] எல்லாவற்றையும் வ்யாபித்தவன் பகவானுகையால் எங்கும்நிறைந்தவன் ஶிவனும். 2 [illegible] [illegible] மகானுப்ரபுவாய் புருஷனை இவனே ஸத்துவத்துக்குப் ப்ரவர்த்தகன். இவ்வவ்யயனும் ஜோதிரூபனுமான ஈஶானன் முற்றும் நிர்மலமான ஶாந்தியைக் கொடுப்பானுக. 3 [illegible] அவ்வீஶானனே அமிருதத்தன்மையென்ற மோக்ஷத்துக்குப் ப்ரபு) 4 ([illegible] [illegible]

ணம் காரணாதிபாதிபோ ந சாஸ்ய கஸ்சிஜ் ஜநிதா ந சாதிப: ॥
அவனுக்கோர்பதியும் உலகத்திலில்லை. ப்ரபுவுமில்லை, அவனே காரணன். காரணாதிபதிகளுக்கதிபன் (ப்ரம்ம விஷ்ணு ருத்ரர்கள் காரணமூர்த்திகளும், ஈஸ்வரகோடிகளுமாயினும் அவர் எல்லாப் பதிகளுக்கும் மேலான பரமபதியின் வஶத்துள்ளாரே என்பதிதன் கருத்து) அவனை பிறப்பித்தவனும், அவனுக்கு நாயகனுமில்லையாம். 5 நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம், அம்ருதஸ்ய பரம் ஸேதும் தக்தேந்தநமிவாநலம் ॥ யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: । ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி ॥ நிஷ்களனும், க்ரியையில்லாதவனும், ஶாந்தனும், தோஷமில்லாதவனும், உபாதிஹீனனும், அம்ருதத்தினப்புறத்துளேதுவாய் கட்டையைக்கொளுத்திய தணல்போலுள்ள ஶிவனை அறியாமல் துயரத்துக்கு முடிவுவரவேண்டுமானல், என்று தோலைப்போல் ஆகாஶத்தை மனிதர் போர்த்துக்கொள்ளுவார்கள். (அன்றே அதுகூடும்) (மனிதர் ஆகாஶத்தைத் தோலாய் போர்த்துக்கொள்வது அஸம்பாவிதமாதலால் ஶிவக்ஞானமில்லாது மோக்ஷம் கூடுமென்பதும் அஸம்பாவிதமென்பதிதன் கருத்து.) 6 (வாயு ஸம்ஹிதாயாம்— ப்ரஹ்மாத்யா: ஸகலா தேவா: ஸ்ருஷ்டிஸ்தித்யந்தஹேதவ: । நிக்ரஹாநுக்ரஹாஸ்ஸர்வே ஶிவஸ்ய வஶவர்திந: । ஶிவ: ஸர்வஸ்யாபி நிக்ரஹாநுக்ரஹாஸ்பதம் । அதோऽதிஶயைஶ்வர்யம் தஸ்யைவேதி நிஶ்சய: ॥ இதி ப்ரம்மாதிகளுலகத்துக்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றிற்கு காரணங்களாயினும், நிக்ரகானுக்ரகங்களால் அவர்கள் ஶிவனுக்கு வஶப்பட்டவரேயாம். ஶிவனொருவன்மட்டில் எவரது நிக்ரகானுக்ரகங்களுக்கும் உள்படான், ஆகவே அவனது ஈஸ்வரத்துவமே மிகச்சிறந்ததாமென்பது துணிபு) 7 (ஶாரபோபநிஷதி— ஏக ஏவ ஶிவோ நித்யஸ்ததோऽந்யத் ஸகலம் ம்ருஷா । தஸ்மாத் ஸ

வ்ருாது வாஸித்ருஜ்ஜ்யெஜ்யாது விஷ்ணுஷாதீசாது ஸாபாது॥ ஶிவ ஸாவ ஸதாசெய்யஸ்ஸவ்ருஸம்ஸாரமோசகஃ। சிவனெனும் பெயருடையவனே அழிவற்றவன் மறைகளெல்லாமறியும். ஆகையால் விஷ்ணு முதலிய தேவர்களை தியானிப்பதைவிட்டு ஸம்ஸாரமோசகனான சிவனை எப்பொழுதும் தியானிக்கத் தகுந்தவன். 2 ஈயவ்ருஸிவோவநி ஷதி— ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தெஸம் ப்ரஸூயந்தே। முதலாம் ப்ரம்மன் விஷ்ணு ருத்ரன் இந்த்ரன், இவர்கள் பிறப்பார் (இன்னும் பல உபநிஷத்துக்களும் இவ்விதமே கோஷிக்கின்றமையால்) நிலைபெற்ற மகாபாபவர்கள். இன்னும் அவர்கள் ப்ரம்மவித்துக்களுக்கு வேதவேதாந்த வைதிகங்களன்றி தந்திராதிகளைவழிமுறைக்கொண்டும் வஸ்துவைத் தியானிக்குமபேதமிக்காத (பரம்பொருட்கு) பராத்தவைதிகர் அல்லது பிரம்மத்தை யுபதேசிப்பவர்கள். 3

ப்ரஹ்மஹேவாக்ருதக்னோவா ஶாவ்ஶைவா ஶாரதூஷகஃ।
1 ஸத்ராந்தேஷாம்ஶ்ரெஷ்ட ஶ்ரோதவ்ருதெ வாவஸஸ்ஸயெஃ॥ 4

ப்ரம்மஹத்தி, உபகாரத்தை மறத்தல் குருவைக்கொல்லுதல், அவர்மனைவியை புணர்தலாகிய கொடிய பாதகங்களைச் செய்தவர்களாயினும் அவர்கள் த்ரிஸ்வதந்திரர்கள் கிரகத்தில் புஜிப்பதினால் தங்களைப் பற்றிய பாபம் நசிக்கப்பெறுகின்றனர். 4

ஸாஹாகாரஶ்வாகாரஃஶ்ருயதெக்ஷெஷஷி்ருஜாதயெஃ।
ஶ்ருவத ந்தெஶ்ரஹாதெஷா யஜ்ஞஶ்ரஸம் தக்ஷ॥ 5

1 வராஶரஸ்ஸ்ருதௌ — ஸதாசாரஸ்ய விப்ரஸ்ய தயா வெதாந்தவெதிநஃ। ஸத்ராந்தம் ஶ்ருத்வாதெ வாவாஷ அஹொராத்ராஹஃ।

1 நல்ல ஆசாரவானும் வேதாந்த பாரகனுமாயிருக்கிற பிராம் மணனுடைய அன்னத்தை புஜிக்கிறவன் ஒருநாளுக்குள் பாவங்களி லிருந்து விடுபடுகிறான். (என பாராசரருமருளிச்செய்தனர்)

1 யஜ்ஞைஸ்ச விவிதைர்யஜ்ஞைர்தேவான் ஸம்பூஜ்ய ஸர்வதா
ஸ்வாஹாகாரைஸ்ஸ்வதாகாரைர்தேவான் பித்ரூம்ஸ்ச தர்பயன் ॥ கூ
தீர்த்தே ஸ்கந்தபுஷ்கரிண்யாம் ஸ்நாத்வா ஸர்வோபசாரகைஃ
ப்ராஹ்மணான் தர்பயந்தி ஸ்ம நித்யம் வை ஸேவிதா
தஃ ॥ கூ௬

அந்த திரிஸ்வதந்திரர்கள், அவர்கள் கிரகங்களில் நாள்தோறும் ஸ்வாஹாகாரம் ஸ்வதாகாரங்களால் தேவர்கள், பிதிருக்களையும் 1அனேகவிதமான யாகங்களால் ஸம்பூர்த்தியை, ஆராதிப்பதும் தவிர, புண்யதீர்த்தமாகிய ஸ்கந்தபுஷ்கரணியில் பிரதிதினமும் ஸ்நானம் செய்து, ப்ராம்மண்யரை தர்ப்பணம் ஸகலவுபசாரங்களாலும் ஸேவிக்கவும் செய்கிறார்கள். ௬½

ருத்ராக்ஷோத்தமாபரணா ஸ்ரீவர்ணாங்கிதவிக்ரஹாஃ ॥ எ
த்ரிபுண்ட்ராங்கிதஸர்வாங்காஃ சிவத்யான பராயண
ரிணஃ ॥ எ௰

இன்னுமந்த த்ரிஸ்வதந்திரர்கள், விதிப்படி தேகமுழுதும் விபூதி யுத்தூளனம் செய்து, அந்தந்த ஸ்தானங்களில் த்ரிபுண்ட்ரங்களைத் தரித்து ருத்ராக்ஷமாலைகளை யாபரணங்களாயணிந்த

---

1 ஆபஸ்தம்பஸூத்ரே — நாஹிதாக்நிஸ்ஸ்யாத் நாஸோமயாஜீ ந அக்நிஹோத்ரீ ஸ்யாத் யஜேத ஸோமேந ஸ்வர்காமோ யஜேத ஸோமேந ப்ராஹ்மணோ ஹி விசேஷதஃ । பாபாத்ந விமுச்யதே யஜேத பரமேஷ்டி॥ இதி

1 நாஸ்திகத்தாலோ அல்லது சோம்பலாலோ யக்ஞம் செய்ய மனமில்லாமல் அதைவிட்டிருப்பானாகில் அவன் அனேக நரகங்களை யடைவான். ஆதலால் எப்பாடுபட்டாவது முக்யமாய் ப்ராம்மணன் பரம யக்ஞங்களால் த்ருப்தி செய்துவைக்கவேண்டுமே.(என்றிருப்பதால்)

† ப்ருஹஜ்ஜாபாலோபநிஷதி —

1 த்ரிபுண்ட்ரம் யே விநிந்தந்தி நிந்தந்தி சிவமேவதே। தாரயந்தி ச யே பக்த்யா தாரயந்தி சிவம் ச தே ॥

வருமாகையால் அவர்களை (இதனடியில் 1 முதல் 8 வரையில் குறித்த ஶ்ருதிகளுக்கிணங்க விபூதி ருத்ராக்ஷதாரணங்களுக்கு மகிமை யேற்பட்டதாலும்) தர்ஶிப்பவர்கள் தங்களுடைய பாபங்களைத் தொலைத்து பரிஶுத்தராகின்றார்கள். 7½

---

ப்ருஹஜ்ஜாபாலோபநிஷதி:—

1 திரிபுண்டரத்தை நிந்திக்கிறவர்கள் ஶிவனையே நிந்திக்கிறவர்கள். அதை பக்தியோடு தரித்துக்கொள்ளுகிறவர்களா ஶிவனேயாம்.

2 ஜநகோ ஹ வைதே³ஹ: பைப்பலாதே³ந ஸஹ ப்ரஜாபதிலோகம் ஜகா³ம, தம் க³த்வோவாச, போ⁴ ப்ரஜாபதே! த்ரிபுண்ட்³ரஸ்ய மாஹாத்ம்யம் ப்³ரூஹீதி, தம் ப்ரஜாபதிரப்³ரவீத், யதை²வேஶ்வரஸ்ய மாஹாத்ம்யம் ததை²வ த்ரிபுண்ட்³ரஸ்யேதி।

2 விதேகதேசத்திய ஜனகர் பைப்பலாதமுனிவருடன் பிரஜாபதி லோகம் சென்று அவரிடம் பின் வருமாறு கேட்டார் 'ப்ரஜாபதியே! திரிபுண்ட்ரத்தின் மகிமையை எனக்குக் கூறவேண்டும். அதற்கு பிரஜாபதி சொன்னார். 'ஈஶ்வரனுடைய மகிமை எவ்விதமோ அவ்விதமே திரிபுண்டரத்தின் மகிமையும்.

3 அத² பைப்பலாதோ³ வைகுண்ட²ம் ஜகா³ம, தம் க³த்வோவாச, போ⁴ விஷ்ணோ! த்ரிபுண்ட்³ரஸ்ய மாஹாத்ம்யம் ப்³ரூஹீதி, யதை²வேஶ்வரஸ்ய மாஹாத்ம்யம் ததை²வ த்ரிபுண்ட்³ரஸ்யேதி விஷ்ணுராஹ ॥

3 பிறகு பைப்பலாதர் வைகுண்டத்திற்குச் சென்று திரிபுண்ட்ரத்தின் மகிமையைக் கூறவேண்டுமென்று விஷ்ணுவை கேட்டார். அதற்கு விஷ்ணுவானவர் ஈஶ்வரனுடைய மகிமை எவ்விதமோ அவ்விதமே. திரிபுண்ட்ரத்தின மகிமையுமென்றார்

4 யஸ்ய கஸ்யசிச்ச²ரீரே த்ரிபுண்ட்³ரஸ்ய லக்ஷ்ம த்³ருஶ்யதே। ப்ரத²மா ப்ரஜாபதிர்த்³விதீயா விஷ்ணுஸ்த்ருதீயா ஸதா³ஶிவ இதி ॥

4 ஒருவனுடைய சரீரத்தில் திரிபுண்ட்ரத்தின் லக்ஷியம் (ரேகை) இருந்தால் அதன் முதல் ரேகை பிரஜாபதி, இரண்டாவது விஷ்ணு, மூன்றாவது ஸதாஶிவன்.

## श्रीभस्मरुद्राक्षमाहात्म्यम्

* कालाग्निरुद्रोपनिषदि —

5 [illegible]

6 महाभारते — आयुष्कामोऽथवा राजन् भूतिकामोऽथवा नरः। नित्यं वै धारयेद्भस्म मोक्षकामी च वै द्विजः॥ इति॥

6 மஹாபாரதத்தில் — ஓ தர்மராஜனே! ஆயுஸ்ஸையும் ஐஸ்வர்யத்தையும், மோக்ஷத்தையும் கோருகிறவர்கள் விபூதிதாரணத்தைச் செய்யவேண்டும்.

रुद्राक्षजाबालोपनिषदि कालाग्निरुद्रः —

7 त्रिपुरवधार्थमहं निमीलिताक्षोऽभवम्। तेभ्यो जलबिन्दवो भूमौ पतितास्ते रुद्राक्षा जाताः सर्वानुग्रहार्थाय। तेषां नामोच्चारणमात्रेण दशगोप्रदानफलं दर्शनस्पर्शनाभ्यां द्विगुणफलमत ऊर्ध्वं वक्तुं न शक्नोमि।

7 காலாக்னி ருத்ரர் சொல்லுகிறார்:— திரிபுரவதத்திற்காக நான் கண்மூடிக்கொண்டேன். அவைகளிலிருந்து ஜலபிந்துக்கள் பூமியில் விழுந்தன. அவை, எல்லோரும் அனுக்ரஹம் பெறுவதற்கு, ருத்ராக்ஷங்களாயின. அவைகளின் நாமத்தை உச்சரிப்பதினால் மாத்திரம் பத்துப் பசுக்களை தானம் செய்த பலன் கிடைக்கும். (தர்சனம், ஸ்பர்சனம், முதல்) இவைகளால் இரட்டிப்பு பலன் உண்டு. இதற்குமேல் சொல்ல என்னால் முடியாது.

5 [காலாக்னி ருத்ரோபநிஷத் வாக்யங்களின் உரை.]

## * விபூதியால் தரிக்கப்படும் த்ரிபுண்டரம் (மூன்று ரேகை) களின் தத்வஸ்வரூப விளக்கம்

| ரேகைகள் | அக்னி | ப்ரணவம் | குணம் | லோகம் | ஆத்மா | ஶக்தி | வேதம் | ஸந்தியை | தேவதை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதலாவது | கார்ஹபத்யம் | அகாரம் | ரஜஸ் | பூலோகம் | ஆத்மா | க்ரியா | ரிக்கு | உதயம் | மஹேஶ்வரர் |
| இரண்டாவது | தக்ஷிணம் | உகாரம் | ஸத்வம் | அந்தரிக்ஷம் | அந்தராத்மா | இச்சா | யஜுஸ் | மத்தியான்னம் | ஸதாஶிவர் |
| மூன்றாவது | ஆஹவனீயம் | மகாரம் | தமஸ் | ஸுவர்லோகம் | பரமாத்மா | ஞானம் | ஸாமம் | ஸாயம் | மஹாதேவர் |

[illegible]

[illegible]

[illegible]

இவ்விதம் மேன்மை தங்கிய திரிஸ்வதந்திரர்களை அரசனு வது அவனது சேவகர்களாவது உபத்திரவித்தால் அவர்களும் க்ருகம், பூமி, தனம் இவைகளை தெரிந்தோ, தெரியாமலோ அபகரிக்கின்ற அரசர்களும் ஸ்லேஷ்மகர்தமம் என்ற கோரமா

8 [illegible]

8 மூவாயிரம் (3000) ருத்ராக்ஷங்களை மூன்று வர்ஷம் தரித்துக் கொண்டிருந்தால் ஸாக்ஷாத் ருத்ரனேயாவான். சிபு, சிதாகர், ஜடபரதர் தத்தாத்ரேயர், ரைவதகர் முதலானவர்கள் ருத்ராக்ஷதாரணத்தாலே யே முக்தி யடைந்தார்கள்.

1 [illegible] உவாச—

[illegible]

1 பார்கவ புராணத்தில் பரமசிவன் சொல்வது:—பிராம்மணருடைய தனத்தை பலாத்காரமாய்ப் பறிப்பவர்களால் அவர்களுடைய எழுகுலமும், வஞ்சித்து எடுப்பவர்களால் அவர்களுடைய இருபத்தொருகுலமும், அந்ததனம் வானப்ரஸ்தருடையதானால் கோடிகுலமும், சிவயோகிகளுடையதானால் எண்ணிறந்த குலங்களும் தஹிக்கப்படுகின்றன. (என்றார்)

தே ந நிந்த்³யா ந சாக்ரோஶ்யா ந த்³வேஷ்யா 1 ஹிதம் வதே³த்॥ ௧௦

நிறைந்த) நரகத்திற்கிரையாவார்கள். அவர்களை நிந்திக்கவும், கோபிப்பதும், துவேஷிப்பதும் கூடாது. 10

யேஷாம் வஸதி [illegible] ஸமன்வித: |
[illegible] ஸுப்³ரஹ்மண்ய: [illegible]॥

ஸுப்ரம்மண்யர் வல்லீ தேவியுடன் திரிஸ்வதந்திர முனிகளின் இருதய கமலத்தில் வாஸம் செய்வதால் அன்னோர்கள் யாவராலும் வணங்கத்தக்கவர்கள். 11

யேஷாம் [illegible] நாத்ர ஸம்ஶய:|
தேஷாம் ப்ரபா⁴வம் கதி²தும் [illegible] மஹீதலே| க:
கிஞ்சித்³ [illegible] வத்ஸ! ஸுப்³ரஹ்மண்ய ப்ரஸாத³த: ॥

யாதொருவர் இந்த திரிஸ்வதந்திரர்களுக்கு தானம் செய்கிறார்களோ அவர்களுக்கு மோக்ஷம் கிடைப்பதில் ஸந்தேகமில்லை. ஓ குழந்தாய்! திரிஸ்வதந்திரர்களின் மகிமையை உலகத்தில் யார் வர்ணிக்க வல்லவர். நான் ஸுப்ரம்மண்ய கிருபையால் சிலவற்றை தெரிந்தவரையில் சொன்னேன். 12½

[illegible] தே³வதே³வஸ்ய [illegible] ॥
[illegible]
[illegible] ॥
[illegible] தே³வதே³வேஶம் [illegible] ॥

---

ஸூதஸம்ஹிதாயாம் —

1 யே த்³விஷந்தி மஹாத்மானம் [illegible] நாராயண: । [illegible]
[illegible] கல்பே [illegible] நரகே [illegible]

1 ஸூதஸம்ஹிதையில்—மஹான்களான ப்ராம்மணர்களுக்கு அப்பிரியம் செய்யும் நராதமர்கள் அனேக கல்பங்களில் கொடிய நரகங்களில் துன்புறுகிறார்கள்.

கார்த்திக்யாம் க்ருத்திகாயோகே ஸ்நாத்வா ஸம்பூர்ணஸோம
மதே |
ஸம்பூஜ்ய பரமேசாநம் ஸ்கந்தம் [illegible] ॥ ௧௫
க்ருத்திகாயோகே [illegible] தீர்த்தே ஸ்நாத்வா ஸம்ப்ரதி
யே நரா |
ஸ்நாத்வா ஷண்முகம் [illegible] பாபாத்
விமுச்யதே ॥ ௧௬

[illegible] ஸாந்நித்யம் [illegible] தேவர்களு
பதியர். பரிபூர்ணரும். திவ்ய பவித்ரேகரும் திவ்யமானங்
களை பணிந்தவர்கள். தேவர்களுக்கு ப்ரியமானவன் [illegible]
ஸந்நிதானத்தில் மானமேதோறும் கார்த்திகை தினத்திலும் கார்
த்திகை மாஸத்தில் கார்த்திகை நக்ஷத்ரத்தில் பௌர்ணமியிலும்
(திருக்கார்த்திகை) வதனாரம்பதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து
ஸுப்ரம்மண்யரை தர்சிக்கிறவர்கள் எவ்வித பாபங்களையு
மகற்றி நற்கதி பெறுகிறார்கள். 16

மாகமாஸே [illegible] தீர்த்தே [illegible] ஸக்ருத்
யே நரா |
ஸ்நாத்வா [illegible] ந பவந்தி புநர்ஜந்மபாக் ॥

எவர்கள் மாகமாஸத்தில் (தை அமாவாஸ்யை கழிந்த பிரத
மை முதல் மாசிமாஸ அமாவாஸ்யை வரையில்) வதனாரம்பதீர்த்
தத்தில் ஒருதடவை அல்லது இரண்டுதடவை ஸ்நானம்செய்கிறார்
களோ அவர்கள் மறுபிறப்படைகிறதில்லை. 17

சைத்ரமாஸே ததா [illegible] ஸ்நாத்வா ஷண்முக
ஸந்நிதௌ |
தீர்த்தே [illegible] ॥ ௧௮
[illegible]
[illegible] ॥ ௧௯

அதுபோலவே சித்திரை மாஸத்திலும் முப்பது நாளும்
ஷண்முகஸன்னிதியில் வதனாரம்பதீர்த்தத்தில் ஸ்நானம் செய்ப

வர் சாமதசையில் ஸுப்ரம்மண்யருடைய ஸாரூப்ய முக்தியை அடைகின்றார்கள். 18½

**ஸ்கந்த³புஷ்கரிணீதீரே ஸ்நாத்வா ப்ராதஶ்ஶுசிர்நர꞉ |**

**துலாமேஷகயோர்வாபி ஸங்க்ராந்தௌ தத்ர ஸம்ஶய꞉ |**
**விஷுவாயநகாலே ய꞉ பஶ்யதி ஷண்முக²ம் ||20**

**ஸ ஸர்வயஜ்ஞ ஸாதே⁴ந நித்யம் வாஜபேயஶதம் லபே⁴த் |**

**ராஶிராஶிவிஶேஷண ஸங்க்ராந்தௌ ஸ்நாநஸம்யுத꞉ || 21**

**ஶரவணோத்³ப⁴வே ஶுசிஸ்நாத்வா ஸர்வத்ர ஸுக²ம் லபே⁴த் |**

**முத்³கா³ந்நம் தஸ்ய தே³வஸ்ய ப்ரியகாரம் நிவேத³ந꞉ ||22**
**ஸர்வயாக³ப²லம் தஸ்ய க்ருத்ஸ்நம் ப⁴வதி ஸம்யுதம் ||**

அற்பசி, சித்திரை, இந்த விஷுபுண்யகாலங்களில் ஸ்கந்த புஷ்கரணியில் ஸ்நானம் செய்கிறவர்கள் பாபமோசனத்தையும், தை, ஆடி இந்த அயன (உத்தராயணம், தக்ஷிணாயனம்) புண்ய காலங்களில் ஷண்முகனை தர்சிப்பவர்கள் வாஜபேயம் என்ற யாகம்செய்த பலனைப்பெற்று இப்பூமியின்கண் பூஜ்யத்தன்மையையும் மாஸந்தோறும் ஸூர்யன் வேறு ராசியில் ஸங்கிரமிக்கின்ற காலங்களில் வதனாம்ப தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து சுத்தனுப் ஸுப்ரம்மண்யருக்கு மிகவும் பிரியமெனப் பெரியோர்களால் மதிக்கப்பட்டிருக்கும் முத்கான்னத்தை, (பச்சரிசி, சிறுபருப்பு, மஞ்சள், இஞ்சி, மிளகு, உப்பு, இவைகளால் பாகம் செய்த பொங்கல்) சக்த்திக்குத் தக்கபடி நிவேதனம் செய்பவர் யாகம் முழுதும் செய்த பலனையும் பெறுகிறார்கள். 22½

**அந்நம் த³த்³யாத் ஸமாயுக்தம் யஸ்து ஸமர்பயேத் ||23**
**தஸ்ய தே³வஸ்ய ஸாயுஜ்யம் தத்ர தே³வோ விதீ⁴யதே |**
**ஶ்ராவணே ஸங்க்ராந்தே தஸ்ய தே³வஸ்ய ஸந்நிதௌ⁴ ||24**

வேதபாராயணம் யஸ்து குருதே க்ரதுஜம் ஃபலம்
லபேத் ॥ ௨௫½

ஆடி மாஸத்தில் பக்தியுடன் எவன் தயிர் சேர்ந்த அன்னம் நிவேதனம் செய்கின்றானோ அவன் அவரது ஸாரூப்யத்தையும், ஆவணி மாஸத்தில் அவர் ஸன்னிதியில் எவன் வேதபாராயணம் செய்கிறானோ அவன் யாகம்செய்த பயனையும் பெறுகிறான். 24½

மாஸி பாத்ரபதே யஸ்து முதா ஸந்தோஷ்ய ஸம்யுத: ॥
குர்யாத் 1 ஶ்ராத்தம் யதி ஶ்ரீமத் ஜயந்தீபுரதீர்த்தயோ: ।
தேந த்ருப்தா: பிதர: ப்ரயாந்தி ப்ரஹ்மணோऽந்திகம் ॥ ௨௬

புரட்டாசி மாஸத்தில் புண்ய ஸ்தலமாகிய திருச்செந்தூரில் சென்று எவர்கள் ஸந்தோஷத்துடன் 1 சிராத்தம் செய்கிறார்களோ அவர்களின் பிதுர்க்கள் திருப்தியுடன் பிரம்மலோகத்தை யடைகின்றார்கள். 26

ஆஶ்வயுஜே மாஸி நியதம் ஸ்நாத்வா ஸ்கந்தபுஷ்கரிணீஜலே ।
ஏகவாரம் த்விவாரம் வா ந பஶ்யேத் ஜந்மஸாகரம் ॥

துலா மாஸத்தில் நாள்தோறும் ஸ்கந்தபுஷ்கரணியில் ஒரு தடவையோ இரண்டு தடவையோ ஸ்நானம் செய்தால் அவர்கள் மறுபிறப்படைகிறதில்லை. 27

மார்கஶீர்ஷே விஶேஷேண தத்யந்நம் து நிவேதயேத் ।
ஷண்முகாய பக்தியுதோ யஸ்து ஸ விஷ்ணுபதமஶ்நுதே ॥ ௨௮

மார்கழி மாஸத்தில் குகனுக்கு எவர்கள் பக்தியுடன் தத்தியோதனம் (தயிர்சேர்த்த அன்னம்) நிவேதனம் செய்கிறார்களோ அவர்கள் விஷ்ணுலோகமடைகின்றார்கள். 28

---

1 மஹாலயஶ்ராத்தம்.

1 மஹாளயசிராத்தம்.

[illegible]

தை மாஸத்தில் எவர்கள் அந்த குகனுடைய ஸன்னிதியில் அகில் பொடியாலோ அல்லது சந்தனப் பொடியாலோ தூபம் ஸமர்ப்பித்து பக்தியுடன் பூஜை செய்கிறார்களோ அவர்கள் கைலாஸத்தை யடைகின்றார்கள். 29½

[illegible]

ராஜாக்களாவது ராஜதுல்யர்களான ஸ்ரீமான்களாவது (பரிவாகமங்களை நன்குணர்ந்த பரிவபக்தர்களை வரவழைத்து) ஸுப்ரம்மண்யருக்கு உத்ஸவங்கள் நடத்துவார்களாகில் அவர்கள் சக்கிரவர்த்தியாய் சத்ருக்களன்னியில் அநேகமாயிரம் ஜன்மம் பூமியை அநுபவித்து பிறகு ஸுப்ரம்மண்யஸாயுஜ்யத்தை யடைவார்கள். இந்தவிதி அனைவருக்கும் பொதுவே. 32

[illegible]

கார்த்திகை மாஸத்தில் அந்த ஸுப்ரம்மண்யரை எவன் மூடபுத்தியினால் தரிசிக்காமலிருக்கிறானோ அவன் அட்டைகள் நிறைந்த நரகத்தை யடைகிறான். 33

[illegible]

ஸர்வபாதகயுக்தோ(அ)பி தத்க்ஷணாந் முச்யதே த்ருவம் ॥

எவர்கள் கார்த்திகை மாஸம் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று ஸகலவாபரணங்களுமணிந்து அழகான திருமேனியையுடைய ஸுப்ரமண்யரை பக்தியுடன் ஸேவிக்கிறார்களோ அவர்கள் பஞ்சபாதகியானாலும் அப்பாவங்களினின்றும் விடுபட்டு மோக்ஷமடைகிறார்களென்பது நிச்சயம். 34½

கார்த்திகே மாஸி ஸம்ப்ராப்தே தீபம் கோக்ருதஸம்யுதம் ॥ ௩௫

[illegible] தத்ஸந்நிதௌ ய: தஸ்ய ஸாயுஜ்ய[illegible] ஸம்ஶய: ॥

கார்த்திகை மாஸத்தில் ஸுப்ரம்மண்யர் ஸன்னிதியில் பசுவின் நெய்யால் விளக்கு வைப்பவர்கள் முக்தி யடைவதில் ஸந்தேகமில்லை 35½

கார்த்திகே க்ருத்திகா[illegible] ஸ்வாமி[illegible] நர: ॥

[illegible]

[illegible] யஜ்ஞஸ்ய ஸம்பூர்ண[illegible]

[illegible] ॥ ௩௭

கார்த்திகை மாஸத்தில் கார்த்திகை நக்ஷத்திரத்தில் திருச்செந்தூரில் சென்று நெல்லி இலையால் குகனை அர்ச்சிப்பவர்கள் அந்த இலை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு யாகம் செய்த பலனைப் பெறுகிறார்கள். 37

[illegible]

[illegible] விஶேஷ[illegible] ।

[illegible]

[illegible] ॥ ௩௮

---

ப்ரம்மஹத்தி, ஸுராபானம், ஸ்வர்ணஸ்தேயம், குருதல்பகமனம், இவைகளைச் செய்தவர்களும், அவர்களுடன் ஸஹவாஸம் செய்கின்றவர்களும்.

கேளாய் புத்திரா! எல்லா பாபங்களையுமகற்றி நித்யமாய் கேட்ப்பவர்களுக்கு ஸகல காமங்களையு மளிக்கும் ஸிந்துவ்ரதத்தின் மகிமை முழுவதையும் உனக்கு நன்குரைத்தேன். (என்று வியாஸர் பராசருக்கருளினார்) 38

இதி ஶ்ரீஸ்காந்தே³ புராணே உபரிபா⁴கே³
ஸூதநந்திகேஶஸம்வாதே³
ஶ்ரீஜயந்தீவ்ரதமாஹாத்ம்யே
பஞ்சத³ஶோऽத்⁴யாய꞉
பதினைந்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

அத² ஷோட³ஶோऽத்⁴யாய꞉

வ்யாஸ꞉ —

(மூலம்)

புரா க்ருதயுகே³ வத்ஸ! விசித்ரம் ஶம்ப⁴வம் ஶ்ருணு ।
இதிஹாஸமஶேஷாக⁴ம் ஸர்வகல்யாணதா³யகம் ॥ ௧ ॥
ப்³ரஹ்மஸ்வரூபிதா ஸாக்ஷாத் பரமாநந்த³ஶங்கரே꞉ ।

வ்யாஸர் சொல்வது :—

(உரை)

ஓ குழந்தாய்! முன் கிருதயுகத்தில் நிகழ்ந்ததும் ஆச்சரியமானதும் ஆகிப்பரீக்ஷிக்கத்தக்கனவும் எல்லா பாபங்களையுமகற்றி ப்ரம்மானந்தத்தைத் தருவதுமாகிய பரமானந்தமூர்த்தியான பரமசிவன் புத்திரனாகிய குகன் சரித்திரத்தைக் கேட்ப்பாயாக. 1½

புரா ஶக்ரப⁴யோத்³ஜாதே தே³வஸ்த்ரீவர்ணயே க்ருதே ॥ ௨ ॥
தே³வமந்த்ரவிதௌ⁴ ஶஸ்த்ரீ த்ரிவக்த்ரம் தா³நீஶ்வரோ ப⁴வ꞉ ।
ஶ்ரீஜயந்தீவ்ரதே ஸாயுஜ்யமுக்திப்ரதோ³ ப⁴வ꞉ ॥ ௩ ॥
உபாஸ்ய ஸஞ்ஜுஷ்டோ மஹோத³நயவர்ஜிதே ।
ஜாதே கஸ்மிம்ஶ்சித்காலே தே³வே ஶ்ரீவிஷ்ணுஸம்ஜ்ஞகே ।

ஸ்ரீவல்லீதேவஸேநாப்⁴யாம் ஸஹிதஃ ஸர்வதே³வைர்
வ்ருதஃ ।
வீரபா³ஹுமுகா²த்³யாஜ்ஞஃ ஸேவ்யஸேநாக³ணா
க்³ரணீஃ ॥ ௫ ॥
ப்ரணிபத்ய ஸமாஸீநம் ஸம்முகா²ஞ்ஜலிதாஞ்ஜலிஃ ।
உவாச வசநம் ஸ்கந்த³ம் ஶ்ரீகு³ரும் கருணார்ணவம் ॥

ஆதியில் சூரபத்மாஸுரன் வதமும் வல்லீ விவாகமும் நிகழ்ந்தபிறகு முருகக்கடவுள் 'கந்தமாதன பர்வதத்தில் ஸிந்துதீரத்தில் லக்ஷ்மி ந்ருத்தனம்செய்யும் ஜயந்தீக்ஷேத்திரத்தில் தேவகந்தர்வ ஸித்தக்கூட்டங்களாலும் அன்பர்களாகிய திரிஸ்வதந்திர முனிவர்களாலும் சூழப்பட்டு வல்லீ, தேவஸேனை என்றதனது இரண்டு தேவிமாருடன் ஏகாந்தமாயிருக்கும்பொழுது ஸகல ஸைன்யங்களுக்கும் தலைவனும் ஸர்வகலாவல்லபனுமாகிய வீரபாகு கருணாஸாகரமும் தனக்கு குருமூர்த்தியுமான முருகனை நமஸ்கரித்து கைகூப்பி பக்தியுடன் சொன்னதாவது. 6

ஸ்வாமிந்! ஸர்வஜக³ந்நாத² ஸர்வஜ்ஞ ஸர்வஜக³த்³கு³ரோ ।
த்வதீ³யாம் விபூ⁴திம் ஸர்வாம் ப்³ரஹ்மாண்டே ஸர்வஸம்ஸ்தி²தாம் ॥ ௭ ॥
விஶேஷபூஜாஸித்³த்⁴யர்த²ம் ப்³ரூஹி மே ஶிவஸம்ப⁴வ ।
இதி ப்ருஷ்டஃ ஸமாஸேந ஸ்கந்தோ³ வீரபா³ஹுநா ॥
அஹம் தே கத²யிஷ்யாமி வீரபா³ஹோ மஹாமதே! ॥ ௮ ॥

ஸ்வாமி புவனேசா! ஸர்வலோகசரண்யனான குருமூர்த்தியே! தேவரீர் இந்தப் ப்ரம்மாண்டம் முழுதும் எந்த விபூதிரூபங்களால் வ்யாபித்திருக்கிறீரோ அந்தவுமது விபூதியை நான் த்யானித்து பூஜிப்பதற்காக ஓ ஸத்குருவே! எனக்குபதேசிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அந்த குகனும் ஓ புத்திசாலியான வீரபாகுவே! நமது விபூதியை உனக்குச்சொல்லுகிறேன்.
(என்றார்) 8½

ஸர்வத்ர வ்யாபிநீ மந்மாயா விபூதிஶ் ச விஶே
ஷத: || ௧௧

ஸாவதாநேந மநஸா ஶ்ருணுஷ்வ தபோதந|
ஐத்வ ஸ்வாஸ்ரீ ஸ்ரீ ஸாக்ஷாத் ஸாக்ஷாத் கணிவீம்கே| கம்
யோகாஸநே ஸமாஸீநோ மஹாஸ்த்விஸம்ஸ்தித: |
ஶம்போ: ஶ்ரீ ஜகதீஶஸ்ய ஸ்வருஷாந் க்ருபகாரிண: ||
ஸந்நிதௌ யோகஸாம்ராஜ்ஞ: சின்முத்ராஞ்சிதபாணிஜ:
உவாச ஹமவாநாதீ தேவோ தேவஶநந்தந: || ௧௨

நமது விபூதியானது யெங்கும் நிறைந்திருக்கின்றது ஆத லால் ஓ கபோதனே! ஸாவதான சித்தனாயிருந்து, நானுபதேசிப் பதைக் கேள் பரிபூர்த்தனாவாய், என்று சொல்லி, தம்மருமகனான தேவஸேனையின் ப்ராணநாதனுக்கு ஸாக்ஷிதந்தனுக்கிரகித்த ஜகதீசனான சம்புவின் ஸன்னிதியில் பரமபக்தியுடன் அந்த சம்புவின் குமாரன் யோகாஸனத்தில் வீற்றிருந்து சின்முத்திரை தரித்து உபதேசிக்கின்றார். 12

ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதித்வம்ஸ கர்த்தாரம் வித்தி கணநாயக! |
ப்ரஜாபதிஷு ப்ரஹ்மாணம் லோகேஷு ஸ்வர்கலோ
ககம் || ௧௩

ஓ கணநாயகா! என்னை ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவை களுக்கு கர்த்தாவாயும் 1 பிரஜாபதிகளுள் பிரம்மனாகவும் 2 உலகங்களில் ஸ்வர்க்கலோகமாகவும் நினைப்பாயாக. 13

வஹ்நிஷு ஹவ்யவாஹம் ச வஸுஷ்வேஷு ஸாம்ப்ரது
ய |
தேவேஷு தேவராஜாநம் பைஜர்க்ஷாணாம் ஸ்ரீவத்ஸம் ||

1 பிரம்மன், ஸிம்ஸுமாரர், ப்ருகு, ரைப்யர், ச்யவனர், மனு, கர்தமர், தக்ஷர், காசியபர், மரீசி, அத்ரி, ஆங்கிரஸ், கௌதமர், புலகர், புலஸ்த்யர், க்ரது, வஸிஷ்டர் முதலியவர்.

2 பூ - புவ - ஸுவ - மஹ - ஜன - தப - சத்தியலோகங்கள்.

[1] கண்டங்களில் பாரதகண்டமாகவும், பர்வதங்களில் மேருவாகவும், தேவர்களில் இந்திரனாகவும், புத்திமான்களில் பிருஹஸ்பதியாகவும் என்னை நீ. 14

ஸாரதேஷு மாதலிம் அஸி விமானேஷு ச புஷ்பகம் |
அப்ஸரஸ்ஸ்வுர்வசீம் அஸி கந்தர்வம் காயகேஷு ச || ௧௫

என்னை ஸாரதிகளில் மாதலியாகவும், வாகனங்களில் புஷ்பகம் என்னும் ரதமாகவும், தேவமாதர்களில் ஊர்வசியாகவும் கானம் செய்பவர்களில் கந்தர்வனாகவும் நீ. 15

லோகேஷு ஶிவலோகோஸி வாக்யேஷு ஶ்ருதி ஸம்ஹிதா |
மந்த்ரேஷு [2]ப்ரணவம் அஸி ஓங்கார அக்ஷரேஷு ஹ ||

என்னை மும்மூர்த்திகளின் உலகங்களில் கைலாஸமாகவும், வாக்குகளில் வேதங்களாகவும், உத்[illegible] அனுஷ்டானம், ஸ்வரிகள் [illegible] களில் [illegible] ஸ்வரமாகவும், அக்ஷரங்களில் ம என்ற அக்ஷரமாகவும் நீ 16

அகஸ்த்யம் ருஷிஷு ச த்வம் அஸி ஸநத்குமாரம் ஸித்தேஷு |
யோகீந்த்ரேஷு ச தத்தம் த்வம் அஸி ஸேவகேஷு ச ஸனந்தனம் ||

என்னை முனிவர்களுள் ரிஷிஶ்ரேஷ்டராகிய அகஸ்தியராகவும், யோகிகளில் தத்தாத்ரேயனாகவும், ஸித்திபெற்றவரில் ஸனந்தனனாகவும் நீ. 17

ஶிவபக்தேஷு த்வம் அஸி நாராயண நாரதம் |
வாணீவக்த்ரேஷு ஶ்லோகம் காஶீ க்ஷேத்ரேஷு ஹி ஸ
வாரணஸம் ||௧௭

---

[1] பரத - குரு - கிம்புருஷ - இளாவ்ருத - ரம்யக - ஹரிவருஷ - கேதுமால - ரம்மிய - பத்திராஸ்வ - இரண்ய - கண்டங்கள்.

[2] ஶ்ரோத்ரம் வேதாத் அதீதம் நாதாந்தாத் ஜீவ உச்யதே ஸர்வதீர்த்தாவகாஹேவ உபாஸ்ய ஹ உச்யதே || (என்றிருக்கிறது)

சிவபக்தர்களில் நாராயணனாகவும், புண்ய க்ஷேத்திரங்களில் காசியாகவும், பர்வதங்களில் இமயபர்வதமாகவும், என்னை அறிந்துகொள். 18

𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑍄𑌣𑌾𑌂 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑍋𑌽𑌹𑌂 𑌪𑌾𑌲𑌕𑌾𑌨𑌾𑌂 𑌹𑌰𑌿𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌸𑌂𑌹𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌂 𑌕𑌾𑌲𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌕𑌾𑌲𑌃 𑌕𑌲𑌯𑌤𑌾𑌮𑌹𑌮𑍍 ‖

ஸ்ருஷ்டிசெய்பவர்களுள் இரண்யகர்ப்பனாகவும் ரக்ஷிப்பவர்களுள் மகாவிஷ்ணுவாகவும், நாசம் செய்பவர்களில் காலாக்னிருத்திரனாகவும், கணனம் செய்பவர்களுள் காலமாகவும் என்னை அறி. 19

𑌉𑌪𑌦𑍇𑌷𑍍𑌟𑍄𑌣𑌾𑌮𑌹𑌂 𑌸𑌦𑍇𑌵𑌷𑌾𑌂 𑌵𑌟𑌸𑍍𑌥𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌹𑍍𑌰𑍀𑌃 𑌶𑍍𑌰𑍀𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑌹𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍋 𑌮𑌾𑌸𑌷𑍁 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ‖ ௨௦

உபதேசிப்பவர்களுள் ஆலமரத்தடியில் தவத்துடன் உபதேசம் செய்யும் தக்ஷிணாமூர்த்தியாகவும், ஸ்திரீகளில் ஹ்ரீ, ஸ்ரீ, கீர்த்தி என்பவராகவும், மாஸங்களுள் ஆவணிமாஸமாகவும் என்னை அறி. 20

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋𑌽𑌹𑌂 𑌦𑍇𑌵𑌰𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌚 𑌨𑌾𑌰𑌦𑌃 ।
𑌗𑌜𑍇𑌷𑍁 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑍋𑌽𑌹𑌂 𑌧𑍇𑌨𑍂𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌧𑍇𑌨𑍁𑌕𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ‖ ௨௧

ப்ரம்மரிஷிகளுள் வசிஷ்டரும், தேவரிஷிகளுள் நாரதரும், கஜங்களுக்குள் ஸார்வபௌமன் என்னும் கஜமும், பசுக்களுள் ஸகல அபீஷ்டங்களையும் அளிக்கும் காமதேனுவும் நானே. 21

𑌅𑌶𑍇𑌷𑌵𑌸𑍍𑌤𑍁𑌜𑌾𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌰𑌹𑌂 ।
𑌪𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌂 𑌸𑌾𑌰𑌸𑍋𑌽𑌹𑌂 𑌨𑌾𑌗𑌾𑌨𑌾𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑍋 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ‖ ௨௨

குதிரைகளில் ஸப்த நாமா என்று பெருள்ள ஸூரியன் குதிரையும், மிருகங்களுள் ஸிம்ஹமும், பறவைகளுள் சரபம் என்றதும் [1] பதினொரு ருத்ரர்களில் பயங்கரனும் நானே. 22

ஶைலேஷ்வபி ஹிமவாந் நாம ஸரஸ்ஸ்வபி ச மாநஸ: |
மந்த்ராணாமபி காயத்ரீ வ்ருக்ஷாணாமஶ்வத்தோऽஸ்ம்யஹம் ‖ ௨௩

அரவங்களுள் ஆதிசேஷனும், தடாகங்களில் மானஸதீர்த்தமும், மந்திரங்களுள் காயத்ரியும், விருக்ஷங்களில் அரசும் நானே. 23

ப்ராணாபஹாரிஷு யம: வாயு: ப்ராணாஞ்சாரத: |
கபீநாம் ஹநூமாநஸ்மி ராமோऽஸ்மி தநுஷ்மதாம் ‖ ௨௪

கொல்பவர்க்குள் இயமனும், பரிசுத்தம் செய்பவருள் வாயுவும், குரங்குகளில் அனுமானும், வில்லாளிகளில் ராமனும் நானே யாகிறேன். 24

ஶூராணாம் கார்த்தவீர்யோऽஸ்மி தர்மாணாம் ஸத்யமஸ்ம்யஹம் |
யஜ்ஞாநாமஶ்வமேதோऽஸ்மி ஸதீநாம் பார்வதீ ஹ்யஹம் ‖

வீரர்க்குள் கார்த்தவீர்யார்ஜுனனும், தர்மங்களுள் ஸத்தியமும், யக்ஞங்களுள் அசுவமேதமும், பதிவிரதைகளில் பார்வதியும் நானே யாகிறேன். 25

காவ்யாநாம் ஶ்ரீராமம் ஸாக்ஷாத் வித்யாநாமஸ்மி சர்ச்சகா |
அஹம் ஸர்வபூதாநாம் க்ருஷ்ணோऽஹம் வ்ருஷ்ணிவம்ஶஜ: ‖ ௨௬

---

1 அஜன், ஏகபாதன், அஹிர்ப்புத்னன், துவஷ்டா, ருத்திரன், ஹரன், திரியம்பகன், அபராஜிதன், ஈசானன், திரிபுவனன், ஶங்கரன்.

ஆசைப்படுவதற்குரிய வஸ்துக்களில் ஸ்திரீயும், வித்தைகளுக்குள் பாதுகாவித்தையும், எல்லா தானங்களிலும் ஸ்லாக்யமான அபயதானமும், யதுகுலத்தரசர்களுள் [1] கிருஷ்ணனும் நானே. 26

ஸத்த்வஸௌஷ்டஹம் ஸாக்ஷாத்ஸர்வஸ்ரேஷ்டம் ஸர்வம் ததா ।
நதீநாம் தசகங்கா ஹவிஷ்யோ நாம்க்ஷீரோ ஸாகராணாம் ॥ 27

ஸத்யவிருதர்களுள் கீர்த்திபெற்ற அரிச்சந்திரனும், நதிகளுக்குள் [2] தசகங்கையும், ஸமுத்திரங்களுள் க்ஷீரஸமுத்திரமும் நானேயாகிறேன். 27

நக்ஷத்ராணாமஹம் சந்த்ரோ ருதூநாம் வஸந்தக: ।
போகிநாம் காமதேவோ தபஸாம் ப்ராணஸம்யம: ॥ 28

நக்ஷத்திரங்களுள் சந்திரனும், ருதுக்களுள் வஸந்தருதுவும், போகஞ்செய்பவரில் மன்மதனும், தவங்களில் பிராணாயாமமும் நானேயாகிறேன். 28

முக்தாஹம் ஸர்வரத்நாநாம் வஜ்ரம் பூஷணேஷ்வஹம் ।
பித்ரூணாமர்யமா சாஸ்மி இந்த்ரியாணாம் மநோ ஹ்யஹம் ॥ 29

ரத்னங்களுள் முத்தும், ஆபரணங்களில் வஜ்ரமும், பித்ருக்களுள் அர்யமாவும், இந்திரியங்களுக்குள் மனதும் நானேயாகிறேன். 29

---

1 சேனைத்தலைவர்களுக்குள் ஸ்கந்தன் நானே.
(பகவத்கீதை அ. 10, சுலோகம் 24 பார்க்க)

2 கங்கா, யமுனா, ஸரஸ்வதீ, கிரணா, தூதபாபா, ஹாரயந்தீ, கண்டகீ, கௌசிகீ, சோணா, மந்தாகினீ, (இந்த பத்து நதிகளுடைய ஸங்கமத்துக்குப் பெயர்)
இந்த தசகங்கையே தசகங்காதீர்த்தமென பேர்பெற்றது.
(அத்தியாயம் 3. சுலோகம் 47, தீர்த்தம் 21 பார்க்க)

**ஸார்வபௌம: க்ஷத்ரியாணாம் குபேரோ தநிநாமஹம் |**
**தீர்த்தேஷு மணிகர்ண்யஸ்மி உச்ச்ரிதேஷு ஶிலோச்சய: ||**

க்ஷத்திரியர்களுள் ஸார்வபௌமம், தனவான்களில் குபேர னும், தீர்த்தங்களில் மணிகர்ணிகையும், உயர்ந்தவைகளில் பர்வத ராஜனும் நானே யாகிறேன். 30

**ப்ராயஶ்சித்தேஷு ஸேதுஸ்ஸ்யாம் மாதாஸ்மி தயாவதாம் |**
**ஸூர்யவம்ஶேஷு ராமோஹம் சந்த்ரவம்ஶேஷு யுதிஷ்டிர: || ௩௧**

பிராயச்சித்தஞ் செய்யத்தகுந்த ஸ்தலங்களில் ஸேதுவும், தயையுள்ளவர்களில் மாதாவும், ஸூர்யவம்ஶத்தரசர்களில் ராம னும், சந்திரவம்ஶத்தரசர்களில் தர்மபுத்திரனும் நானே 31

**பக்ஷிணாம் ஸ்யாமஹம் ஸ்ரீமத் அவஸ்தாநாஞ்ச யௌவநம் |**
**யாகாநாமந்தர்யாகோஸ்மி வாஸுகி: ஸர்ப்பஸந்ததௌ |**

பக்ஷிகளுள் இபமபாதனையும், அவஸ்தைகளுள் யௌவ னாவஸ்தையும், யாகங்களுள் அந்தர்யாகமும், ஸர்ப்பங்களில் வாஸுகியும் நானே யாகிறேன் 32

**ரஸாநாம் லவணஶ்சாஸ்மி ஜாடர: பாவகேஷ்வஹம் |**
**ராமாயணம் ஹி காவ்யேஷு தர்மாணாம் மாநஸோ ஹ்யஹம் || ௩௩**

(தித்திப்பு, கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, எரிப்பு, உப்பு, என்ற 6) ரஸங்களில உப்புரஸமும், அக்னிகளில் உதராக்கினியும், காவ்யங்களில் ராமாயணமும், தர்மங்களில் மானஸிகதர்மமும் நானே. 33

**ஜ்ஞாநஸாரேஷு ஸர்வேஷு கீதா ஸ்யாம் ஸாரஸம் கவிஶ்ரேஷ்டே |**
**ப்ரேக்ஷணீயதமம் ரூபம் ஸ்வாத்மஜாதம் ஜகத்த்ரயே || ௩௪**

**தந்த்ரேஷ்வாகமவேதேஷு இதிஹாஸபுராணயோ: |**
**ஸர்வஜ்ஞஸ்ய ப்ரணீதாநாம் ஸாரபூதம் ஸதாஸ்மி ச ||**

ஞானசாஸ்திரங்களில் கீதையும், கவிகளும் வியாஸமுனியும், இன்னும் புராணங்களிலும் சொல்லப்பட்ட சிறந்தவைகளை அவையெல்லாம் நானே என் அம்சமே. ஸந்தேகமில்லை ஆதலால் ஓ ஸேனாபதியே என்னை யெப்பொழுதும் மெய்ஞ்ஞானம் நிறைந்த பொருளாக த்யானித்து பூஜிக்கக்கடவை 35

**ஸத்யேந ஜகதீஸ்வேஷு தத்த்வாந் ஸர்வான் ஸமர்ப்ய வை |**
**ஸர்வாபூர்ணமநோரதான் ஸ்வசிக்ஷாம் ஜகதாம்ஸகோ சிஷ்யமஹ: || ௩௫**

இப்படி ஜகந்நாதனாகிய சம்புவின் ஸந்நிதியில பக்தர்களுக்கு ஸகல அபீஷ்டங்களையும் அளிப்பவனும் பரிபூரணனுமானவனுமாகிய குகபகவான் வீரபாகுவுக்கு உபதேசித்தருளினார் 36

**இதி ஸ்ரீஸ்காந்தே புராணே உபரிபாகே**
**ஷாநவைலவஸம்வாதே**
**ஸ்ரீ ஜயந்தீபுரமாஹாத்ம்யே**
**த்வாதஶோऽத்யாய:**

பன்னிரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.



**அத த்ரயோதஶோऽத்யாய:**

**வீரபாஹு: —**

(உவாச)

**க்ருதார்தோஸ்மி ஜகந்நாத கருணாகர ஷண்முக |**
**விஶ்வதிஸ்ருவனே நாதம் ஸ்ரீ ஷண்முக ஸுரேஸ்வர: || ௧**

வீரபாகு சொல்வது:—

(உரை)

ஓ தேவ நாத! கருணாநந்தவடிவே! உமது [illegible]யாகிய நான் விசேஷமாய்ப் பூஜிப்பதற்கு உமது விபூதியை கேட்டதினால் கிருதார்த்தனானேன். 1

[illegible] ।
[illegible] ॥ ௨
[illegible] ।
[illegible] ॥ ௩

ஓ ஸ்வாமி! கபாலியே! மகிமையுள்ள தேவரீர் உபதேசித்தபடி விஸ்வரூபம் எவ்விதமோ அதை உமது சேவகனும் வேறு கதியற்றவனும் சிஷ்யனுமாகிய நான் தரிசிக்க அருள்புரிய வேணுமென்று நமஸ்கரித்து நிற்கும் வீரபாகுவைப் பார்த்து கருணைவள்ளலும் ஆதிதேவனுமாகிய ஆறுமுகன் சொல்லுகிறார். 3

[illegible] ।
[illegible] ॥ ௪

ஓ மகாபலசாலியும் சேனைத்தலைவனுமாகிய வீரபாகுவே! ஆச்சரியகரமான நம்முடைய விஸ்வரூபத்தை யுனக்குக் காண்பிக்கிறேன் பார் பார். 4

[illegible] ।
[illegible] ॥ ௫

தேவர்களுக்கும் காண்பதற்கரிதான இந்த விஸ்வரூபத்தை என்னால் அளிக்கப்பட்ட திவ்யஞானக்கண்களால் நீ பார். 5

[illegible] ।
[illegible] ॥ ௬

இப்படி பிரபுவினால் சொல்லக்கேட்டவுடன் மகாபுத்திமானான வீரபாகு பிர்ம்மாண்டம் முழுவதையும் ஸுப்ரம்மண்யப் பிரபுவின் சரீரத்தில் பார்த்தார். 6

𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌤𑌵𑌾𑌙𑍍𑌗𑍇 । 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇 𑌸𑍁𑌤!॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌦𑌶𑌪𑍁𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑍍 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍇𑌕𑌾𑌦𑌶𑌂 𑌚𑍈𑌵 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌨𑌭𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌕𑍁𑌲𑌪𑌰𑍍𑌵𑌤𑌮𑍇𑌰𑍁𑌂𑌶𑍍𑌚 𑌗𑌙𑍍𑌗𑌾𑌦𑍀𑌨𑌦𑍀𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 ॥ ௩

1 ஓ பசுபதியின் புத்திரரே! தேவரீர் சரீரத்தில், தேவர்கள் கெந்தர்வர்கள் பிர்ம்மாவின் பத்துகுமாரர்களுடன் பனிரண்டு ஸூரியர்கள்மார்க்கமும், பதினொரு ருத்திரர்களும், சந்திரன், ஸூர்யன், ஆகாசம், குலபர்வதங்கள், மகாமேருபர்வதம், கங்கை முதலான நதிகளுமடங்கிய பிரம்மாண்டம் முழுதும் காண்கிறேன். ௩

𑌵𑍇𑌦𑌵𑍍𑌯𑌾𑌸𑌮𑍁𑌖𑌾𑌨𑍍 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 ।
𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌦𑍀𑌨𑍍 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 𑌶𑍇𑌷𑌂 𑌹𑌰𑌂 𑌕𑍋𑌟𑌿𑌶𑌃 ।
𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌬𑍍𑌧𑍌 𑌶𑍇𑌷𑌶𑌯𑌨𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌮𑌨𑌾𑌮𑌯𑌮𑍍 ।
𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌵 𑌦𑍇𑌹𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑍀𑌭𑍂𑌤𑌵𑌾𑌸𑌨𑌃 ॥ ௪

---

1 𑌜𑌾𑌬𑌾𑌲𑍋𑌪𑌨𑌿𑌷𑌦𑌿 — 𑌜𑍀𑌵𑌾𑌃 𑌪𑌶𑌵 𑌉𑌕𑍍𑌤𑌾𑌃 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃, 𑌕𑌥𑌂 𑌜𑍀𑌵𑌾𑌃 𑌪𑌶𑌵 𑌇𑌤𑌿, 𑌕𑌥𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌮𑍀𑌤𑌿, 𑌯𑌥𑌾 𑌤𑍃𑌣𑌾𑌶𑌿𑌨𑍋 𑌵𑌿𑌵𑍇𑌕𑌹𑍀𑌨𑌾𑌃 𑌪𑌰𑌪𑍍𑌰𑍇𑌷𑍍𑌯𑌾𑌃 𑌕𑍃𑌷𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌨𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌕𑌲𑌦𑍁𑌃𑌖𑌸𑌹𑌾𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌬𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌗𑌵𑌾𑌦𑌯𑌃 𑌪𑌶𑌵𑌃 𑌯𑌥𑌾 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨 𑌇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞 𑌈𑌶𑌃 𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌃 ॥

1 ஜாபாலோபநிஷத்தில்—ஜீவர்கள் பசுக்கள். அவைகளுக்கு யஜமானனுகையால் பசுபதி. ஜீவர்கள் எப்படி பசுக்கள்? அவைகளுக்கு ஈசுவரன் எவ்விதம் பதி? புல்லைத்தின்றுகொண்டு விவேகமில்லாமல் பிறரால் உழவுமுதலியவேலைகளில் ஏவப்பட்டு எல்லா துக்கங்களையும் ஸகித்துக்கொண்டு தனது எஜமானரால் கட்டப்படுகிற மாடு முதலானவைகள் எவ்விதம் பசுக்களோ அவ்விதம் ஜீவர்கள் பசுக்கள். இந்த மாடு முதலியவைகளின் எஜமானர்கள்போல ஸர்வஜ்ஞனான ஈசுவரன் பசுபதி.

உமது தேகத்தில் நாடோறும் நாலுமுகங்களால் நான்கு வேதங்களைப் பாராயணம் செய்யும் பிர்ம்மாவைபார்க்கிறேன். அப்படியே கைலாஸமண்டபத்தில் ஆனந்த நர்த்தனம் செய்யும் பரமஶிவனையும், திருப்பார்க்கடலில்ஶேஷஶயனத்தில் பள்ளிகொண்ட நிர்மலரான ஸ்ரீமன்நாராயணனையும், தவம்புரியும்கபிலர் முதலானோரையும் காண்கிறேன். 10

नित्यकर्मरतानग्निहोत्रिणो ब्राह्मणोत्तमान् ।
वसिष्ठादींश्च पश्यामि देहे ते शम्भुनन्दन ॥

நித்தியகர்மங்களை ஶ்ரத்தையுடன் நடத்துகிறவர்களையும், அக்னிஹோத்திரம் செய்யும் பிராம்மணோத்தமர்களையும், வஸிஷ்டர் முதலானோரையும், ஓ ஶம்புகுமார! தேவரீரிடம் காண்கிறேன். 11

दण्डनीतिरतान् भूपान् पश्यामि क्षत्रियानहम् ।
नदीः सर्वाश्च पश्यामि प्रवाहपरिवाहिताः ॥ १२

தவறுதலன்றி தண்டநீதிசெய்கிற அரஶர்களையும், நிறைந்து ப்ரவகிக்கின்ற ஸகல நதிகளையும், தேவரீர் தேகத்தில் காண்கிறேன். 12

ससागरां महीं कृत्स्नां तीरस्थदेवतालयाः ।
पश्यामि परमेशान! कुलपर्वतसप्तकम् ॥ १३

ஸமுத்திரங்களால் சூழப்பட்ட பூமண்டலம் முழுவதையும், அதின் கரையிலுள்ள தேவாலயங்களையும், ஏழுகுல பர்வதங்களையும் காண்கிறேன். 13

पश्यामि तव देहस्थं भुवनानि चतुर्दश ।
दिव्यरूपाः स्त्रियो रम्या दिव्याभरणभूषिताः ॥ १४
दिव्यवस्त्रपरीधाना दिव्यगन्धानुलेपिताः ।

கோடிகந்தர்பலாவண்யம் கோடிஸூர்யாதபோ
ஜ்ஜ்வலம்॥15
கோடிகோட்யர்கநயநம் கோடிஶீதாம்ஶுஶீதலம்।
அநேககோடி ப்ரஹ்மாண்டப்ரவேஶவாதாயநோஜ்ஜ்
வலை:॥16

ரோமகூபாவலீநவ்யம் தேஜோரூபமுபாதிகம்।
ஆத்யந்தஶூந்யம் நிர்லேபம் பஶ்யாமி கருணாநிதே!॥17

ஓ கருணைக்கடலே! உமது திருமேனியில் பதினாலுலகங்களையும் பார்க்கிறேன். தவிரவும் தேவரீரவயவங்களில் பரிமளம் வீசுகின்ற திவ்யகந்தங்களால் பூஶப்பட்டு திவ்யவாபரணங்களணிந்தும், திவ்யபீதாம்பரம்தரித்து திவ்யகுண்டலங்களோடு கோடிமன்மதர்களுக்கு நிகராகவும், கோடிஸூர்யப்பிரகாஶம்போல் ஜ்வலிக்கிறவராகவும், அனேககோடி ஸூர்யர்கள்போன்ற உக்ரமான நேத்திரங்களையுடையவராகவும், கோடிசந்திரர்களுக்குத் துல்லியமாக குளிர்ச்சியையுடையவராகவும், அனேககோடி ப்ரம்மாண்டங்கள் காற்றினால் உள்புகுந்து ஸஞ்சரிக்கும்படியான ஜன்னல்களையெனத்தோன்றுமாறு ஶோபியாநின்ற ரோமகூபங்களையுடையவராயும், தேஜோரூபியாய் உபாதிரகிதராய் ஆதியந்தமில்லாதவராய் நிர்மலராகவும், தேவரீரைப் பார்க்கிறேன். 17

தம்ஷ்ட்ராகராலவக்த்ரம் ச கோரகோராட்டஹாஸகம்।
அநேகாயுதஸம்பூர்ணமநேகமணிகணோஜ்ஜ்வலம்॥18
அநேகவக்த்ரநயநமநேககரபாஹுகம்।
அநேகஶ்ரவணோபேதமநேகக்ராணஶீர்ஷகம்॥19
கராலவக்த்ரை: ஸர்வஸ்ய ஸம்ஹர்தாரம் ஜகத்த்ரயீம்।
ஸம்ஹரந்தம் ஸஹஸா கோரகோராட்டஹாஸ
கை:॥20
ஸ்துதிம் கர்தும் ஸமர்த்தோ! யோ த்ருஷ்டும் ந ஶக்நோதி।
கோ வா ஸமர்த்தோ ஸ்தோதும் த்வாம் ஸர்வேஶ்வரம் ப்ரபோ

அநேகவாயுதங்களால் நிறைந்த அநேகம் கைகளையும், வீரப்பற்களுடனும், பயங்கரமான அட்டஹாஸத்தோடும், அநேகம் ரத்னகுண்டலங்களணிந்த அநேகம் செவிகள் அநேகம் கண்கள் அநேகம் மூக்குகளுடனும் கூடிய பயங்கரமான வதனத்தில் மூன்று லோகமும் நித்ரைசெய்வதுபோல் பார்ப்பதுடன் நடுக்கமுற, சடசடவென்னும் ஶப்தத்தையும் கேட்டு மிகவும் பயந்தேன். ஓ பகவானே! இதற்குமேல்பார்க்க நான சக்தனல்லேன். இவ்விய மங்கள ஸ்வரூபம் தரித்த தேவரீர் யார்(என்று வீரபாகு பிரார்த்தித்தான்.) 21

ஶ்ரீ ஶர்வ:—

ப்ரபஞ்சமூர்த்திரூபாஹம் ஸ்ருஷ்டிஸ்தித்யுதயாத்மக: |
காரணம் ஸர்வலோகானாம் ஸர்வகாலாதிக: பர: ||௨௨
இதி ஶ்ருத்வா பீதபீதோ வேபமானோ மஹாபுஜ: |
உவாச ப்ரணதோ பூத்வா வீரபாஹு: க்ருதாஞ்ஜலி: ||

குகர் சொல்வது:—

பிரபஞ்சமூர்த்தியும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளுக்கு காரணமூர்த்தியும், ஸர்வகாலங்களுக்கு மேலான காலமுமாய் உயர்ந்த பொருளும் நானே என்று குகன் பதிலளிக்கக்கேட்டு புத்திமானான வீரபாகு மிகப்பயந்து நடுநடுங்கி வணங்கித் தழுதழுத்த குரலோடும் தெரிவித்தான். 22

தேவா ஸ்துவந்தி த்வாம் தேவ கந்தர்வா கீததத்பரா: |
த்யாயந்தி முநயஸ்ஸித்தா: கிந்நரா நதகந்தரா: || ௨௩
ஸ்துவந்தி ந்ருத்யந்த்யப்ஸரஸாம் கணா: |

யக்ஷாஸ்ச ஸாத்யா: ஸர்வே திஷ்டந்த்யுபாஸனே ||

ஓ தேவனே! உட்மை தர்ஶித்து தேவர்கள் ஸ்துதிக்கின்றார்கள். கந்தர்வர்கள் கானம் செய்கிறார்கள். முனிகளும் ஸித்தர்களும் தியானம் செய்கிறார்கள். கின்னரர்கள் தலைவணங்கி ஸ்துதிபாடங்களைச் சொல்லுகிறார்கள். அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம்

செய்கிறார்கள், யக்ஷர்கள் ஸாத்தியர்கள், மருத்துக்களாகிய இவர்கள் ஆச்சர்யப்படுகிறார்கள். 25

**யோகினஸ்ஸ்திமிதாஸ்ஸர்வே திக்பாலாஶ்ச பயாகுலா:|**
**நிரீக்ஷிதும் ந ஶக்தாஸ்தே த்யாதும் சைவ ந ஶக்நும:|| ௨௬**

யோகிகள் திகைத்தார்கள். திக்பாலர்கள் பயந்தார்கள். ஹே ஸ்வாமி! என்றால் பார்க்க முடியவில்லை, தியானிப்போமென்றால் மனது நிலைக்கவுமில்லை. 26

**நமோ நமஸ்தே புரத: பார்ஶ்வாப்யாம் ச நமோ நம:|**
**பார்ஶ்வயோஶ்ச நமஸ்தேஸ்து ப்ருஷ்டதஶ்ச நமோ நம:||**
**ஊர்த்வதஸ்தே நமோ நித்யம் ஸர்வதஸ்தே நமோ நம:|**
**ஸர்வதஸ்தே நமஸ்தேஸ்து ஸர்வரூபாய ஸர்வதா||**

ஹே பகவானே! தேவரீர முன்பாகவும் நமஸ்கரிக்கிறேன், இரண்டு பக்கங்களிலும் நமஸ்கரிக்கிறேன், பின் பாகத்திலும் நமஸ்கரிக்கிறேன், மேலேயும் நமஸ்கரிக்கிறேன், எங்கும் நமஸ்கரிக்கிறேன், ஸர்வஸ்வரூபியான உம்மை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன். 27

**வீரோஹம் பலவாந் தந்வீ விஜயீ த்ருதகார்முக:|**
**க்ரூரம் வினா ஶ்ரமம் ஸம்ஹாரம் கதம் கர்துமிதீச்சயா||**
**க்ருத்வாஹம் பாபிநோ ஹீசவா நஷ்டாஸ்மி ஜகத:**
**ப்ரபோ|**

**தத்க்ஷமஸ்வ ஜகந்நாத கருணாகர ஶங்கர|**
**உபஸம்ஹர ரூபம் தத் ஸௌம்யம் தர்ஶய ப்ரபோ||**

நான் வீரன், பலவான், வில்லாளிகளில் சிறந்தவன், நம்மாலன்றி குரூர வதம் செய்வதெப்படி என்று களித்த அபராதியானேன். ஹே லோகேச! அதையெல்லாம் பரமசிவத்தின் திருமகனும், கருணை வள்ளலுமாகிய தேவரீர் மன்னித்து விஸ்வரூபத்தை மறைத்து ஸௌம்யமான ரூபத்தைக் காண்பிக்கவேணும் என்றான். 30½

[illegible] ௩௨

[illegible]

இப்படி மிகவும் பயந்து நமஸ்கரித்த வீரபாகுவைப் பார்த்து தயவுடன் கைகளாலவனை எடுத்து முன்போல் ஸ்வரூபத்தை காண்பித்து நமதன்பனே! இந்த ரூபத்தைக் காண்பதற்காக பிர்ம்மா முதலான தேவர்களும், ஸித்தகணங்களும் ஸனகர்முதலான யோகிகளும் நந்தி முதலான கணங்களும் தவம் செய்கிறார்கள். 33

[illegible] ௩௪

ஓ தேவதைகளே! இனியொரு யுகத்தில் சூரனை வதைத்த பின் கந்தமாதனபர்வதத்தில் ஜயந்தி க்ஷேத்திரத்தில் ஸேனைத்தலைவனும் நமதன்பனுமான வீரபாகுவால் பிரார்த்திக்கப்பட்டு நான் விஸ்வரூபத்தை காண்பிக்கிறேன். அப்பொழுது நீங்கள் எல்லோரும் பாருங்கள் (என்று சொல்லியிருக்கிறேன்.) 35

[illegible]




விஸ்வரூபக்காட்சி பயந்து நமஸ்கரித்த வீரபாகு தேவரை முருகன் கைகளாலெடுத்து தனது ரூபத்தைக்காட்டல்.

1 மந்த்ரஜாபீ ஸதஸ்தம்மாமேவைஷ்யதி நிஶ்சயாத்

ஆதலாலிப்பொழுது மகத்தான இந்த ஸ்வரூபத்தை காண்பித்தேன். ஓ வீரபாகுவே! நீ க்ருதார்த்தன் (ஜன்மஸாபல்யத்திற்கு எல்லாம்செய்து முடித்தவன்) என்னையே தியானித்து என்னையே ஶரணமடைந்தவனும் என் நாமங்களை எவர்கள் கீர்த்தனம் செய்து என் பக்தர்களை பரிசரித்து என் கதைகளை விருப்பத்துடன் கேட்டு என் 1 மந்திரத்தை ஆவலுடன் ஜபிக்கவும் செய்கிறார்களோ அவர்கள் என்னை அடைவார்கள் நிச்சயம். 37½

---

1 அஸ்ய ஶ்ரீ ஸுப்³ரஹ்மண்யமஹாமந்த்ரஸ்ய ஸநத்குமார ருஷி: அநுஷ்டுப் ச²ந்த³: ஸுப்³ரஹ்மண்யோ தே³வதா । ஓம் வம் பீ³ஜம் ஓம் சம் ஶக்தி: ஓம் பு⁴ம் கீலகம் ஸுப்³ரஹ்மண்யப்ரஸாத³ஸித்³த்⁴யர்தே² ஜபே விநியோக³:

ஓம் வம் அங்கு³ஷ்டா²ப்⁴யாம் நம: । ஓம் வம் ஹ்ருத³யாய நம: ।
ஓம் சம் தர்ஜநீப்⁴யாம் நம: । ஓம் சம் ஶிரஸே ஸ்வாஹா ।
ஓம் பு⁴ம் மத்⁴யமாப்⁴யாம் நம: । ஓம் பு⁴ம் ஶிகா²யை வஷட் ।
ஓம் வேம் அநாமிகாப்⁴யாம் நம: । ஓம் வேம் கவசாய ஹும் ।
ஓம் நம் கநிஷ்டி²காப்⁴யாம் நம: । ஓம் நம் நேத்ரத்ரயாய வௌஷட் ।
ஓம் மம் கரதலகரப்ருஷ்டா²ப்⁴யாம் நம: । ஓம் மம் அஸ்த்ராய ப²ட் ।

பூ⁴ர்பு⁴வஸ்ஸுவரோமிதி தி³க்³ப³ந்த⁴: ।

த்⁴யாநம்

ஸவ்யே ஶக்திம் த³தா⁴நம் ஸரஸிஜஸத்³ருஶே ஶோப⁴மாநஹஸ்தே(அ)க்ஷமாலாம்
க்ருத்வா வாமம் கராப்³ஜம் ஸ்தி²தகடிதடே ஸவ்யஹஸ்தே(அ)ப்³ஜபுஷ்டம் ।
ஶுப்⁴ரம் ஶுப்⁴ரம் த்ரிநேத்ரம் த்ருணயநமநிஶம் ப⁴க்தஜயந்து ஸிந்தூ³ர தீரே
திஷ்ட²ந்திஷ்டா²ய ஹ்ருத்³யே ஶ்ரிதஜநஜயத: பாது மாம் ஶ்ரீ ஷடா³ஸ்ய: ॥

(க்ஷமாபணம்) ஏவம் ஜபம் [illegible]

ஜபம் முழுதுமான பிறகு.

[illegible] ஸ்ரீ [illegible] என்று தொடங்கி

[illegible] என்று. ந்யாஸம் செய்க.

### மந்த்ரம் ஜபம் இவைகளின் மஹிமையும் ஜபித்தற்குப் பயனும் ஸ்மிருதிகளில் கூறுவது.

[illegible] ||

(பொருள் ம என்பது மனதையும் த்ர என்பது ரக்ஷையையும் சொல்வதால் மனதின் ரக்ஷையுடன் கூடியது மந்திரம் என்னப்படும்.

ஜகாரோ ஜந்ம [illegible] பகார: பாபநாசந: ।

ஜந்ம [illegible] ।

(பொருள்) ஜ என்பது ஜன்மத்தின் ஒழிவையும் ப என்பது பாபத்தின் ஒழிவையும் தருவதால் பிறப்பையும் பாபங்களையும் தொலைப்பது ஜபம் என்னப்படும்.

[illegible] மந்திரத்தின்பயிற்சி இரண்டுவிதம் வாசிகோ [illegible] வாயினால் சொல்லப்படுவதென்றும் மனதினால் தியானிக்கப்படுவதென்றும் இருவகையாம்.

வாசிகோ [illegible] வாயால் சொல்வதும் இரண்டுவகையாகும் உச்சை: [illegible], உறக்கவென்றும் மெதுவாகவென்று மிருவகையாகின்றன.

உச்சை: [illegible] உறக்கஜபித்தால் ஒன்று கொன்றின் பயன்.

உபாம்சு [illegible] மெதுவாக ஜபித்தால் ஒன்றுக்காயிரத்தின் பயன்.

மானஸம் கோடிகுணம் மனதினால் ஜபிப்பது ஒன்றுக்கு கோடியின் பயன்.

---

1 ஸுப்ரம்மண்ய மந்திரத்தை குருமுகமாக உபதேசம் பெற்றுக் கொள்க.

[illegible] ௩௮

[illegible]

[illegible] ௩௯

இவ்விதம் ஸ்ரீப்ரம்மண்யர் உபதேசத்தைக் கேட்டு மனம் பூரித்து அந்த வீரபாகுவும் பகவானுடைய தர்சனம் தியானம் பூஜை, பணிவிடை இவைகளில் விசுவாஸத்தோடு குகனுடைய விபூதியையும் விச்வரூபத்தையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தான். 39

[illegible] ௪௩

ஓ புத்ரனே! இந்த அத்தியாயத்தை நித்யமும் படிப்பவர், கேட்பவர்களுக்கு உபத்திரவங்கள் எல்லாந் தீர்ந்துவிடும், ஸம்பத்துண்டாகும், சித்தர்கள் அவர்களை வணங்குவார்கள், பாபங்கள் தொலையும், பிதுருக்கள் திருப்தி பெறுவார்கள். ஆபிசாரம், பூதம், பிரேதம் முதலானவைகளால் நேரிடும் பீடைகள் தொலைந்துபோகும் உண்மையாய்ச் சொல்லுகிறேன். ராஜபயம் திருடர்பயம் அக்னிபயம் இவைகளும், ஜலபயமும் உண்டாகமாட்டாது. வியாதிகளை அணுகாது. அபமிருத்யு காலமிருத்யு பயமும் வேண்டியதில்லை. 43

[illegible] ௪௪

ஸ்கந்தஸாயுஜ்யமாப்னோதி ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம்॥

நாடோறும் இந்த அத்தியாயத்தை படிப்பவர் பரமசிவத்தின் குமாரனாகிய ஆறுமுகன் கிருபையால் புத்திரபௌத்திராதி ஸம்பத்துக்களுடன் பிரம்மஞானமென்னும் நிலையைப் பெற்று அந்தியத்தில் ஸாயுஜ்ய பதத்தை யடைகிறார்கள். ஸந்தேகமில்லை உறுதியாயும், ஸத்யமாயும் சொல்லுகிறேன். (என்று வ்யாஸர் ஸூதருக்குச் சொன்னார்) 41

இதி ஸ்ரீஸ்காந்தே புராணே உபரிபாகே

ஶங்கரஸம்ஹிதாயாம்

ஸ்ரீ ஜயஸ்ரீவாஸாரஸாரோத்த்ரே

த்ரயோதஶோऽத்யாய꞉

பதின்மூன்றாவது அத்தியாயம்

முற்றிற்று.

அத சதுர்தஶோऽத்யாய꞉

வ்யாஸ꞉ —

(உவாச)

ஸூத ஶ்ருணுஷ்வ கதாம் திவ்யாம் ஸர்வபாபௌகநாஶினீம் |

ஸர்வஸௌபாக்யஜனனீம் ஷண்முகஸ்ய மஹாத்மன꞉ ||

வியாஸர் சொல்வது:—

(உரை)

ஓ ஸூதமுனிவரே. ஸகலபாபங்களையகற்றுவதும் ஸகல ஸௌபாக்கியங்களை யளிப்பதும் ஆச்சர்யமுமான மகாத்மாவாகிய குக பகவானுடைய கதையைக் கேள். 1

விஶ்ராவிதம் ஹி ஸம்ஶ்ருத்ய ஶௌனகாத்யா தபோதனா꞉ |

சைவ ஶங்கரஸம்ஹிதைஷா ஸ்கந்தேஷா ஸாரோயம் ஶ்ருதி꞉ || 2

[illegible] ஸ்ரீ [illegible] ஸ்ரீவிஷ்ணு [illegible]

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

பராங்குசனான [illegible] விஶ்வரூபத்தை தர்ஶித்து தேவர்கள், கந்தர்வர்கள், ஸித்தர்கள் எல்லோரும் தங் களிருப்பிடம் சென்றபின் [illegible] தர்ஶித்த [illegible] பேரானந்தத்தில் [illegible] பொற்காலமேகம்போல் [illegible] கைமினி [illegible] போல் [illegible] ஆகிய வைத [illegible] சென்றார்.

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible] ।

[illegible] ॥

[illegible]

திருப்பார்க்கடலில் ஆயிரக்கால் மண்டபத்தில் பால்நுரை பால் ப்ரகாசிக்கும் மிருதுவான சேஷசயனத்தில் பள்ளிக்கொண்ட ஆதிபுருஷனும் ஸ்ரீ பூமியுடன்கூடினவரும் ஸனந்தர், நந்தர், விஷ்வக்ஸேனர், கருடன், அனேகம் ஆதி ஸித்தர்கள், ஸனகர்முதலிய முனிகள் கங்கை முதலான நதிகள், ஹிமவான் முதலிய பர்வதங்கள், ஸந்தானம் முதலிய தேவவிருக்ஷங்கள், காமதேனு, ஸித்தர்கள், ஸாத்யர்கள், வஸுக்கள் அப்ஸரஸ்திரீகள். 1 முக்திபெற்றவர்கள், பக்தர்கள், ஸர்வமுமற்று நாராயணனையே சிந்தனை செய்து ஆனந்தக்கடலில் முழ்கினவர்கள், ஐந்துகாலமும் அர்ச்சிப்பவர் இவர்களாலும் வேதங்கள், வேதாந்தங்களாலும் ஸேவிக்கப்பட்ட பரம்பொருளான ஸ்ரீ மன்னாராயணனை பிர்ம்மபுத்திரரான அந்தநாரதர் தர்சித்து அதயானந்தபரிதராக ரோமாஞ்சத்துடன் தண்டம்போல் கீழேவிழுந்து தெண்டனிட்டு அந்த மகாபுருஷனைக் கண்ட ஸந்தோஷத்தினால் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு அவருடைய தியானத்திலேயே திகைத்து நின்றார். 12

[illegible]

அந்த ஸமயத்தில் ஆதிபுருஷனாகிய ஸ்ரீமன்னாராயணன் அந்தப் ப்ரம்மபுத்திரரான நாரதமுனியை குசலப் பிரஸ்னம்செய்து

1 ஸாரூப்ய, ஸாமீப்ய, ஸாலோக்யம்.

வர்க்யபாத்பாதிகளாலும் உபசரித்து மகாமேருபோன்ற ஸ்வர்ணமயமான ஆஸனத்திலிருத்தி ஸகல தேவர்களாலும் பூஜ்யரும் லோகாபிமானக்தருமான ஓ நாரதரே! பார்ப்பவர்மகிழ்வுற தேகம் முழுதும் ரோமாஞ்சமும் முகத்தில்புஞ்சிரிப்புமுற்ற உம்மைப் பார்க்கும்பொழுது ஏதோ ஆச்சர்யத்தைக்கண்டு அதை என்னிடம் சொல்லவந்தவராகத் தோன்றுவதால் அதை சீக்கிரத்தில் சொல்லும் (என்றார்) இப்படி பகவான் சொல்லக்கேட்டு நாரதர் பதில் சொல்லுகிறார். 16½

ஷண்முகோ ப⁴க³வாந் ஶூரபத்³மம் ஹத்வா வயம் வ்யாஸ ॥ கஎ
ஶ்ரீ வல்லீதே³வஸேநாப்⁴யாம் ஸஹித: ஶம்பு⁴நந்த³ந: ।
பா⁴ரதாக்²யே மஹாக²ண்டே³ தாம்ரபர்ண்யாஶ்ச த³க்ஷிணே ॥ கஅ
ஸிந்து⁴தீரே ஜயந்த்யாக்²யே க³ந்த⁴மாத³நபர்வதே ।
நிவாஸம் க்ருதவாந் தே³வ: ஸர்வதே³வநமஸ்க்ருத: ॥ க௯
விஶ்வரூபம் த³ர்ஶிதவாநத்³பு⁴தம் வீரபா³ஹவே ।
த்ரிஸ்வதந்த்ரமுநிபி⁴ஸ்ஸஹ த்³ருஷ்டம் மயாபி ச ॥

ஷண்முகபகவான் சூரபத்மனை வதைத்தபின் வல்லீ தேவஸேனையுடன் பரதகண்டத்தில் தாம்ரபர்ணியின் தென்பக்கத்தில் ஸிந்துக்கரையில் கந்தமாதன பர்வதத்தில் ஜயந்தி க்ஷேத்திரத்தில் ஸகலதேவர்களாலும் ஸேவிக்கப்பெற்று அந்த ஸ்கந்தன் வீரபாகுவுக்கு காக்ஷிபளித்ததும் அதிஸபிககத்தக்கதுமான விஸ்வரூபத்தை திரிஸ்வதந்திரமுனிகளுடன் நானும் தர்சித்தேன். 20

பா⁴ரதாநாம் ஸமாயாமே வாயுஜாய ப்ரத³ர்ஶிதம் ।
விஶ்வரூபம் க்ஷயா தே³வ த்³ருஷ்டவாநஸ்ம்யஹம் விபோ⁴ ॥ உக

பாரதயுத்தத்தில் அர்ஜுனனுக்கு தேவரீர் காண்பித்த அழிவற்றதான விஸ்வரூபத்தைப் பார்த்திருக்கிறேன். 21

ஶங்கரேண க்ருபாபூர்ணம் ஸம்ஹாரகாரணாத்மநே ।
விஶ்வரூபமத்³பு⁴தம் ச ராவணாயாத³ர்ஶிதம் ஹி தத் ॥ உஉ

காலாக்நிருத்ரேண ததா நரநாராயணாச்ரமே ।
நாராயணாய முநயே விச்வரூபம் ப்ரதர்சிதம் ॥

தண்டகாரண்யத்தில ஸ்ரீராமன் வஸிஷ்டருபதேசப்படி ப்ரதிஜ்ஞையைப்பெற்று சிவனை யாராதித்து ப்ரஸன்னரான அந்த பரமேச்வரனிடத்தில் ராவணனை வதம் செய்ய பாசுபதாஸ்த்ர மும் லங்கையிற் சென்று ராவணனை வதைத்து ஸீதையோடுந் திரும்பி வருவதற்கனுக்ரஹமும் பெற்றபின் ஆனந்த பரவசனாய் பரமேச்வரனது விச்வரூபதர்சனத்திற் காசைப்பட அதை நிறைவேற்றுவதற்காக அந்த ராமனுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸையளித்து பரமேச்வரன் ஆதியந்தமற்றதும், அபூர்வமுமாக காண்பித்த விச்வரூபத்தையும் காலாக்னிருத்ரன் நர நாராயணாச்ரமத்தில் நாராயண முனிவனுக்கு காண்பித்த விச்வரூபத்தையும் நான் பார்த்திருக்கிறேன். 23

ப்ரஹ்மணே ஸ்ருஷ்டிஸாமர்த்யஸித்தயே பரமேச்வர: ।
பூர்வகல்பே புரா ஸ்வீயம் விச்வரூபம் ப்ரதர்சயத் ॥ ௨௪

ப்ரம்மாவுக்கு ஸ்ருஷ்டியில் திறமையுண்டாக பரமசிவன் பூர்வகல்பத்தில் முன் காண்பித்த விச்வரூபத்தையும் பார்த்திருக்கிறேன். 24

த்ருஷ்டம் மயா து தத்ஸர்வம் ததேவைகாக்ர்யசேதஸா ।
த்வாமத்ய ஸேவிதும் தேவ விஜ்ஞாபயிதுமாகத: ॥ ௨௫

நான்பார்த்த அந்த தர்சனமெல்லாம் இப்பொழுது நான் தர்சித்த விச்வரூபப் போலிராமையால் இந்த விசேஷக் காக்ஷியாகிய ஆச்சர்யத்தை தேவரீர் திருவடிகளில் ஸமர்ப்பித்து விக்ஞாபனம் செய்யவந்தேன். 25

இத்யுக்த்வா ஸ ஹநுமாந் நாரதேந ஸமாகத: ।
விஜ்ஞாபயது ஸ்வஹஸ்தாப்யாம் ஸ்துதிமிதீ: ॥ 26

கடாக்ஷகாந்த்யா கருணாரஸாம் க்ஷமாமாஸ்ருஜ ।
வக்ஷ்யாமி நாத ஸ்ரீ சம்போ தவஸ்வம் தவ விச்வம் ப்ரபோ ॥ 27

இந்தப்படி மகாத்மாவான நாரதரால் சொல்லக்கேட்டு பகவான் மந்தஹாஸங்களால் வைகுண்டம்முழுதும் பிரகாசிக்கச் செய்து கடைக்கண்ணால் ஆகாயத்தில ஸஞ்சரிக்கும் நாரதரைப் பார்த்து ஸ்ரீமானாகிய ஓ நாரதமுனிவரே! தத்துவங்களை அறிகிறவர்களில் சிறந்தவரே! உமக்கு தத்துவத்தை விளக்குகிறேன் 27

ரஹஸ்யாத்ரஹஸ்யதமம் ஶ்ருணுஷ்வ தபோதந |
அத ஏவ ஹி ஸம்ஶுத்த: ஸோமோமாதநயோ மஹ: ||

அத்யந்த ரகஸ்யமாகையால் ஓ தபோதனனான நாரதரே! கேளும் மகாபரிசுத்தராவீர். அந்த ஸுப்ரம்மண்யன், நானும் உமையும் சேர்ந்த மூர்த்தியாகிறார். 28

ஶிவஸ்ய பஞ்சவக்த்ராணி ஏகேகம் ஷண்முகஸ்ய ஹி |
ஹஸ்தாஷ்டகம் த்விதீயஸ்ய சதுர்ஹஸ்தசதுஷ்டயம் | த்வா
தஶைவ புஜதண்டாநாம் ஸ்கந்தஸ்ய பராக்ரமா: |
த்ரிஶூலஸ்ய ச சக்ரஸ்ய ஸர்வாதாரஸ்ய வைபவம் ||
ஶக்த்யாகாரேண ஸம்ஜாதம் ஶக்திர்குஹஸ்ய கரபூஷணம் |
ஸூர்யாகாரேண ஸம்ஜாதம் ஶிவநேத்ரம் ஸ்வரூபவத் ||
சந்த்ரவிஶேஷவிகாஶஶக்தி: ப்ரபஞ்சப்ரகாஶிகா |
ஸோமாகாரேண ஸம்ஜாதா மம வாமநேத்ரஸம்பவா || தா
ந்யாவுபே தேவஸேநாவல்ல்யோ ஸாக்ஷாத்பரஶக்திகா ||

சிவனுடைய ஐந்து முகமும் எனது ஒரு முகமும் சேர்ந்து குகனுக்கு ஆறுமுகம்; சிவன் எட்டுக்கைகளும் என் நான்கு கைகளும் சேர்ந்து குகனுக்குப் பன்னிருகைகளும், ஸர்வாதாரமாய் சிவனால் தரிக்கப்பட்ட சூலமும், எனது சக்ரமும் சேர்ந்து குகனுடைய கரத்தை அலங்கரிக்கும் வேலாயுதமாக பவித்து, ஸூர்யஸ்வரூபமும் சிவனுடைய வலது நேத்திரத்திலிருந்து உண்டானவருமான பிரபஞ்சப்பிரகாசமான வல்லியென்னும் விசேஷப்பிரகாசசக்தியும், சந்திரஸ்வரூபமும் என்னுடைய இடதுகண்ணிலிருந்துண்டானவளுமான தேவஸேனையென்ற ஆவரண சக்தியும் குகனுடைய இருதேவிமாருமானார்கள். 32½

ஶக்திஉயஷ்டிஞாநேவாயா ஸாக்ஷாச் ப்ரஹ்மேதி நிர்ணாயஃ ॥ ௧௧

ப்ரஹ்மஶப்தவாச்யோ வ்யாஸோ ஶம்போர்க்ஷமா தகஃ ।
தந்த்ரேஷ்டாஹம் ஸதா வாஸி ப்ரஹ்மண்யஸ்தாசமே ஸௌ ॥
ஸுப்ரஹ்மண்ய இதி ஶ்ரேயஸாக்ஷாத் ஸம்ஸாரமோசகஃ ॥ ௧௪½

இப்படி இரண்டு ஶக்தியுடன் கூடின அந்த ஆறுமுகன் ப்ரத்யக்ஷப் ப்ரம்மம் என்றே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ப்ரம்மபப்த வாசயர்களாகிய நானும், பதினெட்டு நக்ஷத்ரமூர்த்தியான ஶம்புவும், ஸுப்ரம்மண்யரே. அவரிடம் நாங்களிருவரும் வஸிக்கின்ற காரணத்தால் ப்ரம்மண்யம் அதிகரித்து ஸுப்ரம்மண்யரென்று சொல்லப்படுகிறார். அவர் ஸ்வயமாகவே ஸம்ஸாரமோசனம் செய்கிறார். 34½

அஷ்டாக்ஷரபஞ்சாக்ஷரயோஸ்ஸம்மேளநாத் ஸஹா ॥
ஷடக்ஷரோ ஜாயதே ஸ்ம ஸாக்ஷாச் ச்சிவஸ்ய மந்த்ரகஃ ।

அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) பஞ்சாக்ஷரம் (ஓம் நமஶ்ஶிவாய) என்ற இரண்டு மந்திரங்களும் சேர்ந்தே ஸாக்ஷாத் பரப்பிரம்ம ஸ்வரூபமான ஷடக்ஷர (ஶரவணபவ) மந்திரராஜன் ஜனனம் நேர்ந்தது பெற்றதாயிற்று, 35½

மண்சக்ரபாஷாணகாஷ்டவிவிதாகாரபேதகாஃ ॥
தத்வம் ஶாம்பரஃ க்ஷேத்ரம் ஸர்வமேவ ஸுப்ரஹ்மண்யம் ।

மண் சக்கான்கல் மணல் பாறை இன்னுந்து பேதங்களாக விருக்கும் பர்வதங்கள் யாவும் ஸுப்ரம்மண்யருக்கும் எனக்கும் க்ஷேத்திரங்கள் என்று நிஶ்சயிக்கப்பட்டிருக்கிறது. 36½

ஶோகாகாரா ஶஷ்டீ ஸகலா ஶிவாகாராஸ்ய ஸகலதாஃ ॥ ௧௭

வெங்கடாத்ரௌ மஹாதேஶே ஸுஷஹஸ்ய ஸரஸீ தட:।
தத்ர ஸந்நிஹிதம் ஸ்ரீஙம் ஸுஷஹஸ்ய வ மத்தேவ வ॥ கூ அ

பூமி முழுவதும் எனது ஸ்வரூபமும், பர்வதங்கள் முழுவதும் ஶிவரூபமுமாகின்றது. வேங்கடகிரி என்ற மேன்மை தங்கிய மலையில் ஸுப்பிரம்மண்ய தீர்த்தமிருக்கின்றது. அவவிடத்தில் நாங்களிருவரும் ஒரு வடிவமாய் ஸான்னித்தியம் செய்கிறோம். 38

லக்ஷ்மீ பூமி நீளா க்யா: ஶ்ரீ ஹரே: கலா மம।
வதுர்த்யாதிவஷ்ஷ்டயோ ஶுத்தா: ஶிவா: கலா:॥
தந்த்ரா: க்ருத்திகா: ஷட் ச ஸா தேவமஹிமா ஸாதகா॥ கூகூ

லக்ஷ்மி, பூமி, நீளா என்ற என்னுடைய மூன்று கலைகள் ப்ரதமை, த்விதியை, திருதியை என்ற திதிகளும், சதுர்த்தி பஞ்சமி, ஷஷ்டி இம்மூன்றும் ஶிவகலைகளுமாகின்றன. ஹரிஹர ஸ்வரூபமான இந்த ஆறு தினங்களும் கிருத்திகா தேவிகளாம். 39½

தஸ்யா: பூஜா ஜபவ்ரதோபவாஸாதி தத்தஹோமா: ஸஹஸ்ர ஶி கா:॥ சுo

ஶிவவ்ரதாநி யாநி வைஷ்ணவாநி வ்ரதாநி ச।
தேஷாம் கர்த்ருணாம் க்ருத்திகா காமதோஹிநீ॥ சுக

கார்த்திகை நக்ஷத்திரத்தன்று ஸுப்ரம்மண்யனைப் பூஜை செய்வதும், உபவாஸமிருப்பதும், தானம், ஹோமம் முதலியவைகளைச் செய்வதும் அதிகப் பயனைத் தருகின்றது. ஶைவங்களாயும் வைஷ்ணவங்களாயும் எந்தெந்த விரதங்களுண்டோ அவைகளை கார்த்திகையன்று நடத்துவதால் கல்போக்தமான பயனைப் பெறுவதுமன்றி அவரவர்கள் வேண்டுகோளையும் பெறுவார்கள். 41

ஸ்கந்தோ ஸாவித்ரேவஸ்யாஷ்டகாலோ மஹாஜ்ஞ வேணிக।
மகாரம் க்ருத்யம் ஸ்வாதூ ப்ரயூதிவேதாஶ்வோஷிது॥ சுஉ

[illegible]

[illegible]

[illegible]

ஓ நாரதரே! அகாரம் பிர்ம்மாவும், உகாரம் நானும், மகாரம் ருத்திரனும் என்று வேதாகமங்களில் கூறப்பட்டிருக்கிறது. பிர்ம்மாவும் ருத்ரனும் குகனுக்கு இருபாகங்களிலும் நான் நடுவிலுமாக வஸிக்கிறோம். ஸுப்ரம்மண்யனே முடிவில்லாத ஸம்ஸாரத்தின் ஸாரத்துடன் ப்ரணவ ஸ்வரூபமாயிருக்கிறார். ஆகையால் ஓ நாரதரே இது மிகவும் ரகஸ்யம். 43½

[illegible]

[illegible]

ஓ நாரதரே! அவருடைய எல்லாக் கதைகளையும் ஹரிஹர ஸ்வரூபமாகவும் பிரம்மாண்டத்தை அவரது ஸாரப்யமாகவும் அறியும். 44½

[illegible]

[illegible]

[illegible]

வியாஸர் சொல்வது: —

இப்படி நாரதருக்கு உபதேசித்தபின் ஸுப்ரம்மண்யரின் சரித்திரத்தையே தியானித்து மகிழ்ந்து ஸகலலோகங்களாலும் ஸேவிக்கப்பெற்ற அந்த பங்கஜலோசனனாகிய மகாவிஷ்ணு ஆனந்த ஸமுத்திரத்தில் மூழ்கினவராய் ஸ்வஸ்தமாயிருந்து. 45½

[illegible]

[illegible]

[illegible]

பிறகு கந்தமாதனபர்வதத்தில் ஸிந்து தீரத்தில் ஜயந்தி க்ஷேத்திரத்தில் குகனுடன் வஸிப்பதாக நிஶ்சயித்து லக்ஷ்மி பூமியுடன் கருடாரூடராய் நாரதரால் பின் செல்லப்பட்டு ஒரு நிமிஷத்தில் குகாலயம் வந்தார். 47½

[illegible] ॥ ௪௮

[illegible] ॥ ௫௧

குகனால் செய்யப்பட்ட விஶேஷமான பூஜையைப்பெற்ற அந்த விஷ்ணுவும் குகனை விஶேஷமாக பூஜித்து கிரிஸ்வதந்திர முனிகளுக்கும் நாரதாதிமுனிவர்களுக்கும் அபீஷ்டப்ரதமான ஸ்தல மாகாத்மியத்தை ஒருவர்கொருவர் ப்ரகாஶிக்கச்செய்து கொண்டு விஷ்ணுவும் அவ்விடத்திலேயே வஸித்தார். பிர்ம்மாவும் ஐந்தாவது முகம் கிடைப்பதற்காக அவ்விடத்திலேயே வாஸம் செய்கிறார். ஸகல புருஷார்த்தங்களையும் கொடுக்க தேவயானைக்கு வரமளித்த லோகநாதனும் ஸுப்ரம்மண்யரின் குணங்களால் மோகிக்கப்பட்டு அவரது ஸமீபத்திலேயே வஸிக்கிறார். 51

[illegible] ॥ ௫௨

[illegible] ॥ ௫௩

ஸமுத்திரதீரத்தில் ஜபத்தைத்தரும் ஜயந்தீ எனக்கீர்த்திபெ
ற்ற க்ஷேத்திரத்தில் ஜயகோஷத்துடன் கூடிய ஸகந்தபுஷ்கரணி
க்கருகில் குகாலயத்தில் இப்பவும் ப்ரத்தியக்ஷமாய் அந்த குகன்
ருஷார்த்தங்களை யளித்து ரக்ஷித்துக்கொண்டிருக்கிறர். ௫௨

கீர்த்தநம் வந்தநம் த்யாநம் பூஜநம் பாதஸேவநம் ॥
ஷண்முகஸ்ய க்ருதம் யேஷாம் தே தேவே ஹரிஹர
ப்ரியா: ॥ ௫௩,

எவர்கள் குகனுடைய நாமஸங்கீர்த்தனமும், தியானமும்
சய்வதுடன் அவரை யாராதித்து நமஸ்கரிக்கவும் செய்கிறா
ர்களோ அவர்கள் ஹரி, ஹரன், இருவர்கட்கும் பிரியராகிறார்கள்.

இதி ஸூதமுகாச் ச்ருத்வேதிஹாஸம்
ஸநகாத்யாச் ச நிரா ஸந்தோஷிதமநஸ: ।
அபி ஸூதமுகசந்த்ராயஸ்ய யோகீ
ஸ்வஸ்தி ஷண்முகம் ஷண்முகம் ஹ்ருதயே ப்யதுள ।

இந்தப்பிரகாரம் மனதுக்குப் பிரியகரமாய் உபதேசிக்க
இதிகாஸத்தை ஸகல புருஷார்த்தத்திற்கும் காரணமாகவெண்ணி
ஸநகமுனி தன்னிருதயத்தில் பக்திகளுடன் ஷண்முகனை சிந்தித்
தார். (என்று ஸூதர் நைமிசாரண்யவாஸிகளுக்குச் சொன்னார்)

இதி ஸ்ரீஸ்காந்தே மஹாபுராணே உபரிபாகே
ஸநத்குமாரஸம்வாதே
ஸ்ரீ ஜயந்தீபுரமாஹாத்ம்யே
பஞ்சதசோத்யாய:

பதினைந்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

அத ஷோடசோத்யாய:

ஸூத: —
(உபஜாதி)
பாதஸேவகமௌலீஷ்ட்ராநி ஸ்கந்தஸ்ய தே தேவவரஸ்ய ।
யஸ்யாக்ரஸ்யாவதாரஸ்ய காருண்யாந்நாதோ
த்யாவ ॥ ௧

வியாஸர் சொல்வது ;—

(உரை)

இன்னும் இந்த ஸ்தலவைபவத்தைக் குறித்துச் சொல்லுகிறேன். இதைக் கேட்பவர் ஸகல பாபங்களும் நசித்து நிர்ப்பாபமாய் ஸ்வர்க்கத்தைப் பெறுவார்கள். 1

पुरा दुर्वाससा प्राप्ता पारिजातस्रगुत्तमा |
तां गृहीत्वा [illegible] जगामाकाशवीथिकाम् ||२

ऐरावतसमारूढं देवेन्द्रं [illegible] |
[illegible] देवराजस्य ददौ [illegible] ||३

முன்னொருகாலத்தில் பரமசாம்பவனான துர்வாஸமுனி தனக்கு கிடைத்த பாரிஜாதமாலையை எடுத்துக்கொண்டு ஆகாச மார்க்கமாக வரும்வழியில் ஐராவதத்தில் ஏறிப்போகும் இந்திரனை ஸந்தித்து அந்த மாலையை அவனிடம் கொடுத்தார். 3

तां गृहीत्वा देवराजो [illegible] |
तां स्रजं गजराजस्य मस्तके [illegible] ||४ स
गजस्तां गृहीत्वा च करेणाघ्राय [illegible] |

இந்திரன் அம்மாலையை வாங்கி அந்த முனியை அலக்ஷியமாக ஐராவதத்தின் மஸ்தகத்தின் மீதெறிய அதுவும் அம்மாலையை வாங்கி கையால் கசக்கி தூரத்தில் எறிந்துவிட்டது. 4½

तां दृष्ट्वा [illegible] दुर्वासा मु-
निपुङ्गवः ||५
शशाप देवराजानं त्रैलोक्यस्य हिताय च |
[illegible] ||६
[illegible] |
[illegible] ||७

இவையெல்லாம் பார்த்திருந்த துர்வாஸமுனி கோபத்தினால் கண்கள் சிவக்க மூவுலகுக்கும் க்ஷேமத்தைக்கருதி இந்தி

னைப் பார்த்து ஓ தேவராஜனே ! நீ ஐஸ்வர்ய கர்வத்தினுல் ன்னை மறந்து என்னை அவமானித்தபடியால் நீ என் ஸாபத் னுல் கொஞ்சகாலம் ஐஸ்வரியத்தை இழக்க கடவை என்று பித்தார். 7

காருண்யேந ததா ஹவிதா தேவேந்த்ரஸம்யுத: ।
யதா ஸ்வஹாவீநம் தேவ ஶக்ரேதேஹ்ய துராயிநீ ॥ அ
ஸ்ஸாயிகாரிதா லக்ஷ்மீ ஸஞ்சாரிஷ்யத்யாயிநீ ।
ததாநீம் ஸ்ரீ கடாக்ஷேண ஹவிதா ஸாபமோசநம் ॥ கூ

இனி ஒருகாலத்தில் அமிருதத்திற்காக ஸமுத்திரமதனம் டக்கும். அந்த அமிர்தமதனத்தில் பிரம்மாதி தேவர்களுக்கும் கத்தான ஐஸ்வர்யத்தையும் அவரவர்களுக்குரிய அதிகாரங் ளேயும் கொடுப்பவளும், பக்தர்கள் கோரிக்கையை நிறைவே றுபவளுமான மகாலக்ஷ்மி எப்பொழுது அவதரிப்பாளோ புத்தருணத்தில் உனது ஸாபத்திற்கு அந்த லக்ஷ்மியின் கடா க்ஷத்தினுல் மோசனம்வரும் என்று ஸாபவிமோசனமும் அளித் ார். 9

ஸ்ரீ கடாக்ஷஸ்ய லாபாய தாவகாநு சதும்ஸ்ரீதஃ ।
ஆராதயஸ்வ ஸததம் ஷண்முகம் கந்தமாதநே ॥ க0

லக்ஷ்மிதேவியின் கடாக்ஷம் கிடைப்பதற்காக நீ அவளது திருஅவதாரம் வரையிலும் சோம்பலில்லாதவனுய் கந்தமாதன ர்வதத்தில் ஆறுமுகப்பிரபுவை ஆராதிப்பாயாக (என்றுர்). 10

ஐதத்ஸ்ருத்வா ததா தேவ: ஸுராதிப: ஸ்தரஸ்வது ।
ஸம்ப்ராபி தாத்ருஸாவஸாநே ஷண்முகம் ஸ
ரஸ ॥ கக

ஸ்கந்த லிம்யஸ்ய ஸம்ஸ்ரீயம் வஞ்சாங்ஹவாரிஜம் ।
ஸத்வா வசத்த்வ ஸம்லேவ்யாஹா வயிஸ்வா ப்ரஜஜ்ஞே ॥
ஸம்ப்ரஹாண்யோபாராய ஸ்கத்வா லோகத்ருஷ்ட
நேகஸஃ ॥

ஸவம் ப்ருதிஷ்டிநா காலத்து ஸந்தியேன ஸஸதிஸ
ஸஃ ॥ கஉ

இந்தப் பிரகாரம் துர்வாஸமுனிவன் சாபமோசனமும் கொடுத்துச் சென்றபின் இந்திரனும் தனக்கு நேர்ந்த பாபத்தை யனுபவித்துக்கொண்டு குகனை நினைத்து வேகமாக திருச்செந்தூரில் சென்று வதனாம்பதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தானம், ஹோமம், தர்ப்பணம், ஜபம் முதலியதுகளால் ஸுப்ரம்மண்யரை ஆராதித்து அநேகம் ஸ்தோத்திரங்களாலும் ஸ்துதித்து இப்படி நாடோறும் அவர் ஸன்னிதியில் வஸித்தான். 13

அத² தே³வா த்³விஜஶ்ரேஷ்டா² ஸமாயாதா: க்ஷீரஸாக³ரம் |
ஸமாயாதாஶ்ச ஸம் மஹாஸுரை: ப்ராப்தா மஹாமதிநா விஷ்ணுநா ஸஹ ||௧௪
அத² ஸமுத்³ர மத²நாத்³ ஶ்ரீ: ஸமுத்பந்நா தே³வ நாயகா |
யதா² ஸா ஸம்போ⁴ஜாத: ஸா புரா க்ருதயுகே³ ||௧௫

பிறகு தேவர்கள் அமிருதலாபத்திற்கு பாற்கடலை கடைய அதிலிருந்து ஸர்வலோக சரண்யையான மகாலக்ஷ்மி அமிருதத்துடன் அவதரிக்க அந்த லக்ஷ்மியின கிருபாகடாக்ஷத்தினால் கிருதயுகத்தின் மததியில் இந்திரன் சாபத்தினின்று விடுபட்டு முன்போல் தன் பதவியை யடைந்தான். 15

ஈத்³ருஶீம் ஸம்பத³ம் த்³ருஷ்ட்வா தே³வராஜஸ்ய வீக்ஷ்ய ச |
பௌராவதோ மஹேந்த்³ரஸ்ய விஜயீ ஸுதேவஶ்ச ||
ஸம்ப்ராப்த மஹேந்த்³ர ராஜா ஸா வரதாயித: |
ஸஹ தே³வ ந ஸந்தே³ஹ: ஸ்வர்கே³ ஸுகீ² ச பூ⁴பய: ||
தத்³வத் பரிஶுத்³த⁴ம் கா³ஹநீயா த்³ருஹம் |
இதி க்ருத்வா ஸ்துதிம் ஸாயுஜ்யஜ்ஞாநஜ்ஞோ ஸுப்³ரஹ்மண்ய: ||௧௮
கா³ஹஸ்ரோதஸாம் கா³ஹம் வைவஸ்வதாம் ப்³ருஹந் நதா³ந் |

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௦ ॥

ஐராவதமோ வென்றால் இந்திரனுக்கு முன்கிடைத்த பாபம் நம்மாலல்லவோ ஏற்பட்டது என்று அந்த தேவராஜனைப் பார்த்து வருத்தமுற்று நம்முடைய புத்தியீனத்தினால் நமதிந்திரன் பாபத்திற்குள்ளானான். ஆகலால் நான் ஸம்பமன்னியில் ஸ்வாமித் துரோகியானேன். அப்பாபம் நீங்க நானும் குகனை யாராதிக்கிறேனென்று நினைத்து பிரம்மபுத்திரராகிய நாரதரிடம் குஹாராதனவழியையுணர்ந்து வேலாயுதருக்கு பிரியமான ஜயந்திக்ஷேத்திரத்தை யடைந்து வதனாரம்பதீர்த்தத்தில் குளித்து திரிஸ்வதந்திரர்களை நமஸ்கரித்து நாள்தோறும் பஞ்சக்ரோச யாத்ரை (பத்துமைல் கால்நடை)யும் செய்து இப்படி ஐந்து நாள் இரவும் பகலும் குகனை யாராதித்தது. 20½

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௨௨

தபோமூர்த்தியும் ஜகத்குருவுமான அந்த ஆறுமுகக்கடவுளனுக்கிரகத்தினால் ஸ்வாமித்ரோகத்தினால் ஏற்பட்ட பாபத்தினின்றும் விடுபட்டு அபீஷ்டங்களைப்பெற்று ஸமாதான மனமுடன் ஸ்வர்க்கலோகம் சென்று மறுபடியும் பார்வதீ குமாரனை ஸ்வர்ணத்தாமரைகளால் ஆராதித்தது. 23

[illegible]
[illegible] ௨௩

இன்னும் ஸுப்ரம்மண்ய க்ஷேத்திரம் அதிஶயிக்கத்தக்க அனேக ரகஸ்யங்களுக்கு இருப்பிடமென்று வேதமுணர்ந்தவர்கள் அறிகிறார்கள். 24

**வாராணஸீநிவாஸா: கேசிதஷ்டௌ தத்ர ஸமாகதா: ।**
**காஶ்யாம் வஸந்தோ முநயோ விஶ்வநாதேந சோதிதா: ॥**
**ஶ்ரீஜயந்தீம் ச ஸம்ப்ராப்ய தபஶ்சக்ருர்த்ருடவ்ரதா: ।**
**சிரம் ஷண்முகமுத்திஶ்ய தத்ர தேவஸ்ய ஸந்நிதௌ ॥**
**தத: ப்ராப்தாபிலஷிதா: ப்ரஹ்ருஷ்டா: ஸர்வ ஏவ ஹி ।**
**ஸ்தலமாஹாத்ம்யஸம்யுக்தாம் வாசமூசுர்த்ருடவ்ரதா: ॥**

முன் ஒருகாலத்தில் காசிவாசிகளான எட்டு முனிவர்கள் விஶ்வநாதரால் ஆக்ஞை கொடுக்கப்பட்டு ஜயந்தீக்ஷேத்திரம் வந்து ஸந்தோஷத்துடன் வஸித்து அவ்விடத்திலே முருகன் ஸன்னிதியில் தவம் செய்து பரீக்ஷத்தில் தங்கள் இஷ்டத்தைப் பெற்ற பேரின்பத்தால் ஒருவர்க்கொருவர் ஸ்தலத்தின் மகிமையை வர்ணித்ததாவது. 27

**வஸிஷ்ட: —**

**பூமௌ ஸ்தலாந்யநேகாநி புக்திமுக்திப்ரதாநி வை ।**
**ஸர்வாணி ஸ்தலஸ்யாஸ்ய ந்யூநாந்யேவ ந ஸம்ஶய: ॥**

வஸிஷ்டர் சொல்வது:—

இப்பூமியின்கண் போகமோக்ஷங்களைத் தருவதான அனேகம் ஸ்தலங்களிருப்பினும் அவையெல்லாம் இதற்கு கீழ்ப்பட்டவைகள்தான், ஸந்தேகமில்லை (என்றார்) 28

**வாமதேவ: —**

**ப்ரஹ்மஹா மத்யபாயீ ச வேதஶாஸ்த்ரவிதூஷக: ।**
**வஸந்நத்ர ஶுத்திமாப்நோதி ந ஸம்ஶய: ॥ ௨௯**

வாமதேவர் சொல்வது:—

பிரம்மஹத்தி செய்தவனும், ஸுராபானம் செய்தவனும், வேதம், சாஸ்திரம் இவைகளைத் தூஷித்தவனும், இவ்விடத்தில்

ஒருநாள் வஸிப்பானேயாகில் ஸம்பயபன்னியில் பரிபூர்த்தனுவான் (என்றார்). 29

ஜாபாலி: —

ப்ருதிவ்யாம் யானி தீர்த்தானி ஸாகராந்தானி ஸர்வ-
ஶ: ।
தானி ஷண்முகவக்த்ராப்த்யா நார்ஹந்த்யேவ ந ஸம்ஶய: ॥

ஜாபாலி சொல்வது :—

ஓ பிரம்மகுலத்தோர்களே! இப்பூமியில் ஸமுத்திரப்வரையில் எண்ணிறந்த தீர்த்தங்களிருப்பினும் அவைகளெல்லாம் இந்த ஸ்கந்த புஷ்கரணிக்கீடாகாது ஸந்தேகமில்லை (என்றார்). 30

காஶ்யப: —

யாவஜ்ஜீவம் ப்ரயாகே து மாகே மஜ்ஜதி யோ நர: ।
ஸக்ருத்க்ருத்திகநக்ஷத்ரே ஸ்நாநாத் கார்த்திகேயஸ்ய ஸந்நி-
தௌ ॥
தத்பலம் கோடிகுணம் லப்ஸ்யதே நாத்ர
ஸம்ஶய: ॥ ௩௧

காஶ்யபர் சொல்வது:—

ஆயுள்வரையிலும் மாகமாதத்தில் 1 பிரயாகையில் ஸ்நானம் செய்வதாலுண்டாகும் புண்யத்தில் நூறுபங்கு அதிகம் புண்யத்தை ஸிந்துஸ்தலத்தில் கார்த்திகைநக்ஷத்திரத்தில் ஸுப்ரம்மண்ய ஸன்னிதியில் ஒருதடவை செய்யும் ஸ்நானத்தினால் அடைகிறான். ஸந்தேகமில்லை (என்றார்) 31½

மார்கண்டேய: —

வத்ஸரேணார்ஜிதம் புண்யம் யத்காஶ்யாம் முனி-
புங்கவா: ॥ ௩௨
தல்லபேதைகவாஸேந யாதி பௌராணிகீ ஶ்ருதி: ॥

மார்கண்டேயர் சொல்வது:—

ரிஷிஶ்ரேஷ்டர்களால் காசியில் ஒருவருஷத்தில் ஸம்பாதிக்கப்படும் புண்ணியத்தை இந்த திருச்செந்தூரில் ஒருநாள் வஸிப்பதினால் பெறலாமென்று ஸ்மிருதி கூறுகின்றது. 32½

1 கங்காநதியும் யமுனாநதியும் கூடுமிடம்.

கௌதம: —

[illegible] ॥௩௧

[illegible] ॥௩௨

கௌதமர் சொல்வது:—

க்ஷாமகாலத்தில் ஆயிரக்கணக்கான யுகங்களளவும் அன்ன தானம் செய்தாலும அந்த புண்யத்தைகாட்டிலும் அதிகம் புண்யத்தை இவ்விடத்தில் வஸிப்பதினால் பெறலாம் ஸம்சயமில்லை (என்றார்.) 33½

மௌத்கல்ய: —

[illegible] ॥௩௪

[illegible]

[illegible] ॥௩௫

[illegible]

மௌத்கல்யர் சொல்வது:—

தர்பையின் நுனியில் எவ்வளவு ஜலம் தங்குமோ அவ்வளவு ஜலத்தைப் பானம்செய்து வேறு ஆகாரமின்றி ஒருவருஷம் காமம் கோபம் இவைகளையொழித்து தவம் செய்வதினால் பெறும் பய னிலிருந்து கோடிப்பங்கதிகம் பலனை யிந்தஸ்தலவாஸத்தால் பெறுகிறனென்று உறுதியாய் கூறுகிறேன். இது ஸத்யம், ஸத்யம் (என்றார்). 35½

விஶ்வாமித்ர: —

[illegible]

[illegible]

[illegible] ॥௩௭

விச்வாமித்ரர் சொல்வது:—

நூறு அச்வமேதங்களாலும் ஆயிரம் வாஜபேயங்களாலும் ஆயிரம் அக்னிஹோத்திரங்களாலும் கிடைக்கும் பயனைக்காட்டிலும் கோடிப்பங்கு அதிகம் பயனை இந்த வஸிப்பதினால் பெறுகிறான். (என்றார்) 37

[illegible] ||௩௮

[illegible] ||௩௯

இந்தப்படி ப்ரம்மரிஷிகள் கூறியிருக்கிறார்களென்று முனிகள் முன்பில் ப்ரம்மாவும் சொல்லியிருக்கிறார், ஓ மகாபுத்திமானான குழந்தாய்! இந்த லிங்க ஸ்தலத்தின் பெருமையை நானுனக்குச் சுருக்கிச் சொன்னேன். விஸ்தாரமாகச்சொல்லவில்லை. ஆயுள் முடியும்வரை மாகமாஸத்தில் பிரயாகையில் ஸ்நானம் செய்யும் பலனை இந்த க்ஷேத்ரத்தில் ஒருமாஸம் வஸித்தலாலடைகிறான். 39½

[illegible] ||௪௧

மோக்ஷத்தை யளிக்கும் த்வாரகையில் மாகமாஸத்தில் ஸ்நானம் செய்த பயனைவிட அதிகம் பயனை ஸ்கந்தபுஷ்கரிணியில் ஸ்நானம் செய்வதினால் பெறலாம். எதுவரையிலும் ஸ்கந்த புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யாமலிருக்கிறானோ அதுவரையில் பாபங்கள் பாபிகளின் தேகத்தைவிட்டு ஒழிவ

தில்லை. ஸ்கந்த புஷ்கரணியில் விதிப்படி ஸ்நானம் செய்வதினால் பூதனாவான். 41½

[illegible]

திருடனும், ப்ராத்திரஸ்திரீயைப் புணர்ந்தவனும், தேவர்கள், ப்ராம்மணர்கள், இவர்களை நிந்திப்பவர்களும் இந்தலிங்கஸ்தலத்தில் ஒருநாள்வஸித்தால் அப்பாபங்களினின்று விடுகிறார்கள். ஸம்சயமில்லை. பிரம்மஹத்தி, பசுஹத்தி முதலிய பாபங்களை ஆயிரக்கணக்காகச் செய்தாலும் லிங்கஸ்தலத்தில் வஸித்தால் அந்த பாபங்களினின்று ஸந்தேகமின்றி மோசனமடைகிறான். எவன் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று லிங்கஸ்தலத்தில் வஸிக்கும் ப்ராம்மணரை ஸேவியாமலிருக்கிறானோ அவன் சந்த்ரஸூர்யர்கள் உள்ளவரையில் கழுதையாகப் பிறக்கிறான். 44½

[illegible]

கழுதையானாலும் இந்த லிங்க ஸ்தலத்தில் மரிக்கதானால் மறுபிறப்பு ஒழிந்து மோக்ஷத்தை யடைகின்றன. இதில் ஸம்சயமில்லை. 45½

[illegible] ॥௪௬॥

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஓ மகாபுத்திமானான பாலகனே! மனதுவாக்குகளுக்கு எட்டாத ஸுப்ரம்மண்யருடைய வைபவ ரகஸ்யத்தை உனக்குச் சொல்லுகிறேன் கேள். முதல் 1 யாமத்தில் ஸரஸ்வதீரமணனான ப்ரம்மா, ஷோடச(பதினாறு)உபசாரங்களினால்நாள்தோறும் ஸுப்ரம்மண்யரைப் பூஜிக்கிறார். அதுபோல் இரண்டாவது யாமத்தில் முனீச்வரர்களும், மூன்றாவதுயாமத்தில் ஸித்தர்கள், கந்தர்வர்களும், நான்காவது யாமத்தில் திக்பாலர்களுடன் இந்திரனும், அந்த பார்வதீகுமாரனை ஆராதிக்கின்றார்கள். 49

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

இரவில் முதல் யாமத்தில் அக்னிகுமாரனான குகனை லக்ஷ்மி முதலான எல்லா சக்திகளும், இரண்டாவது யாமத்தில் குஹ்யகர்கள், பன்னகர்கள், தேவர்களும், மூன்றாவது யாமத்தில் அந்த சம்பு புத்ரனை தேவஸேனையுடன் வல்லியும், நான்காவது யாமத்தில் கார்த்திகேயனை அதி பக்தியால் கங்கை முதலான எல்லா தீர்த்தங்களுடன் காரணபுருஷரான ஹரியும் பூஜிக்கின்றார்கள் இப்படி ஆச்சரியகரமான ஜயந்தீபுரத்தின் வைபவத்தை நன்றாயுனக்குச் சொன்னேன். 53

---

1 யாமம் என்பது 7½ நாழிகை நேரம்.

அந்யத்ரஹஸ்யம் வக்ஷ்யாமி குஹவாஸஸ்ய தேவதே வத |

ஸத்ஸந்தாநப்ரதம் நாம ததைஶ்வர்யப்ரதம் ததா |

குமாரப்ரீதிஜநகம் ஸத்ய: ப்ரத்யயதம் ததா |

வக்ஷ்யாமி ஸர்வபாபக்நம் ஸாதரம் ஶ்ருணு வத்ஸக ||

ஸுப்பிரம்மண்யரின் வைபவமாகிய வேறு ஒருரகஸ்யத்தைச் சொல்லுகிறேன். ஸத்புத்திரபௌத்திராதி வம்ஸவிருத்தியை யளிப்பதும் ஐஸ்வர்யத்தைத்தருவதும் ஸுப்ரம்மண்யப்பிரஸாதம் பெற்றோமென்று உடனே விஸ்வாஸத்தைத தருவதும் ஸகலபாபங்களையும் நாஸம் செய்வதுமாகையால் ஓ புத்திரனே! சற்று நிதானித்துக் கேள். 55

அதிதிர்தேவஜநநீ புத்ரகாமா மஹாமதி: |

வைணிகம் நாரதமுநிம் ப்ரணத்ய ப்ரஹ்மநந்தநம் ||56||

ஐஶ்வர்யம் சைவ ஸந்தாநம் யேந ஸ்யாத்தத்வத ப்ரபோ |

இத்யா ப்ரார்த்திதோ ஹ்யேவம் நாரதோ பகவாந் ருஷி: ||

தேவமாதாவான அதிதி புத்திரவாஞ்சையால் வீணாகானம் செய்யும் ப்ரம்ம புத்திரரான நாரதரை நமஸ்கரித்து ஓ ப்ரபுவே! ஐஸ்வர்யமும் ஸந்தானமும் எதினால்கிடைக்குமோ அந்த உபாயத்தை உபதேஸித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க பகவானை நாரதரிஷி சொன்னதாவது. 57

ப்ரஹ்மண்யாத் ப்ரவக்ஷ்யாமி கௌமாரம் வ்ரதமுத்தமம் |

ஐஶ்வர்யம் ஜயஸந்தாநாயுஷ்ய விஶேஷாப்திதாயகம் || 58 ||

க்ருத்திகாஸு ஜநிஷ்டாயாம் தஸ்யா நாம்நாயமாக்யத: |

ஸர்வே ஸுப்ரஹ்மண்யமாஸேஷு க்ருத்திகேஷ்வேதாவகம் வ்ரதம் ||

தேநைவ தோஷாவிஷ்டம் தேவஸ்ய ஸ்ரீ கிரிஜாஸுத |

இதி ப்ராஹு: ததைவாக்ஷய்யாயாஸ்ஸாநம் யதாவிதி | 59

ஓ புத்திர! அதிதிக்காக நாரதரால் உபதேசிக்கப்பட்டதும் ஸுப்ரம்மண்யப் பிரீதிகரமுமான குமார விரதத்தைச் சொல்லுகிறேன் கேள். கார்த்திகை மாஸத்தில் பௌர்ணமி தினத்தில் விடியற்காலம் எழுந்து வேறுசிந்தையில்லாமல் ஓ தயாமூர்த்தியாகிய ஸுப்ரம்மண்யரே! குமார வ்ரதம் செய்யப்போகிறேன். அதினால் தேவரீர் ஸந்தோஷமடைந்து ஓ பார்வதி புத்ர! எனக்கு வேண்டியவற்றை யளிக்கவேணும் என்று பிரார்த்தித்து மௌனத்துடன் விதிப்படி ஸ்நானஞ்செய்ய வேண்டும். 60

ஷஷ்டாரம்ப்ய ததா விம்ஶதீர்த்தேஷு க்ரமாத் ।
ப்ரதக்ஷிண த்வாதஶம் குர்யாத் த்வாதஶ ஸம்க்யகைஃ ॥

பிறகு ஷஷ்டியாரம்பம் துடங்கி முறையே இருபத்தொரு தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்து குகனுக்கு பன்னிரண்டு பிரதக்ஷிணம் செய்து பன்னிரண்டு நமஸ்காரங்களையும் செய்யவேணும். 61

ஶூராக்யவ்ருக்ஷகம் ஸம்சேதகஸ்தலதோ ம்ருஜம் ।
சக்ரம் ஶக்திம் ஶூலம் காஶித்வா விதாய தத: । ௬௨
த்ரியாகாரமேவ தத் த்வா காயயாம் த்வாதஶவந்தயேத் ॥

ஶூரபத்மன் மாமரமாய் நின்றதை ப்ரபுவறிந்து அம்மாமரத்தைச் சேதித்தவிடத்திலிருந்து மண் எடுத்து சக்ரம், ஶூலம், வேல், இந்த மூன்று ரூபமாகச்செய்து அவைகளுக்குப் பன்னிரண்டு நமஸ்காரங்களையும் செய்து. 62½

ஶ்ரீ ஸுப்ரஹ்மண்யசைத்யஸ்ய ஸந்நிதாயாம் ப்ரதக்ஷிணம் ।
உபவாஸேந ஸ்வஸ்தா ஸ்வாமி சைவ ஸுப்ரஹ்மண்ய தோரணம் ।
தத்ர ஸ்நாநஸ்வாமிதீர்த்தே தீம் ஸமேவயதாவிதி ॥
ஸௌவர்ண ஸுவர்ணம் ஶம் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யம் ।
தத்ராவாஹயேதேவ காம்ஸம் ஶ்ரீ ஸுப்ரஹ்மணம்
ஜீத் ॥ ௬௩

[illegible] ।
[illegible] 1 [illegible] ।
[illegible] 2 [illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible]
[illegible] ।
[illegible] ॥

---

1 [illegible] 3-வது [illegible] 5-வது [illegible] 15; 16 [illegible]
[illegible] என்று ஆரம்பித்து [illegible] என்று அவஸானிக்கப்பட்ட 10 ருக்குகள்.

3-வது [illegible] 8-வது [illegible] 14, 15 [illegible]
[illegible] + [illegible]
12 ருக்குகள்.

8 வது [illegible] 2-வது [illegible] 1, 2 [illegible]
[illegible] + [illegible] என்று 11 ருக்குகள்

ஆக ருக்குகள் 33

2 [illegible] 1-வது [illegible] + [illegible] என்ற ருக்கு.

[illegible], [illegible] 7-வது கண்டத்தில் 1-வது [illegible] + [illegible] என்றது.

[illegible]

[illegible] + [illegible] என்ற ருக்கு.

[illegible] ।
[illegible] ॥ ௭௦

[illegible] ।
[illegible] ॥ ௭௧

ஒருகுடத்தில் ஜலம் நிறைத்து அக்கும்பத்தை வஸ்திரபுஷ்பாதிகளாலலங்கரித்து அதில் கல்பத்தில் சொல்லியபடி ஸுப்ரம்மண்யரை ஆவாகித்து ஸகலவுபசாரங்களாலும் பூஜித்து ருக்வேதத்தில் முப்பத்திமூன்று ருக்குகளடங்கின குமாரஸூக்தம் என்ற மந்திரத்தை நூற்றெட்டுமுறையும் இன்னமும் ருக்கு யஜுஸ் ஸாமம் என்ற மூன்றுவேதங்களில் பிரதிபாதிக்கும ஸுப்ரமண்யமந்திரங்களையும் ஜபஞ்செய்வித்து உத்யாபனஞ்செய்து அந்த கும்பஜலத்தை தம்பதிகள் அபிஷேகஞ்செய்து பரமசிவத்தின் புத்திரனும், நித்தியகுமாரனும் ஆதிகாரணமூர்த்தியுமான ஸுப்ரம்மண்யப் பிரபுவையும் ஷோடசவுபசாரங்களாலும் ஸந்தோஷிப்பித்துபிறகு திருச்செந்தூரில் வாஸம்பண்ணுகின்ற பன்னிரண்டு தீக்ஷிதர்களை யாராதித்து அவர்களுக்கு ம்ருஷ்டான்னபோஜனாதிகளளித்து அவர்களாசீர்வாதமும் பெற்றுக்கொண்டு அன்றுமுழுதும் வ்ரதமாகவிருந்து மறுநாள் பாரணைசெய்து ஸுப்ரம்மண்ய நாமங்களை கீர்த்தனம் செய்து இப்படியே பன்னிரண்டு மாஸங்களளவும் வ்ரதமிருந்து பதிமூன்றாவது கார்த்திகை மாஸம் பௌர்ணமியன்று கல்பத்தில் சொல்லியபடி லோபமின்றி தசதானங்களைச்செய்து வ்ரதோத்தியாபனமும் நடத்துவையானால் அந்த ஸுப்ரம்மண்யானுக்ரகத்தால் உன்னிஷ்டங்களைப் பெறலாம் ஸந்தேகமில்லை. 71½

[illegible] ॥ ௭௨

க்ஷத்ரியஸ்து வ்ரதீ சைவ புத்ரவாந் ராஜ்யவாந் பவேத் ।
வைஶ்யஸ்து தநவாந் ஸாது புத்ரவாம்ஶ்ச பவேத் த்ருவம் ।௭௩
ஶூத்ரஶ்சைவ புத்ரவாந் ஸௌக்யவாந் பவதி நிஶ்சய: ॥

இப்படி இந்த வ்ரதத்தை பிராம்மணன் அனுஷ்டிப்பதால் ஞானத்தையும் புத்திரர்களையும், க்ஷத்திரியன்செய்தால் புத்திரர்களையும் ராஜ்யத்தையும், வைஶ்யன் ஸம்பத்தையும் புத்திரர்களையும், ஶூத்திரன்செய்தால் புத்திரர்களையும் ஸௌக்கியத்தையும் நடைபண்ணியில் அடைவார்கள். 73½

இதி ஶ்ருத்வாऽதிதிர்தேவீ நாரதாத் வ்ரதமுத்தமம் ।௭௪
யதோக்தம் ஸா க்ருதவதீ தேந புண்யேந ஶௌநக ।
த்ரைலோக்யராஜ்யாதிபதிம் புத்ரம் லேபே ஸவாஸவம் ।
சராசரகுரும் தேவம் ஸாக்ஷாந்நாராயணம் ஹரிம் ।

இவ்விதமாய் நாரதமுனியால் உபதேஶத்தைப்பெற்ற அதிதி தேவியானவள் இந்த ஸந்தான விரதத்தை அம்முனி அருளிச்செய்தபடியே ஆசரித்து அப்புண்ணியவஶத்தால் ஓ ஶௌனகமுனியே! மூன்று உலகங்களுக்கும் ராஜாவான தேவேந்திரனையும், சராசரப்பிரபஞ்சங்களுக்கு ரக்ஷகரான ஸாக்ஷாத் ஸ்ரீமகாவிஷ்ணுவையும் புத்திரர்களாகப்பெற்ருள். 75½

அத்யாபி தேவமாதா ச மஹைஶ்வர்யஸம்யுதா ।௭௫
ஏவம் வ்ரதம் ய: குருதே புத்ரவாந் தநவாந் பவேத் ।௭௬

இந்திரனையும் உபேந்திரனையும் புத்திரர்களாகப்பெற்றஅந்த அதிதிதேவியானவள் மகத்தான ஐஸ்வரியங்களை அடைந்து ஸந்தோஷமாக இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிருள். ஆகையால் இந்த விரதத்தை யார் செய்வார்களோ அவர்கள் புத்திரவானும், தனவானும் பவிப்பார்கள். 76½

[illegible] ||
[illegible] || ௭௭

ரஹஸ்யங்களில்வைத்து மிகவும் ரஹஸ்யமும் பிராயச்சித்த ரூபமும், ஸகலபாபங்களையும் துவம்ஸம்பண்ணுவதுமாகிய வேறு ஓர் இதிகாஸமிருப்பதை ஓ ரிஷிஶ்ரேஷ்டா! இன்னும் சொல்லுகிறேன் கேள். 77½

[illegible] ||
[illegible] |
[illegible]
[illegible] || ௭௯

[illegible] |
[illegible] ||
[illegible] || ௮௦

கௌதமமுனிவர் வியாக்கிரபாதத்தை (புலியைப்போன்ற முழந்தாள்களை) அடைந்து சிதம்பர க்ஷேத்திரத்தில் நடேசருடைய ஆனந்த தாண்டவத்தை தர்ஶித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் அந்நகரில் தானுப்வாஸம்பண்ணிவருகையில் நடேசர் கட்டளையால் அவ்விடம்விட்டு விஜ்ஞையமாகவே ஸகல உலகத்திலும் ஸஞ்சரித்து அங்கங்கேயுள்ள தீர்த்தங்களையும் பார்த்துப் பார்த்து ஸந்தோஷத்துடன் முறையே தாம்ரபர்ணிநதியையடைந்து விதிப்படி அம்மகாநதியை பூஜித்து ஸ்நானம் பண்ணினார். ௮0½

[illegible]
[illegible] || ௮௧

[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible]
[illegible] || ௮௩

ஷிதாஹ்ய க்ஷேத்ரவர்யஸ்ய ஸுப்ரஹ்மண்யஸ்ய மத்யதே || அநு

பிற்பாடு புத்திமானான அந்த கௌதமமுனிஶ்ரேஷ்டர் யாகம்பண்ண ஆசைகொண்டு மனதில் ஸந்தோஷத்துடன் ஸோமாரண்ணியத்திற்கும், ஸுப்ரம்மண்ய க்ஷேத்திரத்திற்கும் மத்திய தேசத்தையடைந்து அவ்விடத்தில் வேதபாரங்கதர்களான அனேக ரிஷிகளை வரவழைத்து அந்தகௌதமமுனி யாகத்தை நடத்தினபொழுது அந்த யாகசாலையின் நடுவில் அந்தமுனியின் புத்திரியாகிய கௌதமியென்ற நதி ஶ்ரேஷ்டையானவள் மகாநதியாய் பக்தியுடன் தனது பிதாவினுபகாரத்திற்காக பிரவகித்துக் கொண்டு ஸமுத்திரத்தை யடைந்தாள். 83½

தத்ராவப்ருத்யஸ்நாநாத்யம் யதாவத்விதவம் ததௌ ஸிதா: ||
வைஷ்ணவீகவரே நித்யம் ஸந்நிதௌ ஸந்ததிஸ்ஸ: ||

அந்த கௌதமமுனிவர் யாகஸம்முமந்தபின் யாகஸாலையில் பிரவகிக்கும் கௌதமி என்ற நதியில் அவபிருத ஸ்நானம் செய்து பதிவுபோல் சிதம்பர க்ஷேத்திரத்தில் நடராஜர் ஸன்னிதியில்சென்று வஸித்தார். 84½

தாம்ரா ஸமுத்ரஸங்கமே ஸோமதீர்த்தே நிமஜ்ஜ்ய ச ||
ஸோமாரண்யே ஸோமநாதம் ஸோமேஶீம் ச ப்ரண
ம்ய ச |
நிமஜ்ஜ்ய விதிநா தத்ர கௌதம்யாம் கௌதமாஶ்ரமே ||
ஜயந்த்யாம் ஸுப்ரஹ்மண்யம் ந லப்ஸ்யதே புநர்பவம் ||

தாம்பிராநதி ஸமுத்திரத்தோடு ஸங்கமிக்கின்ற தீர்த்தத்திலும் ஸோமதீர்த்தத்திலும் ஸ்நானம்செய்து ஸோமாரண்யத்தில் ஸோமநாதனையும் ஸோமேஶி அம்பாளையும் நமஸ்கரித்து விதிப்படி கௌதமி நதியில் ஸ்நானம்செய்து கௌதமாஶ்ரமத்தில் வஸித்து பிறகு ஜயந்தீ என்னும் திருச்செந்தூரில் ஸுப்ரம்மண்யரை யாராதிப்பவர்கள் மறுபிறப்படையமாட்டார்கள். 86½

ஸுராஸீ ஸார: கஶ்சித் வேதஶாஸ்த்ரவிசக்ஷண: ||
ஸர்வபூர்த ஸததம் ஶிவம் ஸுதஸாஷ்டாங்க ஸேவா
ரத: |

को ब्रह्मा को हरिः को वा हरः को वा शतक्रतुः ॥८७

स्कन्दः को गणपः को वा ईशित्वं प्राप्तवान् वद ॥८८

முன்னொரு காலத்தில் ஒரு பிராம்மணன் வேதம் ஶாஸ்திரம் இவைகளையும், குரு முதலானவர்களையும், தூஷித்து பிரம்மா என்பவன் யார், விஷ்ணு யார், ஶிவன் யார், எவன் இந்திரன் எவன் ஸுப்ரம்மண்யன், யார் கணபதி என்று நாள்தோறும் சொல்லிக்கொண்டுவந்தான். 88½

को यमो वरुणः को वा रुद्रः को यक्षनायकः ॥८९

अदृश्यो दृश्यते यत्तु तत्स्वभावो न संशयः ।
यन्न दृष्टं हि तत्सर्वं मिथ्यैव न संशयः ॥९०

स्वर्गं वा नरकं वापि को गत्वा तत्र संस्थितः ।
कथयामास वार्तां वा वदन्नेवं दिने दिने ॥९१
कदाचिदपि देवानां न चकार नमस्क्रियाम् ॥९२

இன்னும் இயமன், வருணன், ருத்திரன், இவர்கள் யார்? குபேரன் எங்கே நாம் எவைகளை அதிஶயமாகக் காண்கிறோமோ அவையெல்லாம் ஸ்வபாவமேயல்லது வேறு ஒன்றுமில்லை. நாம் எதைக்காணவில்லையோ அவையெல்லாம் பொய். இதற்கு ஸம்ஶயமேயில்லை. ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும்சென்று அங்கு நடந்த விஶேஷங்களை யார் என்னிடம் சொன்னார்? என்று இவ்விதமாக நாள்தோறும் பிதற்றுவதேயன்றி தேவதைகளை ஒருபொழுதும் நமஸ்கரிக்கிறதேயில்லை. 91½

केनचित्त्वथ कालेन दिष्टान्तं प्राप्तवानसौ ।
नीतो यमभटैः क्रूरैर्वैवस्वतपुरं ययौ ।
स्थित्वा तत्र महामायां यमराजेन चोदितः ॥९३

𑌸𑌾 𑌸𑌾 𑌨𑌿𑌰𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌨𑌿 𑌸𑌾𑌗𑌰𑌿𑌭𑌿𑌃 ।
𑌅𑌨𑌨𑍍𑌤𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌶𑌿𑌭𑌿𑌃 𑌕𑍁𑌠𑌾𑌰𑌂 𑌨𑌰𑌕𑌯𑌾𑌤𑌨𑌾𑌃॥௯௩
𑌸𑌾𑌸𑌮𑍇𑌷𑍇𑌣 𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌸𑍌 𑌸𑌂𑌸𑌾𑌰𑍇 𑌗𑌰𑍍𑌦𑌭𑌤𑌾𑌂 𑌗𑌤𑌃॥௯௪½

*சிலகாலம் சென்றபின் அந்த பிராம்மணன் காலவசத்திஞல் மரிக்க யமபடர்கள் அவனை யமலோகம் கொண்டுபோய் சேர்க்க வே அந்த யமன் அவனை வெகுவாக அதட்டி மகாபாபிகள் துயரமுறும் நரகங்களில் தள்ளினபிறகு அந்த ப்ராம்மணன் நரக யாதனைகளை யனுபவித்து பின்னும் கர்மசேஷத்தால் பூமியில் கழுதையாகப் பிறந்தான்.* 94½

𑌸𑌚𑍋𑌽𑌨𑍇𑌕𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌷𑌾𑌣𑌿 𑌕𑌾𑌨𑌨𑍇𑌷𑍁 𑌚𑌰𑌨𑍍𑌨𑌿𑌤𑌃।
𑌦𑍈𑌵𑌾𑌤𑍍 𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌶𑌰𑌾𑌵𑌶𑍍𑌯𑌵𑌿𑌯𑍋𑌗𑌤𑌃।
𑌶𑌰𑌣𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥
𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑌾𑌯𑍁𑌜𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌦𑌿𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌗𑌣𑌸𑍇𑌵𑌿𑌤𑌃।
𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌰𑌗𑍁𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌃॥ ௯௬
𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌯𑌾𑌨𑌂 𑌸𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌜𑌗𑌾𑌮 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌦𑌨𑌮𑍍॥௯௭½

*கழுதைப்பிறப்பிலும் வெகுகாலம் காடுகளில் திரிந்து தெய் வாதீனத்திஞல் திருச்செந்தூரில்வந்து இறக்க அந்தப் புண்ணிய வசத்தால் பரிசுத்தனும் திவ்யஞானத்தைப்பெற்று ஸாக்ஷாத் ஷண்முகப் பிரஸாதத்திஞல் தேவமாதர்களால் ஸேவிக்கப்பட்டு திவ்யாபரணம்பூண்டு கற்பகமலர்மாலைகள் தரித்து ஸூர்யப்பிர காசமான விமானத்திலேறி பிரம்மலோகம் சென்றான்.* 97½

𑌵𑌿𑌸𑌰𑍍𑌗𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌦𑍈𑌵𑌾𑌤𑍍
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌸𑌮𑌵𑌾𑌪𑍍𑌯 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ।
𑌵𑌿𑌮𑌾𑌨𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌸𑍁𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌜𑌗𑌾𑌮 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌪𑌦𑌂 𑌸𑌦𑍈𑌵 ॥ ௯௮½

*தெய்வாதீனத்தால் திருச்செந்தூரில்மரித்த கழுதை அந்த புண்ணியத்திஞலே விமானமேறி பிரம்ம ஸாமீப்யம் பெற்ற*

தென்றல் இந்த லிங்கஸ்தலத்தை சேவியாத மனுஷியர்கள் யார் (அனைவரும் சேவிக்கத்தக்கதாயிடுமென்று கருத்து.) 94½

இதி ஸ்ரீ ஸ்காந்தே [illegible]
[illegible]
ஸ்ரீ ஜயந்தீவராஹமாஹாத்ம்யே
பஞ்சதசோऽத்யாய:

பதினைந்தாவது அத்தியாயம்
முற்றிற்று.

---

## அத ஷோடசோऽத்யாய:

வ்யாஸ: —

(மூலம்)

[illegible] ।
[illegible] ॥ 1

வியாஸர் சொல்வது ;—

(உரை)

யாதொரு கதையை கேட்டவுடன் ஸகல பாபங்களும் அகன்று விடுமோ அப்பேர்ப்பட்ட கதையை அமிருதம்பொழியுமாறு உனக்கு மறுபடியும் சொல்லுகிறேன். 1

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible]

[illegible Grantha verse] |

[illegible Grantha verse] ॥ ७ ॥

[illegible Grantha verse] |

[illegible Grantha verse] ॥ ८ ॥

[illegible Grantha verse] |

[illegible Grantha verse] ॥

முன் ஒருகாலத்தில் மகாபாபியான ஒரு துலுக்கன் கப்பலேறி ஸமுத்ரத்தில் ஜீவராசிகளைக் கொன்றும், கத்தி முதலிய ஆயுதங்களை தரித்து கப்பலில் யாத்ரை செய்யும் வியாபாரிகளை அடித்து அவர்களுடைய பணத்தைப் பறித்தும் பணம் ஸம்பாதிப்பதிலேயே நினைவுவைத்து கொடியபாபங்களைச் செய்வதும் துஷ்டர்களுடன்கூடி ப்ரதிதினமும் ப்ராம்மணர்களையும் தேவதைகளையும் தூஷித்து ப்ராம்மணர்களைக் கண்டவுடன் தயவின்றி அவர்களையும் எண்ணிறந்த பசுக்களையும் கொல்வதும் பரிவாரங்களுடன் மாம்ஸங்களைத் தின்பதுமாகவே காலம்கழித்தும் திருப்திவராமல் நாள்தோறும் இவ்விதமாய் பாபங்களை செய்யுமந்த துலுக்கன் ஒருக்கால் திருச்செந்தூரில்வந்து அவ்விடத்தில் த்ரிஸ்வதந்த்ர முனீஸ்வரர்களால் ஸேவிக்கப்பட்டு திவ்யமங்கள மூர்த்தியாய் ஸான்னித்தியம் செய்யும் ஸுப்ரம்மண்யரைப் பார்த்து இது யார்? என்று அவர்களைக் கேட்டான். 8

[illegible Grantha verse] |

[illegible Grantha verse] ॥ १० ॥

[illegible] ॥ ௧௦

இந்தப் ப்ரகாரம் தூராத்மாவான தூலுக்கனால் கேழ்க்கப்பட்ட நியமநிஷ்டர்களான த்ரிஸ்வதந்த்ரர்கள் தயவுடன் அவனைப்பார்த்து இந்தமூர்த்தி மகேஸ்வாருடைய திருக்குமாரனும் தேவசேனைகளுக்கு தலைவரும் திதியின் புத்திரர்களான அஸுரர்களைக் கொன்றவரும், பக்தர்களுடைய துக்கத்தைப் போக்கடிப்பவருமாகிய ஸுப்ரம்மண்யர் எனத் தெரிவித்தார்கள். 10

வ்யாஸ: —

[illegible] ॥ ௧௧

[illegible] ॥ ௧௨

[illegible] ॥ ௧௩

[illegible] ॥

வியாஸர் சொல்வது:—

இப்படி முனிவர்களால் சொல்லக்கேட்ட பாபியாகிய தூலுக்கன் மகேஸ்வரன்யார்? தேவர்கள்யார்? அஸுரர்கள் யார்? என்று அந்தத்ரிஸ்வதந்த்ர முனீஸ்வரர்களான ப்ராம்மணோத்தமர்களை அதட்டி ஸுப்ரம்மண்யனையும் தூஷித்து சீக்கிரத்தில் வாளை கையிலெடுக்க, அதைக்கண்ட அந்த ப்ராம்மணர்கள் தடுத்தும் மதியாமல் ஸுப்ரம்மண்யருக்கு நேராக ஓடி கால்தடுமாறி கீழே

விருந்ததால் அந்தக்ஷணம் அவனுயிர் நீங்கவே இந்த பாபியை யமலோகம் சேர்க்க யமதர்ம்மராஜனால் அனுப்பப்பட்டு பயங்கரர்களான யமதூதர்கள் வந்தார்கள். அவர்கள் ஆங்கு வந்திருந்த ஸுப்ரம்மண்ய தூதர்களால் அடிபட்டு மறுபடியும் யமலோகம் சென்று அந்த யமதர்ம்மராஜனிடத்தில் தங்கள் வருத்தமடைந்ததைத் தெரிவித்தார்கள். 15

தத்³வ்ருத்தாந்தம் யம: ஶ்ருத்வா ஸஹஸ்ரைர்தூ³தஸம்வ்ருத: |
ஸிம்ஹாஸநாத்ஸமுத்தா²ய ஶீக்⁴ரம் வாயுஸமாநேந ஜவாத்
ஸாத³ர: ||௧௬

தத்ர த்³ருஷ்ட்வா ஷடா³நநம் ஸ்தி²தம் ருஷிஜர்வ்ருதம் |
அக³ஸ்த்யாதி³மஹர்ஷீந்த்³ரைர்யோகீ³ந்த்³ரைர்யோக³ஸம்பந்ந
ரைர்ணை: ||௧௭

ஸநந்த³ஸநகாத்³யைஶ்ச ஸேவிதம் வீதகல்மஷை: |
வ்ராத்யாநாம்ஶாந்தம் ப்³ரஹ்மதே³வாதி³ ஸாஸுரஜித்
தம் ||௧௮

ஸேவ்யம் விபு⁴ம் தம் ஸுரஸங்க⁴ஸங்க⁴ம்
ஸுராரிவம்ஶக்ஷயகாரிணம் ஸதா³ |
ஷண்ணாஸ்யம் த்³ருஷ்ட்வா ஜக³தே³ககர்த்தா
ஜகா³த³ வாக்யம் விநயாவநம்ர: || ௧௯

தூதர்கள் சொன்னதைக்கேட்ட யமனும் காற்றடிபட்ட மேகம்போல சீக்கிரத்தில் அவர்களுடன் திருச்செந்தூரில் வந்து அவ்விடத்தில் அகஸ்தியர் முதலிய மகர்ஷிகளாலும் மகாபரிவ்ராஜகர்களும் ஞான நிஷ்டர்களுமாகிய ஸனந்தஸனகாதி யோகிகளாலும் தேவர்களாலும் ஸேவிக்கப்பட்டவரும் அஸுரர்களை யழித்தவரும் திரிஸ்வதந்திரர்களால் சூழப்பட்டு சின்முத்திரையுடன் வீற்றிருப்பவருமான ஸுப்ரம்மண்யரை தரிசித்து நமஸ்கரித்து வணங்கி தெரிவித்ததாவது. 19

யம: —

த்வம் தே³வதே³வாதி⁴ஸுரேஶ்வரோऽஸி
த்வம் தே³வதே³வாம்ஶோத்³ப⁴வஸேவ்யோऽஸி |

ஸ்வம் வேதவேதாந்தநிரூபணாய
தஸ்மாத்வியம் ஸ்வாம் ஶரணம் ப்ரபத்யே ‖ ௨௦

**யமன் ஸ்துதித்தல்:—**

ஓ ஸ்வாமி! தேவர்களுக்கு ஸுகத்தையும், அஸுரர்களுக்கு துக்கத்தையும் அளிப்பவரும், வேதவேதாந்தங்களாலும் அறியப்பொருளும் ஆகிய உம்மை ஶரணமடைகிறேன். 20

ஸ்வத்பக்தியுக்தः பதிதோபி மூகோ
வித்யா ஸ்வஶாஸ்த்ரா ஸவிசேஷ ஸுவா ।
ஸம்யாஸ்த வஸுதைஜோக்கா லோகத்ரயேஷு
தஸ்மாத்வியம் ஸ்வாம் ஸஜதே நகோ வா ‖ ௨௧

ஸ்வாமேவ ஸுவா விஶ்யாஸ்ஸ்வாः
தேவாஸ்வதிம் தைத்யகுலாநி ஹத்வா ।
ஸ்வர்கே ஸுரேஸா ஸுகரஸ்ய தேதகஸாஸ்ம
யாகா ரோபிஷிஷ்மரா நித்யம்
தேவேவஸைவ ஸ்வதாஸிவந்த்ரம்
தஸ்மாத்வியம் ஸ்வாம் ஶரணம் ப்ரபத்யே ‖ ௨௨

பதிதனானாலும் ஊமையானாலும் தேவரீரிடம் பக்தி செய்வானானால் ஸகலகல்விகளையும் கற்று ஸுகமாக வாழ்ந்து மூவுலகிலும் பூஜ்யனாகிறான். அப்பேர்ப்பட்ட உம்மை ஶரணமடையாதவர் யார்? எல்லா தேவர்களும் தேவரீரை ஶரணமடைந்து அனுக்ரகத்தைப்பெற்று அதனால் அஸுரர்களைவென்று புண்ணியவபாத்காலப்பட்டுடையத் தருந்த தங்களுலகில் அப்ஸரஸ்திரீகளுடன் ஸுகமாக ரமிக்கின்றார்கள். அந்த ஸகல தேவர்களும் வணங்கும் உமது திருவடிகளில்யானும் ஶரணமடைகிறேன் 22½

ஶ்ரீமத்ப்ராதுர் ப்ரியஸம்பந்தநாஸ்மேவ
ரஜநாநாத்ராः ஸமா காமராப்தே ‖ ௨௩
ஜநாநந்தம் ஜநாஸ்ரதாம் வரிஷ்டம்
பாவாநாமிவேஷ்ட நாமேஜரஸஹ ।
தஸ்ஷம் ஸாவம் தமேதா ஸ்வாதத்ரேஷ நிஷ்வாத
வ ‖ ௨௪

பர்வதராஜன் புத்ரியாகிய பார்வதியின் செல்வக்குமாரனும் அக்ஞானமாகும் இருள்நீங்க ப்ராதக்காலம்போல் ப்ரகாசமான ஞானத்தையளிப்பவரும் ஞானவான்களுக்குள் சிறந்தவரும் பாபிகளுக்கெட்டாதவருமாகிய தேவரீரை சரணமடைகிறேன் என்று ஸ்துதித்து ப்ரபுவின் பக்கத்திலிருந்தான். 24

ஸூத: —

தச்ச்ருத்வா ஸ்தோத்ரமேவாஸௌ ஸ்கந்தராஜஸமோதித:|
ஸுப்ரஸந்நக்ருதஜ்ஞம் தம் ஶிஷ்யம் ப்ராஞ்ஜலிமாஸ்திதம் ‖ ௨௫
ஸ்தவம் த்ருஷ்ட்வா ஷண்முகோ தேவோ நாகவக்த்ர
ஸோதர: காருண்யவாந் ஸ்வயம் |
ஸம்ப்ரீதஸ்ஸந் ஷண்முகோ ஶம்புபுத்ர:
வாக்யம் ப்ராஹ ஶ்ரீதிவ்யவபு: ஜகாத ‖ ௨௬

குகர் சொல்வது:—

ஓ மகாபுத்திமானுன பித்ருபதியே! உன் ஸ்தோத்திரத்தினுல் ஸந்தோஷமடைந்தேன். நீ வந்த காரியத்தை விஸ்தாரமாகச் சொல்லென்று ஸுப்ரம்மண்யர் ஆக்ஞாபிக்க அந்தக்ஷணமே ஸூர்ய புத்திரனுன இயமன் தன் காரியத்தை நினைத்து ஸம்புமைந்தனுன ஷண்முகனைப் பார்த்து பக்தியுடன் சொன்னதாவது. 26

யம: —

நியந்த்ருத்வம் ஹவத்தத்வா ப்ராணிஸம்யமகாரிணி |
கர்மஸு ப்ரஜாநாம் ஸர்வாஸாம் கர்மாத்யக்ஷத்வம்
நிரூபிதம் ‖ ௨௭

பாதயிஷ்யாமி நரகே பாபிந: க்ரூரகாரிண: |
த்ரிவிஷ்டபம் ப்ராபயாமி ஸததம் புண்யகாரிண: ‖
